ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்ல ஞான விகடமும்,
ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும்
நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுக ௵ மார்கழி ௴ 1௳	இதழ் 93.
Vol. 8.	1933-ம் ௵ டிசம்பர் ௴ 15௳	No. 93.

ஆனந்த  தர்சனம்

"வாயினல் பாடி மனத்தினல் சிந்தி"ப்பதற்கு, மார்கழி மாதம் உத்தமமான மாதமாகும். இம்மாதத்தில் ஸகல தேவாலயங்களிலும் உத்ஸவங்கள் நடைபெறும். பக்த கோடிகள் யாத்திரா ஸ்தலங்களுக்குத் திரண்டு வருவார்கள். அதிகாலையில் ஸ்நானமும், பகவத் பூஜையும், பொங்கல் ஆராதனமும், திவ்யப் பாசுரங்களால் இறைவனை வழிபடுதலும்; கோவில்களில் பகவானுடைய அற்புத ஸேவையுமாக அத்யானந்த பரவசம் நல்கிடும். அனுபவிக்கத் தெரிந்தவர்கள் பகவத் குணானுபவங்களில் ரமித்து ஆனந்த மெய்துவர். மார்கழி மாதமே ஒரு உத்ஸாக பூரிதமான மாதமாகும்: நாஸ்திகம் பேசி நாத்தழும்பேறினரும் இம்மாதத்தில் ஆஸ்திக சிரோன்மணிகளாய்த் திருந்தி விடுவர். நித்தமும் ஆலயம் செல்வதை ஒரு கடமையாகக் கொள்ளாத பக்திஹீனர்களும் பரவசர்களாய் இம்மாதத்தில் கோவிலுட் புகுவர், ஈசுவரத்தியானமே பரம ஸஞ்சீவியா யிருப்பதால் நாமும் இம்மாதத்தில் பகவானுடைய திவ்ய மங்கள ரூபத்தை ஸதா சிந்தித்து ஸர்வத் பக்தி செய்து ஆநந்த பரிதர்களாவோமாக.

ஃ

"ஆலயந்தோறும் அணிபெற விளங்கும் தெய்விக வடிவம்" என்றார் பாரதி. அமிர்தமானாலும், அதை வைத்திருக்கும் பாத்திரம் அசுத்தமா யிருக்கலாமா? நிர்மல சித்தர்களாயினும், நீரில் ஸ்நானம் செய்து சுத்த சரீரிகளா யிருப்பது நன்றன்றோ? அதுபோல், எவ்வளவு பக்திமான்களாயினும் ஆலத்திற்குச் சென்று அங்கு பகவானை வணங்கி வருவதே ஸர்வோத்தமம். சிலர் என்றோ ஒரு பொழுதில் ஆலயத்தை நாடுவதும், வேறு பலர் விசே

ஷித்த உத்ஸவ காலங்களில் மட்டும் திருக்கோயிலை ஞாபகத்திற்குக்கொண்டு வருவதுமா யிருப்பர். இத்தகையோர் முக்தி யடைய அனந்த கோடி ஜென் மங்கள் செல்லும். தங்களின் கடமையை நித்யமும் தொடர்ந்து வழுவின்றிச் செய்யாதவர் கடைத்தேறார்.

ஃ

"ஜனன மரணம்" எல்லாத் துன்பங்களிலும் பெரிதான இது நீங்கினல் முக்தி பெற்றதுபோலாகும். இது கொஞ்சத்தில் ஒழியுமா? ஜீவனனது கர் மங்களைச் செய்து கணக்கற்ற ஜன்மங்களை எடுப்பதாய் சாஸ்திரம் கூறுகிறது. கர்மம் செய்யாமலிருந்தால் ஜன்மமில்லை. கர்மத்தைச் செய்யாதிருக்க முடியுமா? நினைப்பது கர்மம், சொல்வது கர்மம், செய்வது கர்மம். ஒவ்வொரு கர்மத்துக்கும் பலனுண்டு. அதை யனுபவிப்பதற்கும் ஜன்மமுண்டு. இப்படி எத்தனையோ கோடி ஜன்மங்களை யெடுத்த இந்த ஜீவன் இன்னும் எத்தனை கோடி ஜன்மங்க ளெடுக்குமோ தெரியாது. இதற்கு முக்தி எப்போது கிடைக்குமோ யாரால் நிர்ணயிக்க முடியும்? ஆயினும், முக்திக்கு ஸாதகமான ஸத் கருமங்களைமட்டும் ஸதா செய்து வரவேண்டியது நமது கடமை.

ஃ

"நான் என்பது மருள்" ஓர் ஸத்குருவை ஓர் சிஷ்யன் ஞானேபதேசத் தின் பொருட்டு ஆசிரயித்தான். குரு வெகு காலம் மௌனம் சாதித்து வந்து, தமது அந்திய காலத்தில் சிஷ்யனை அழைத்து "நான் போனல் அனுக்கிரகம் உண்டாகும்" என்று கூறினர். சிஷ்யன் இது கேட்டுப் பொருள் அறியாது கலங்கி நிற்க, குருவானவர் பரம கருணையுடன் "நான்— என்பது மருள்; அந்த மருள் ஒழிந்தால் அருளே மிஞ்சும்" என்று தமது ஸூக்ஷ்ம வாக்கியத்தைச் சற்றே விரித்துரைத்துத் தெளிவித்தார். நான் என் கிற அகங்காரம் நீங்கி, யாவும் பகவத் ஸ்வரூபமாய் அவரது ஸங்கல்பமாய்க் கருதும் பக்குவம் பெறவேண்டும்.

ஃ

"ஆத்ம ஞானத்தை யறிவதே முக்தி மார்க்கம்." ஞானத்தால் பகவா னைப் பூஜை செய்வதே ஆனந்தமாகும். ஸந்தோஷமென்கிற புஷ்பஹார த்தை ஞானத்திலிருத்தி ஆனந்திப்பதே மகோந்நத பூஜையாகும். ஒரு நாளெல்லாம் கண்ணை மூடிக் கொண்டாலும் தெய்வம் பிரத்யக்ஷமாகாது. பட்டை பட்டையாய் விபூதியைக் குழைத்து தேகாத்யந்தம் பூசிக்கொண்டா லும் கைலாஸ நாதர் ஓடி வரார். வித வித புஷ்பங்களை எடுத்து அட்ட ஹாஸத்தோடு அர்ச்சித்து ஆர்ப்படிக்கினும் ஆதி பகவன் பேசார். நிர்மல சித்தமும் சுத்த ஹிருதயமும் உள்ளவர்களுக்கே பகவத் ஸ்வரூபம் விளங்கும். பரமாத்மாவை யடைய விரும்புவோர் தாமஸாதி குணங்களைத் தியஜிக்கக்கட

ஒரே மனிதர் ஒரே காலத்தில் பொது ஜனங்களால் தெய்வமாகக் கொண் டாடப் படுவதலும், மற்றொரு காலத்தில் நாதியற்றுக் கிடப்பதும், பிறிதொரு காலத்தில் ஜனங்களால் விரட்டி யடிக்கப் படுவதும் பொதுத்துறைகளில் சகஜமாக நடக்கக்கூடியது தான்.

வர். ஆதியந்த மில்லாத பரமனை ஞானத்தாலன்றி மற்ற வழியால் காண ஹேதுவில்லை.

ஃ

"வர்ணம்" வர்ணத்தில் பலவித முண்டு. நீலம், சிவப்பு, பச்சை, மரகதம், மஞ்சள், கருப்பு இந்திர நீலம், வெண்மை பழுப்பு இவை முதலிய வர்ணங்களை உலகத்தில் காணலாம். இவைகளில் களங்கமுண்டு. சுத்தமான வர்ணம் எது சொல்வீர்களா? அகத்திலும் புறத்திலும் ஒரேவிதமாயிருக்க வேண்டும். நெருப்பிலும்: நீரிலும். காற்றிலும், பனியிலும், பகலிலும், இரவிலும், நிறத்திலும்: கனத்திலும் மாறுதிருக்கக்கூடிய வர்ணத்தை யல்லவோ களங்க மற்றதெனக் கூறலாம். அதன் பெயரென்ன வென்று கேட்பீராகில் அதுதான் ஸுவர்ண மெனப்படும். "தங்கமான மனிதர்" என்று ஒருவரைக் குறித்துச் சொல்வதும் ஸுவர்ணத்துக்குள்ள சிலாக்கியத்தை மதித்தேயாம்.

ஃ

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாள்" மனத்தில் உண்மை யன்பு இருந்தால் அது எவ்விதமும் தன்னைக் காட்டிவிடும். கோயிலில் பகவானை ஒரு முறை கண்கள் குளிர சேவித்தும் போதாமல் சுற்றிச் சுற்றி வந்து தம்மையே மறந்த நிலையில் மீண்டும் மீண்டும் சேவித்துப் பரவசமடையும் தன்மை அற்புதமன்றோ? பெருத்த ஜனத்திரளையும் அவஸ்தையையும் அந்த அன்பு கவனியாமல் பகவத் தரிசனமொன்றே நாடி நிற்கின்றது. ஒவ்வொருவருக்கும் இயற்கையிலேயே தெய்வ பக்தி அமைந்துள்ளது. ஆயினும் அது குறித்த ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் வெளிப்பட்டு உள்ளடங்கி நிற்கின்றது. அன்புள்ள ஸ்ஹோதரன் ஒருவன் இருந்தால் ஸஹோதரிக்கு உண்டாகும் மகோத்ஸாகத்துக்கு அளவுண்டோ? தன் ஸகோதரனுடைய தைர்யத்தையும், ஸத்யத்தையும், உல்லாஸகரமான ஸல்லாப வார்த்தைகளையும், அவனிடமுள்ள சுகுணங்களையும் கண்டு ஸகோதரிக்கு ஜனிக்கும் பிரீதியை நம்மால் வர்ணிக்க முடியாது. ஐசுவரியம் கீர்த்திகளைவிட அவனுடைய அன்புள்ள ஸ்நேகமே உயர்ந்தது. ஸகோதரனுக்குத் தகுந்தாற்போல் ஸகோதரி கிடைப்பாளாயின் அவனுக்கு உண்டாகும் ஆநந்தத்துக்கு அளவில்லை. ஸத்குண சீலர்களாயும், ஸ்நேகம் தயையோடு கூடியவர்களாயுமுள்ள ஸகோதர ஸகோதரிகள் ஒரு கிரகத்துக்கு சந்திரப்பிரபையைப் போல் விளங்குவர். இத்துடன் பகவத்பக்தியும் சேர்ந்துகொண்டு பிரகாசித்தாலோ?

ஃ

"குணமே பூஷணம்" சவாரி செய்யும் குதிரை முரடா யிருக்குமாயின் எஜமான் அதைக் கண்டு மகிழ்வானு? எல்லோரும் குணவந்தர்களாக முடியுமா? பூர்ணகுண ஸம்பன்னர்கள் சிலரே யிருப்பார்க்ள். குணத்தில் அநேக

கஷ்டத்தைச் சமாளிப்பதுதான் அழகு. இந்த அழகைக் காண விரும்பினுல் கல்யாணம் செய்துகொண்டு பார்க்கவேண்டும். விவாக மில்லாதவன் சொற்ப கஷ்டத்தையும் பிரமாதமாகப் பேசுவான். ஒரு பெண்ணுக்குப் புருஷனுக வாழ்வோன் எல்லா சோதனைகளையும் சகித்துப் பொறுமையாக இருப்பான்.

விதமுண்டு. பூலோகத்தில் சில இடங்களில் ஸம பூமியாயும், இன்னும் சில இடங்களில் குன்றுகள், மலைகள், மைதானம், கடல், தீவுகள், நதிகள், நாடுகள், அரண்யங்களாயும் பகவானால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்விதமே, ஜன ஸமூகத்திலும் குணத்தை நானுவிதமாய்ப் பங்கிடப்பட்டிருக்கிறது. குண பேதத்தால் ஜாதி வித்தியாஸங்களும், மத பேதங்களும் உண்டாயின. ஸத்குணமென்னும் மகா ரத்தினத்தைப் பெற்றிருப்பவர்களே நரோத்தமர்களெனப்படுவர். மனிதர்களின் ஸர்வோத்கிருஷ்டமான குணங்கள் விநயத்தால் வெளிப்படுகிறது. மனிதர்களுக்குக் குணமே பூஷணம். நற்குணமானது தெய்வ பக்தியுடன் கூடியிருந்து பரிமளம் வீசும்.

ஃ

"ஆசை யுண்டாயின் அவஸ்தையு முண்டு" ஆசையை நிவர்த்திப்பது எல்லோராலும் ஸாத்தியமன்று. மகா புத்திமான்களும் சிற்சில ஸமயங்களில் ஆசைக்கு வசமாகிறார்கள். லக்ஷத்திலொருவர் மனதை யடக்கி ஆசையை நாசம் செய்வார். ஸ்ரீராமபிரான் தம்பியோடும் மனைவியோடும் வனவாஸம் சென்ற காலத்தில் மார்க்காயாஸத்தால் ஸீதாதேவி வாடி நித்திரை செய்தாள். ஸ்ரீராமர் அவள் தலையைத் தம்வடிமீது வைத்துக்கொண்டிருந்தார். தீர்த்ததாகம் உண்டாயிற்று. நித்திரையிலுள்ள மனைவியின் தலையை லக்ஷ்மணன் மடியில் வைத்து நீரைத் தேடி நடந்தார். அதிரூப சௌந்தர்ய சாலியான ஜகன் மாதா ஸ்வர்ண காந்தினியாய் விளங்கினாள். அவள் மேற்போர்வை காற்றில் ஒதுங்கிற்று. லக்ஷ்மணன் அதைக் கண்டதும் தன் கண்களை மூடிக்கொண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டான். ஸ்ரீராமன் தாக விடாய் தீர்ந்து வந்தார். ஸீதையின் நிலைமையையும் லக்ஷ்மணனுடைய இருப்பையும் அறிந்தார். லக்ஷ்மணனைச் சோதிக்க வெண்ணி ஒரு பக்ஷி ரூபமெடுத்து அவனிருந்த இடத்திலுள்ள மரத்தின்மேல் ஏறி, "ஹே ராஜகுமாரா, உன் மடியில் படுத்திருக்கும் ஸ்திரீயை நீ இச்சிக்கிறாயென்று எண்ணுகிறேன் என்றது. லக்ஷ்மணன் தலையை மேலெடுத்துப் பார்த்து பாபிஷ்ட ஜந்துவே! என்ன சொன்னாய்? ஜகன் மாதாவிடம் என் மனம் செல்லுமா? முறையின்றி நடக்கும் உன் ஜாதியின் ஸ்வபாவத்தை என்னிடம் காட்டுகிறாயா?" என்றான்.

பக்ஷி:—ராஜ புத்திரா, அலர்ந்த செந்தாமரை மலர்போன்ற அவள் முக மண்டலமும், காந்தி வீசும் சரீரமும், ஒன்றோடொன்று பொருந்தியுள்ள அவயவங்களும் பெற்ற ஸ்திரீ ரத்தத்தை நீ இச்சிக்காம லிருப்பாயோ? நான் நம்பமாட்டேன்.

லக்ஷ்மணன்:—ஹே நீச ஜாதியே! மறுபடியும் துர்வசனங்களை வழங்குகிறாயா? பூலோகத்தை ஒரு நொடியில் அழிக்கும் வல்லமையுள்ள ஸமுத்தி

உலக வாழ்க்கை மனதைக்கெடுத்து, டம்பம், இறுமாப்பு, வீணெண்ணம், பொறாமை, பேராசை இவற்றை வளர்க்கின்றது. உடை, நடை முதலிய படாடோபங்களிலே புத்தி நாடுகின்றது. பின்பு இவற்றினாலெல்லாம் மனதுக்கு சுக முண்டாகாததைக் கண்டு, கட்டுக் கதைப் படிப்பதிலும், தூஷிப்பதிலும் புத்தி செல்லுகின்றது.

ரம் என் தன்னெல்லையை விட்டு வராமலிருக்கிறது? என் தாய் ஸுமித்திரையல்ல; இங்கே படுத்திருக்கும் ஜானகியே என் மாதாவென்று நினை. இனி பேசுவாயாகில் உன் ஆயுள் முடிந்ததென்று நினை.

பக்ஷி:—ஓ புருஷ சிரேஷ்டா! உன் மனோ வல்லமைக்கு மெச்சினேனென்று பறந்தது.

மறு நிமிஷத்தில் லக்ஷ்மணனெதிரில் ஸ்ரீராமர் நின்றார். ஸீதா தேவியும் நித்திரா நீங்கினாள். ஸ்ரீராம மூர்த்தி ஆநந்தத்துடன் ஸகோதரனை ஆலிங்கனம் செய்துகொண்டு, 'பக்ஷியாய் வந்து பரிசோதித்தது நானே' என்று கூறினார். தர்ம புருஷர்களின் உத்தம சரிதம் எப்போதும் நித்திய பாராயணத்துக்குரியது.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுக௵ மார்கழி௴ 1௨

ஒரு நிமிஷத்தில் நடப்பதென்ன?

ஆறு மணி அடிப்பதற்கு இன்னும் ஒரு நிமிஷமே பாக்கி! அந்த ஒரு நிமிஷத்திற்கு முன்னர் எத்தனையோ லௌகிக ஆவல்களில் சிந்தை யூறி நின்ற ஒரு பெண்கொடி அடுத்த நிமிஷத்தில் தன்னை மறந்து மயங்கி மூர்ச்சித்து விழுகின்றாள். தன் மூர்ச்சையிலே அந்த அங்கனாமணி ஞான ஒளியினைத் தரிசிக்கின்றாள்; அதில் அவள் பரவசம் கொண்டு துள்ளுகின்றாள். மறு நிமிஷம் அவள் கண் திறந்து நோக்குகையில் புது உருவமாய் விடுகின்றாள். லௌகிக ஆசைகளிலும் உலக பாசங்களிலும் அவள் மனம் செல்லாது போகின்றது. தான் அணிந்துள்ள ஸ்வர்ணாபரணங்களை யெல்லாம் ஒரு கனத்த இரும்புச் சங்கிலிகளாக நினைத்துக் கழற்றி வீசி யெறிந்து, 'இவைகள் எனக்கு மிக்க பளுவாய் இருக்கின்றன; ஆதலின் வேண்டாம்' என்கிறாள். அவள் மனமே ஞானானந்தத்தில் லயித்துவிடுகின்றது. உலகப்பற்றுகளைத் துறந்த ஞானியாகிறாள். கீழ் நோக்கி நின்ற கண்விழிகள் மேல் நோக்காகி வியப்பு தருகின்றது. இனி. அந்த ரமணீரத்நத்திற்கும் உலகுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லாது ஸகல விருப்பங்களும் அற்றுப்போய் பகவத் தரிசனம் ஒன்றில் மட்டுமே ஆநந்திதையாய், திவ்ய பாசுரங்களை ஸேவிப்பதிலேயே சிந்தையாய் விளங்குகின்றாள். தன் காதற்கணவனைக் கைபிடித்திழுத்துத் தழுவி, நீ என் தமயனல்லவா என்கிறாள். இப்பெண்மணி ஒரு நிமிஷத்திற்கு முன் இருந்த உலகபாச நிலையென்ன?—இப்போதுள்ள பற்றற்ற உயர்வென்ன? பூர்வ ஜென்ம பரிபக்குவம் தன்னைத் தொடாதவரையில் சாமான்ய ஸ்திரீபோலிருந்து, அந்த பக்குவ ஜோதி தன்னைப் பற்றியதும் முற்றிலும் வேறு மனுஷியாகி, பழுத்த ஞானியாய்ப் பிரபை வீசி ஒளிர்வதானாள். இனி அவளது சிந்தையைத்திருப்ப இயலுமோ? அது எது இனி!

ஃ

கபடு சூது கடுகளவாகிலும் தெரியாதவர்கள் இந்நாளில் எத்தனைபேர்? உள்ளுக்கு நஞ்சுத் தன்மையும் வெளிக்கு நகை முகமும் வாய்ந்து மயக்குபவர்கள் இக்காலத்தில் அதிகம்.

சென்ற நிமிஷம் வரையில் அவன் திக்கற்ற மானிடன், பாதி மனிதன்! இப்பொழுதோ, விவாக முடிச்சு விழுந்து பக்கத்திலே ஒரு பரிமளவல்லியுடன் பசுந்தாக மணவறையில் உட்கார்ந்துள்ளான். முன் நிமிஷம் வரையில் அந்தப் பரிமளா தனது பெற்றோர்களுக்குச் சொந்தமான புதல்வியாக நின்றாள். இப்பொழுதோ அந்த சம்பந்தம் நீங்கி விட்டது. வெவ்வேறிடங்களில் வேறு வேறாகப் பிரிந்து கிடந்த பாதி உருவங்கள் இப்பொழுது ஒன்று சேர்ந்து பூர்ணமாகி ஸம்சார பாரத்தைத் தாங்குதற்கான சக்திதத்துவம் படைத்தவர்களாய்விட்டனர். ஒருவரை யொருவர் எத்தனையோ முறை வழியில் கண்டு சென்றிருக்கின்றார்கள். இருவரும் அன்னியரே. அதற்கு அடுத்த நிமிஷத்திலோ எவ்விதமோ இறைவனின் அருளால் பூர்வ நட்பு தொடர்ந்துகொண்டு, இணை பிரியாத நேசர்களாகி விடுகிறார்கள். இது ஒருவிதம்; இனி மற்றொன்றேவெனில், இதற்கு முன் ஒருவரை யொருவர் காணாதவர்களாயிருந்து திடீரென்று சந்திக்கின்றனர். அந்த சந்திப்பின் நேரம் எத்தனை மகத்துவ முடையதோவென்று அதிசயிக்கும்வாறு அந்த நிமிஷ முதலாக ஆப்த மித்திரரத்னங்களாய்விடுகின்றனர். இவ்வளவும் ஒரு நிமிஷத்தில் நேரும் ஸம்பவமே!

ஃ

ஆரோக்கிய ஸம்பன்னராய் ஒருநிமிஷமுன்பு பேசிக்கொண்டிருந்தவரும், பிரஸங்கித்துக் கொண்டிருந்தவரும், நடந்து போய்க் கொண்டிருந்தவரும், நித்திரை செய்யச் செல்வதாய்த் தமது சயன அறையை நாடியவரும், அயர்ந்து தூங்கியவரும், இனி அபாயமில்லை, பிழைத்துக் கொள்வார் என்று எண்ணப்பட்டவரும், மணப் பெண்ணின் கழுத்திலே அப்பொழுதுதான் மாங்கல்யத்தை முடிந்திட்டவரும், ரயிலில் பிரயாணமாய்ப் போய்க்கொண்டிருந்தவரும் அடுத்த நிமிஷத்தில் மரண காலம் நேர்ந்துகொண்டு பிரேத ரூபமாய்விடுகின்னர். ஒரு நிமிஷத்திற்கு ஜீவகளையுடன் பேசிக்கொண்டிருந்த மனுஷ்யன் மறு நிமிஷத்தில் உயிர் பிரிந்து மாயமாய் விடுகின்றான். ஒரு கலகத்திலோ, முன் பழப விரோதத்திலோ திடீரென்று எதிரிகளால் தாக்குண்டு ஆவி துறந்தவர்களும் அநந்தம். ஒரு நிமிஷ காலத்திற்குள் எத்தனை மாறுதல்கள்?

ஃ

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு நதி அதிகமாகச் சிறப்பித்துக்கொண்டாடப்படுவதுண்டு. அந்தந்த நாட்டில் வாழுகிறவர்கள் அதன் சம்பந்தமான ஐதீகங்களினாலும், எந்தக் காலத்திலுமுள்ள அதன் அழகினாலும் அதன்மேல் மிக்க வாஞ்சை கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, நமது காவிரி, வைகை, தாம்பிரபரனி நதியின்மீது நமக்கு எவ்வளவோ ஆசையல்லவா!

ஒரு சிறு சங்கதியில் பெரிய பகை விளைவதும் ஒரு நிமிஷத்திலேயே! விவாகத்திற்கு எவ்வளவோ சந்தோஷமாகக் கூடிக்கொண்டு சென்றவர்கள் அங்கு நேரும் சச்சரவில், பிறகு மறுபடியும் ஒன்று சேராதவர்களாய்ப் பிரிந்து விடுகிறார்கள். தமது பெண்ணுக்கு மாங்கல்யதாரணமானவுடன், அப் பெண்ணின் பெற்றோர் திடுக்கிடும் ஸம்பவமொன்றைக் காண்கிறார்கள். இன்னொரு பெண்ணையும் மணப் பந்தலுக்குக்கொண்டு வந்து அப் பெண்ணுக்கும் அந்த மணமகனே மாங்கல்யம் சூட்டும் காட்சியைக்கண்டு வயிறு பற்றி எரிகிறார்கள். ஹா! இந்தச் சூதினை யறியாமற் போனோமே யென்று ஆவி கலங்கித் தங்களின் பெண்ணை அங்குதானே விட்டுவிட்டு அந்த நிமிஷமே சென்று விடுகிறார்கள் பிறகு சேர்வதேயில்லை. இவ்விதமோ எவ்வளவோ. காலத்து அத்யந்த உறவும் நேசமும் ஒரு நிமிஷத்தில் பிரிந்து விடுகின்றது. மிக்க விமரிசையாக விருந்து நடத்தியும், எவ்விதமோ அந்த நிமிஷத்தில் நேர்ந்த ஒரு பிளவில், ஒரு சொட்டுச் சொல்லில், சுடு மொழியில்—செய்ததத்தனையும் வீணாய் விடுகிறது. தான் எத்தனையோ தடவைகளில் எத்தனையோ வாரம் மாதங்களாகத் தங்கிப் புசித்துக் குலாவிய நண்பனின் வீட்டிற்கு, அந்த நண்பன் இறந்த பிறகும் பழய அன்போடும் செல்கிறான். அங்கு ஒரு நிமிஷத்தில் காணும் காட்சி நெஞ்சுக்குப் பிடிப்பதில்லை. போய் வருகிறேனென்று அவன் புறப்படும்போது, இருந்து தங்கிச் செல்லுமாறு உபசாரத்திற்கேனும் சொல்வாரின்றி, அவ்விதமே போய் வருமாறு கூறிவிட, தன் நண்பன் இருந்தால் தன்னைப் போக விடாது இருக்கச் சொல்வானல்லவா வென்ற ஏக்கத்துடன் அவ்விடத்தினின்றும் நீங்குகிறான். வெளியன்பும், உள்ளன்பும் ஒரு நிமிஷத்தில் தானே தெரிந்து விடுகின்றது.

ஃ

எவ்வளவோ அன்புடன் இருந்தவர்கள் ஒரு நிமிஷத்தில் பிளவுபட்டுப் போகின்றார்கள். தான் எத்துணையோ அன்புடன் நடத்தி வந்தவர்களை—'இதெல்லாம் அன்னியக் கூட்டந்தானே'—என்று மனதில் பேதமாய் நினைத்து அன்பு குலைந்து வேற்றுருவாய் விடுகிறார்கள். ஒருமித்திருந்த இடத்தை ஒரு சண்டாளி ஒரு நிமிஷத்தில் பிரித்துக் கெடுத்து விடுகிறாள்! பிரிந்தவர் என்றும் பிரிந்தவரேயாகி, ஒருவர் தமது அன்பு மறக்க, மத்றவர் அவர் மறந்த

ஷார்லெட் ப்ரோந்தியாள் (1816-1855.) என்ற நூலாசிரியை கற்பனை கதைகளை எழுதும்போது பிரதி தினமும் ஓயாமல் எழுதுவதில்லையாம் சில வாரங்கள் வரையிலும்; ஒவ்வொரு சமயம் சில மாதங்கள் வரையிலுங் கூட ஒரு வரியும் எழுத முடியாமல் சும்மா இருந்ததாகவும், சில நாள் காலையில் எழுந்தவுடனே மனம் மிகவும் தெளிவாகிக் கதை முழுமையும் விளக்கமாய் எதிரே தோன்றியதாகவும் அந்த அம்மையார் கூறுகிறார்.

அன்பை என்றும் நினைத்து வாயூறிச் சிந்தை நோக, இவ்விதமே காலம் கழிகின்றது. இருவரும் ஒருவரை யொருவர் காதலிக்கின்றனராக, காதலனே மற்றோர் முறை தன் காதலியிடம் ஒரு உறுதி வாசகம் பெற நாடுகின்றான். அச்சமயம் தன் காதலியின் அருகே வேறோர் நங்கை யிருப்பதையும் கவனியாது, 'தன்னைக் காதலிப்பது உண்மையேதானா? என்று கேட்டுவிடுகிறான். இது அந்தக் காதலிக்கு 'மற்றோர் பெண்ணின் முன்பாகக்கேட்டனனே' யென்று மனம் கொதித்துவிட, அதனால் அவள் சுடுமொழி புகன்று அந்த நிமிஷ முதலாகக் காதலைக் கைவிட்டு அன்னிய மனுஷி போலாகி விடுகிறாள்; அம்மட்டோ, கனத்த விரோதியுமாகிறாள். பின் ஜீவகாலம் வரை இருவருக்கும் பேச்சில்லாமலே போகின்றது. இது அவசரப் பட்டுக் கேட்டு விட்ட அந்த ஒரு நிமிஷநேரத்தின் விளைவு!

ஃ

ஒரு நிமிஷகாலத்துக் கோபவினை செய்யும் கோரம் செப்பப் போமோ! எத்தனையோ கொலை பழி பாவங்கள் அந்த ஒரு நிமிஷ எல்லைக்குள்ளேயே சூழ்ந்து கொள்ளுகின்றன. தூக்கு சிக்ஷையை ஏற்க நேர்வதும் அந்த ஒரு நிமிஷத்தின் செயலே! அந்த ஒரு நிமிஷம் தன்னை யடக்கிக்கொண்டிருப்பின் எத்தனைப் பாவங்களினின்றும் தான் தப்பித்துக் கொண்டிருக்கலாம்? தன் மனைவியின் சோர நடத்தையைக் கண்ட ஒருவன் உடனே அவளையும் சோர நாயகனையும் குத்திக் கொன்றுவிடத் துணிகிறான். அதே நிமிஷம் அவன் மனதில் தான் செய்யப்புகும் கோர கிருத்தியத்தின் முடிவு என்னவாகுமென்று ஓர் சிந்தனை எழுகின்றது. இருவரும் தன்னாற் கொல்லப்பட, அதினின்றும் தனக்கு மரண சிக்ஷை ஏற்படுவதாகி, யாவும் ஸர்வ நாசமாகிறதென அவன் அறிவு அவனுக்கு எடுத்துக் காட்டுகின்றது. தக்ஷணமே தன் மனத்தை யடக்கி, அவ்விருவரிருந்த கதவைச் சாற்றிப் பூட்டிட்டுத் தன் கையிலிருந்த ஈட்டியால் தன் ஆத்திரம் தணியக் கதவை ஓங்கி ஓங்கிக் குத்துகின்றான். உடனே கூட்டம் சூழ்கின்றது. அவர்கள் முன்பாக நிகழ்ந்ததை விவரித்துத் தன் மனத்தை யடக்கியவிதம் தெரிவித்து, தன் ஆத்திரம் தணிவதன் பொருட்டுக் கதவைக் குத்துவதாகக் கூறுகிறான். ஜனங்களின் முன்பு தன்னைப் பலாத்காரமாய்ப் பிடித்து ஒரு அறையில் அடைக்கும்படி வேண்டுகிறான். அவ்விதமே அங்குள்ளவர்கள் அவனது மதி நுட்பத்திற்குப் பாராட்டிப் பத்திரமாய் அவனை இட்டுச்சென்று

கேட்காமல் கொடுப்பது உத்தமம், தான் கொடுக்கக்கூடிய இடத்திலிருந்துங்கூட, அங்கும் கருமித்தனமாய் நடந்து கொள்வோர் எத்தனையோ பேர். பிறரது வீட்டைச் சாதத்தையே இலையிற் பரிமாறுவதாயிருந்துங் கூடச் சரிவர வைக்காமல் செட்டுத்தனம் காண்பித்து அதையொரு கௌரவம்போல் நினைப்பவர்களும் உண்டு.

விடுகின்றனர். ஒரு கொடுங் கொலையினின்றும் அவன் தப்பித்துக் கொள்ள, அறையினுள்ளே விபசாரச் சேற்றில் ஊறிக்கிடந்து கெட்ட அவன் மனைவியும், சோரநாயகனும் ஜனங்களின் முன்னர் நாணி மானமிழந்து நாறுகின்றனர். பிறகு அப்பெண் குடும்ப யோக்கியதையினின்றும் விலக்கப்பட்டவளாக, அவள் கணவனோ வேறு மணம் புனைந்து சுகவாழ்வில் இன்புறுகின்றான். இந்தக் கூர்மையான மதிநுட்ப நிதானச் சிந்தனை அவனுள்ளத்தில் தோன்றியதும் அந்த ஒரு நிமிஷ எல்லைக்குள்தான். அது அவனது பாக்கியந்தான்.

ஃ

ஒரு நிமிஷ மதன தாக ஆவேசம் செய்யும் கேடுபாடுகள் கொஞ்சமா? காமம் கனிந்து, கலவியை நினைந்து, மங்கையர் மயலிடை வீழ்ந்து, பொருள்—புயவலி—பெருமை யாவும் இழந்து தாழ்வுற வைப்பதும் அந்த ஒரு நிமிஷச் செயலே! ஒரு நிமிஷகாலச் சிற்றின்பமாயினும், அதன் விளைவு கற்பகோடியாங்காலத்தும் கறைமொழி படிந்துலாவச் செய்யுமன்றோ? காலம் முடிந்து பிராணன் பிரிகையில் அந்த ஒரு நிமிஷகாலத் தத்தளிப்பின் கொடுமை சொல்லற்பாற்றோ? ஒரு நிமிஷ ரணசிகிச்சையின் வேதனை எவ்வளவோ திக்குமுக்காடிடச் செய்துவிடுகின்றதே! கண்ணோடு கண் நோக்கிக் கண்டதும் காதலாவதும், ஓரேயொரு நிமிஷத்திலேதான். வழி நடந்து செல்லுகையில் தன்மீது வண்டியேற யிருந்து தப்பித்ததும் அந்த ஒரு நிமிஷத்தில் சட்டெனத்தான் ஒதுங்கி நின்று தன்னைக் காத்துக்கொண்டதனால்தான். அந்த சந்தித்த நிமிஷவேளை எத்துணை மாட்சியுடையதோவென்று மகிழும் வாறாக, பிதாவுக்குச் சமமான ஒரு பெரியாரைத் தன் ஜீவகால முற்றிலும் அருந்துணையாகப் பற்றிக்கொண்டு ஆநந்திக்க வைப்பதும் இறைவனின் அருளே! அப்பெரியாரும் தன்னையே நம்பிய சிறுவனைத் தனது குமாரன்போல் ஆதரித்து எல்லா உதவியும் புரிந்து காத்திடுகின்றார். சொந்தத் தந்தையிடமிருந்து அந்த சுகம் இன்னவிதமெனக் கண்டிராத இவனும் அப்பெரியார்பால் அளப்பரிய பிரேமை மிகுந்து ஆசைத் தந்தையாகக் கொண்டு உள்ளம் பூரிக்கின்றான். இது அந்த முதல் சந்திப்பின் நிமிஷ புண்ணிய மகத்துவமாகும். ஒரு நிமிஷத்தில் பிராணன் தப்பித்தலும் கண்டிருக்கிறோம். அதற்காகக் கடவுளையும் துதித்திருக்கிறோமன்றோ?

ஃ

ஒரு நிமிஷத்திற்கு முன் கற்பலங்காரியாய் நின்றனள்; மறு நிமிஷத்திலோ மதி குறைந்து கற்பிழந்து கெடுகின்றாள். ஒருநிமிஷ முன் யோசித்திருப்பின் தன் பாத்தியதைகளைப் பாழாக்கி விடுகிற அந்தப் பத்திரத்தில் தான் கையொப்பமிடுவதினின்றும் தப்பி யிருக்

கலாம். ஒரு நிமிஷத்திற்குள் வெளிப்பட்ட வார்த்தை எத்தனையோ விபரீதங்களை விளைத்திடுகின்றது. ஒரு நிமிஷ நேரத்தில் ஒரு வியாபாரியின் நாணயமற்ற தன்மை அப்போது நடத்தும் ஒரு வியாபார மூலமாய் ஒரு சிறு ஸம்பவத்திலிருந்தும் தெரிந்து விடுகிறது. ஒரு நிமிஷத்தில் ஏற்பட்ட சந்தேகம் உலக வாழ்வின் சந்தோஷத்தையே கெடுத்து விடுகின்றது. ஒரு நிமிஷத்துக்கு முன்தான் அவர் வீட்டைவிட்டு வெளியிற் சென்றாராயினும், அவரை நாடி வந்தவர்கள் தேடிக் கண்டுபிடித்துவிட முடிகிறதா? அவர் எந்த வழியிற் சென்றாரோ யார் கண்டார்? ஒரு நிமிஷமுன் சுமங்கலி; மறு நிமிஷமோ அமங்கலி! ஒரு நிமிஷமுன் கன்னிகை; மறு நிமிஷத்திலோ மாங்கல்யவதி! ஒரு நிமிஷமுன் அந்த நங்கை அன்னியஸ்திரீ; அடுத்த நிமிஷத்திலோ அவள் தான் தொட்டு மணந்த மனைவி! ஒரு நிமிஷமுன் மனிதன்; மறு நிமிஷமோ சவம் என்ற பெயர் ஏற்படுகிறது! ஒரு நிமிஷமுன்பு ரிஜிஸ்தரார் ஆபீஸிலே வீட்டுக்குச் சொந்தக்காரனாக நின்றான். அடுத்த நிமிஷத்திலோ பத்திரம் மூலமாகத் தன் வீட்டை வேறொருவனுக்கு உரிமையாக்கிவிட்டு வீடு இல்லாதவனாகிறான். ஒரு நிமிஷமுன் சொத்தாளி; மறு நிமிஷத்திலோ வெறுங்கையாகிறான். ஒரு நிமிஷமுன் ராஜா; மறு நிமிஷமோ கைதி. ஒரு நிமிஷமுன் ரயிலில் நம்முடன் பேசினார்; இப்போதோ ரயில் சென்றுவிட அதனோடு மறைந்திட்டார். முதன்முதலாக முத்தம் தர வாய்த்த தருணமும் ஒரு நிமிஷ நேரத்தில்தான் நேருகின்றது. ஒரு நிமிஷத்திலே வெகு காலத்திய ஆவல் சாந்தி பெறுகின்றது!

ஃ

தான் காதலித்த கட்டழகியிடமிருந்து தன் ஆவல் மறுக்கப்பட்ட அந்த ஒரு நிமிஷ விளைவே, அவளது வேற்றுமைக் குணம் அனைத்தையும் ஊகித்துக்கொண்டு விலக வைத்திடுகின்றது. ஒரு நிமிஷச் செய்கையே நம்பிக்கைக்கும், ஏமாற்றத்துக்கும், இன்னும், கொலை, அடி, கோபம், கோரம், கொடுமை யாவற்றிற்கும் ஏதுவாகின்றது. திடமான ஒரு நிமிஷ ஜெபம் உத்தம பலனை ஈந்திடுகின்றது. தன் பிராணன் பிரியுங் காலத்தில் தான் வளர்த்த மான் எதிரே தவித்து நிற்க, தனக்குப் பின் அந்த மானின் கதி யாதோ என்று ஏங்கிய உள்ளத்தினரான பரதர் அந்நினைவுடனே மரணமாக, அந்த ஒரு நிமிஷ நினைவின் காரணமாய் மறு ஜென்மத்தில் மானாகப் பிறந்தார். அந்த ஒருநிமிஷ மரண நினைவுக்கேற்பவே மறுபிறவியும் முக்தியும் பிராப்தமாகின்றது. அந்த ஒருநிமிஷ யோசனை தான் இப்போது பெரிய வியாபாரசாலை! அந்த ஒருநிமிஷ யோசனை

கறக்கக் கறக்க ஊறும் பசுவின் பால்; படிக்க படிக்க ஊறும் மெஞ்ஞானம்; இறைக்க இறைக்கச் சுரக்கும் கிணறு. நினைக்க நினைக்கப் பெருகுங் காமம்.

யால்தான் அவ்வளவு பெரிய நூலை இயற்ற முடிந்தது. அந்த ஒரு நிமிஷ யோசனையால்தான் அந்தப் பட்டிச் சிறுக்கியை விவாகம் செய்துகொள்ளாமல் தப்பித்தது! அந்த ஒரு நிமிஷமே அந்த நண்பனின்—பந்துவின்—வேதாந்தியின் கபட குணத்தை அறிய முடிந்து தூர விலக வைத்தது! ஒரு நிமிஷம் தாமதித்துச் சென்றிருந்தால் அந்தக் களவில்—கலகத்தில்—தான் அங்கே யிருந்துகொண்டு சம்பந்தப்பட்டிராமல் தப்பித்துக்கொண்டிருக்கலாம். ஒருநிமிஷத்தில் பிறந்த உத்திரவு எவ்வளவோ வேலை செய்துவிடுகிறது. கோர்ட்டு விசாரணையில் நீதிபதியின் தீர்ப்பு வெளியாகிற அந்த ஒருநிமிஷகாலம் எத்துணையோ கலக்கமும் திகைப்பும் எதிர்பார்ப்புமாய்ப் பரபரப்பு தருகின்றது.

ஃ

தன் ஆத்திரத்தில் சொல்லயிருந்த வார்த்தையை வெளியிடாமல் நிதான புத்தியுடன் விழுங்கிவிட்ட அந்த ஒரு நிமிஷமே பல மனஸ்தாபங்களையும் பிரிவினைகளையும் நேராமற் காப்பதாகின்றது. ஒரு நிமிஷத்திலே தன் மனமும், தான் முன்பு செய்த தீர்மானமும், தான் செய்யவிருந்த வேலையும் யாவும் மாறிப்போவது அதிசயமேயன்றோ? ஒருநிமிஷ முன்பு சென்றிருந்தால் ரயில் ஏறியிருக்க லாம் தபால் கட்டுக்குத் தவறாதபடி தன் கடிதங்களை யனுப்பியிருக்கலாம்; தான் காணச் சென்றவரையும் சந்தித்தி ... ப ... ரயிலில் ஸ்வாமியையும் சேவித்திருக்கலாம். ஒரு நிமிஷ முன் பிறந்திருந்தால் அதிர்ஷ்ட ஜாதகமாக இருந்திருக்கும். ஒருநிமிஷ காலத்தின் விளைவுகள் எத்தனை எத்தனையோ! சென்றுபோன ஒரு நிமிஷத்தை மீண்டும் எட்டிப்பிடிக்க இயலாது. சென்றது சென்றதே! சென்ற காலத்திற் புரிந்த ஒரு நிமிஷநேர நம்பிக்கைத் துரோகத்தால் தான் பிற்காலத்தில்எவ்வளவுச் செல்வம் கொண்டாலும், எத்தனைப் புதுபதவிகளை ஏற்றாலும், அரசனாகிப் பட்டமே ஆண்டாலுங் கூட அது நீடித்திராமற் போகின்றது. வெகு சீக்கிரத்தில் தானே அந்த முந்திய துரோகச் செயலின் பலனை அனுபவிக் நேர்ந்து தாழ்ந்து, ஈனப்படும்படி யாகிவிடுகிறது.

ஃ

பல நிமிஷங்கள் ஒன்றுகூடியே நமது வாழ்நாளாகின்றது. வெகு சொற்பகாலமாகிய கண்ணிமைப்பொழுதே நிமிஷமெனப்படும். ஆயினும், அவற்றில் ஒரு நிமிஷத்தைக்கூட நாம் உபேக்ஷை செய்து வீணே கழித்துவிடலாகாது. ஏனெனில், அவற்றுள் எத்தனை நிமிஷங்கள் நமக்குச் சொந்தமோ! நமது வாழ்நாளின் பகுதிகளாகிய நிமிஷங்களைக் கழிப்பதில் நாம் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். அந்த நிமிஷங்கள் நமக்குப் பேரின்பவிளைவுக்கு

வழியாயினுமாகும்; என்றும் ஒழியாத தன்பத்தைத் தருவதற்குக் காரணமாயினும் ஆகும். ஆகவே, நிமிஷங்களை நல்வழியிற் கழிக்காமல் வீணில் துர்விநியோகப்படுத்துபவர்களுடைய விவேகமின்மையை என்னென்று கூறுவது? ஒரு நிமிஷமும் அற்பமன்று. நிமிஷத்தை மட்டுமல்ல, எதையுமே அற்பமென்று இகழலாகாது. சிறியதே பிறகு பெரியது. பெரிய மலைகளை உடைப்பது சிற்றுளியோ செம்மட்டியோ? ஆயிரம் பதினாயிரம் விலை பெறுவது குன்றுமணியளவான வைரக்கல்லோ, கோபுரத்தளவான கூழாங்கல்லோ?

குருக்களிடம் ஏமாறுகை.

"ஜீன் மெல்லியர்" என்ற ஒரு கிறிஸ்துவப் பாதிரியார் பின்வருமாறு கூறுகிறார். "கடவுளின் கிருபையை விலைக்கு வாங்குவதற்காகவென்று பாமர ஜனங்கள் பணத்தைக்கொண்டு வந்து கொட்டியதை நான் வெறுத்தேன். ஐயோ! என்ன கொடுமை! பாமர ஜனங்கள் கண்மூடித்தனமாய் குருவின் பாதத்தில் பணத்தைக் கொட்டித் தங்களுக்காகக் கடவுளை வணங்குமாறு கேட்கிறார்களே என்பது எனக்கு அவ்வளவு வருத்தமயில்லை. ஆனால், படுபாவிகளும் கபடப் பூனைகளுமான குருமார்கள் (தங்களுக்கு எவ்வித தவசக்தியு மில்லாதிருக்கையில்) தாங்கள் செய்வது பெரும் ஏமாற்றம் என்பதை மனப்பூர்வமாக அறிந்திருந்துங்கூட, பண ஆசையாலும், அதிகார அவாவினாலும் அதை (அந்த வருமான லாபங்களை) சந்தோஷமாய் அனுமதித்துக்கொண்டும், அனுபவித்துக்கொண்டும் இருக்கிறார்களே, அதுதான் (அந்த வஞ்சகம்தான்) என் உடலை நடுங்கச் செய்கிறது. குருமார்கள் தங்களுடைய நோகாத (அதிர்ஷ்ட) வாழ்க்கையை நினைத்து சந்தோஷப்பட்டாலும் படட்டும்; ஆனால், அதற்காகப் பாமர ஜனங்களை,— சூதுவாது அறியாத ஏழை ஜனங்களை, (ஏதோ பெரிய புண்ணியம் கிடைத்து விடுவதாக அவர்கள் நம்பும்படிச் செய்வதான) குற்றங்களை மேலும் மேலும் செய்யும்படி தூண்டுகிறார்களே, அதுதான் எனக்கு சகிக்க முடியவில்லை" என்கிறார். குருக்களிடத்திலும், புண்ணியத்தை விலைக்கு விற்பதாகக் கூறுவோரிடத்திலும் தங்களின் பணங்களைத் தந்து ஏமாறுவோர் இதைக் கவனிப்பது நன்றாகும்.

சுயமரியாதை நாணா.

சுயமரியாதைக் கட்சியில் முதல் சிங்கமான நாராயணப்பிள்ளை கடவுள் இல்லையென்ற நாஸ்திகம் பேசி நாத் தழும்பேறி, இனி கடவுள் நாமமே சொல்வதில்லையென்று தீர்மானித்துக்கொண்டார். அவரை எவ்வளவோ பேர் சோதித்தும் தம் உறுதியினின்றும் மாறாமலே தம்மைக் கேட்ட வினாக்களுக்கு அதி ஸமத்காரமாய் விடை பகர்வதானார். ஒருவர் உமது பெயர் என்னவென்றார். அவ்வகையிலேனும் அவர் நாராயணன் என்ற தமது பெயரைச் சொல்லிவிடக்கூடும் என்று எண்ணினார். ஆனால், அவரோ தமது பெயர் நாணா என்றார்.

ஃ

இன்னொருநாள், நேற்று நடந்த கூட்டத்தில் பிரஸங்கித்தவரின் பெயர் என்னவென்று ஒரு நண்பர் வினவினார். பிரஸங்கியின் பெயர் கிருஷ்ணஸாமி ஐயர் என்று தமக்குத் தெரிந்தாலும், அதை அவர் வாயாற் சொல்லிவிடட்டும் என்பது அவர் நண்பரின் கருத்து. அதற்கு நாராயணப் பிள்ளையோ சற்றும் தாமதியாமல் "கீழ்க்கோட்டை கிச்சுதான் பிரஸங்கம் செய்தது" என்றார்.

ஃ

மற்றொரு சமயம் நாராயணப் பிள்ளை தம் தம்பியின் குமாரன் சக்கரபாணியுடன் நின்றுகொண்டிருக்கையில் இச்சிறுவனின் பெயர் யாதென ஒருவர் ஒருவர் வினவினார். எவ்வாறேனும் சக்கரபாணி என்ற பெயரை அவர் வாய்மொழியாகத் தருவிக்கவே அவ்விதம் கேட்டார். அதற்கு நாராயணப்பிள்ளை "அவன் பெயர் சகீது" என்றார்.

ஃ

ஓர் இரவு நாடகம் பார்த்துக் கொண்டிருக்கையில், கதாநாயகனாக இராமசாமி ஐயர் என்பவர் நடித்தார். அவரது இருப்பிடம் ராயப்பேட்டை. நாராயணப்பிள்ளையின் அருகிலிருந்த நண்பர்கள் அந்த நடிகரின் பெயர் என்னவென்று அவரை மடக்கிக் கொண்டு கேட்டனர். சுருக்கமாக ராமு என்றாலுங்கூட அதுவும் கடவுளின் பெயரைச் சொல்லியதாய் விடுமென்று நினைத்தனர். நாராயணப் பிள்ளையோ சற்று தயங்கி, பின் "ராயப்பேட்டை ஐயர்" என்று கூறினார்.

ஃ

சில தினங்களுக்குப் பின் நாராயணப்பிள்ளையின் தம்பிக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்க அதற்கு வெங்கடசாமி என்று பெயரிட்டனர். என்ன பெயர் வைத்தார்களென்று நாராயணப்பிள்ளையை நண்பர்கள் வினவிய போது "வேங்து" என்று வைத்ததாக விளம்பினார்.

ஃ

ஒருநாள் மாலை உபாத்தியாயர் வந்து பாடம் சொல்லித்தர உங்கள் குமாரனைக் கூப்பிடுங்கள் என்றார். அச்சிறுவனின் பெயர் விசுவநாதன். அதை நாராயணப்பிள்ளை மறதியாக

கூறி யழைத்து விடுவாரென்று உபாத்தியாயர் நம்பினர். நாராயணப் பிள்ளையோ, தடுமாற்றமின்றி, "அடே விசு, உபாத்தியாயர் வந்திருக்கிறர் வாடா" என்றார்; உபாத்தியாயர் வெட்கிப்போனர்.

ஃ

இரண்டு வருஷக்கட்குப் பிறகு நாராயணப்பிள்ளை கனத்த வியாதிப் படுக்கையாகி பிராணுபத்தில் இருந்தார். பிரக்ஞையும் அடிக்கடி தவறிற்று. அவருடைய ஆத்ம நண்பர்கள் இச்சமயமேனும் அவர் கடவுளின் பெயரைச்சொல்லி நற்கதியடையட்டுமென்று ஒரு யுக்தி செய்தனர். ராமச்சந்திரய்யர் அவரை நெருங்கி என்னைத் தெரிகிறதா என்றார். "அடுத்த வீதி ஆழச்சுதானே நீர்" என்று நாராயணப்பிள்ளை கூறினர். நான் யார் என்று கிருஷ்ணய்யர் கேட்க, "கீயா கிச்சு" என்றார். லக்ஷ்மணய்யர் நெருங்கி, தம்மை அடையாளம் தெரிகிறதா என, ஆகா தெரிகிறது லச்சுதானே என்றார். இன்னொருவர் இப்போது என்ன பக்ஷம் என்றார். அதற்குப் பிள்ளை கிருஷ்ணபக்ஷம் என்பதற்குப் பதிலாகத் தேய்பிறை முதல்நாள் என்றார். வேறொருவர் 'மனேகரன்' என்ற நாடகநூலில் மனே என்பதை மறைத்து இதன் பெயர் என்னவென, அதற்குப் பிள்ளை அது ஒரு முதலியார் எழுதிய நாடகம் என்றார். "ஹரன்" என்ற சிவசப்தம் அவர் வாயில் வரவேயில்லை. சந்திரசேகரர் என்ற நண்பர் அச்சமயம் அங்குவந்து தமது பெயரைச் சொல்லும்படி வேண்ட, "ஓ! சந்துவா?" என்று கூறியவாறு கண்களை மூடினர். மறு நிமிஷம் பிராணனும் பிரிந்தது. சுயமரியாதை இயக்கத்தினர் இவரைப் பாராட்டுவார்கள்.

ஃ

சுயமரியாதை இயக்கத்திற் சேர்ந்து கடவுள் இல்லையென்று பேசி மத நிந்தை புரிந்து கிடந்ததின் பயனுகத் தனது ஏக குமாரன் கிறிஸ்து மதத்தில் சேர்ந்து விடும்படியாகித் தத்தளித்த தந்தையரும் உண்டு. சுயமரியாதை இயக்கத்தில் மயங்கி, எல்லா ஆடவரையும் ஸகோதரமெனக் கொள்வதான அதிகப்பட்ட ஸ்திரீ சுதந்திரத்தில் கைநனைத்துக் கொண்டு, தன் கற்பை விவாகத்திற்கு முன் ஒருவனுக்கு நம்பிக்கொடுத்து எங்கேனும், பிறகு அவனல் கைவிடப்பட்டுத் தற்கொலை செய்து கொண்டோருமான பாவையர் பல்லோராவார். சுயமரியாதை இயக்க விஷம் ஒரு நன்மனைக்குள் புகின் அதைவிடக் குடும்பநாசம் வேறில்லை.

R. அப்பண்ணச்சார்.

[எப்பொழுதும் விஷயங்களைச் சுருக்கி எழுதவேண்டும். இது சுருக்கித் தயாரித்தது. ப—ர்.]

ஊரெங்கும் பேர்தான். வீடோ பட்டினி. எவரைக் கேட்டாலும் கடன் தருவார்கள். ஆனல், அவன் உள்ளுக்குப் படுகிற வறுமையையும், அவனிடம் ஒரு காசுகூட இல்லாமையையும் வெளியில் எவரும் அறியார்கள். அவனுடைய நாணயமும் நல்லெண்ணங்களும் பிறர் முன்னிலையில் அவனை ஒருகெளரவப் பொருளாக மதிக்கும்படி செய்துவிட்டிருக்கிறது. அவனும் வெறுமையான தன் கையைத் திறந்து காட்டி விடாமல் மூடின கையாகவே கடன்படாதபடி காலங் கடத்துகிறன்.

கவிதா  விலாஸம்

காதல் சுரம்.

பாண்டியநாட்டரசனான ஜீவகனின் குமார்த்தி மனோன்மணி. அவள் சோரதேசத் தரசனாகிய புருடோத்தம வர்மனைப் பூருவ கரும பரிபாகத்தால் கனவிற்கண்டு மோஹம்கொள்ள அவட்குக் காமசுரம் நிகழ்ந்தது. அச்சுரம் இன்ன தன்மையதென்றுணராது வருந்துந் தந்தையாம் ஜீவகன் தன்னிடம் வந்த முனிவர்க்கு, மனோன்மணி படும் வாதனையைப்பற்றிப் பின்வருமாறு உரைக்கின்றான்:—

ஆர்வமு ஞானமு மணிகல னாக் கோ
டேசிக வடிவே! செப்பு மாற றிகிலம்
மாகறு மனோன்மணி தன் னுரு மாறி
நேற்றிரா முதலாத் தோற்றுந் தோற்றம்;
மண்ணுன் மேனியும்; உண்ணு ளமுதும்;
நண்ணு ளுசலும்; எண்ணாள் பந்தும்;
முடியாள் குழலும்; படியா ளிசையும்
தடவாள் யாழும்; நடவாள் பொழிலும்;
அணியாள் பணியும்; பணியா ளேவலும்,
மறந்தாள் கிளியும்; துறந்தா ளனமும்;
தூங்குவள் போன்ற யேங்குவள்; எளியை!
நோக்குவள் போன்றே நோக்குவள் வெளியை!
கேட்டுங் கேட்கிலள்; பார்த்தும் பார்க்கிலள்;
மீட்டுங் கேட்பள்; மீட்டும் பார்ப்பள்;
தனியே யிருப்பள்; தனியே சிரிப்பள்;
விழி நீர் பொழிவள்; மெய் விதிர்த்தழுவள்;
இங்ஙன மிருக்கி லெங்ஙன மாமோ?

முனிவர் மனோன்மணி நிலைமை காமசுரமே எனக் குறிப்பாலுணர்ந்து அவள் நோய் நீங்கு மருந்து மணவினையே எனவும் கூறுகின்றார்.

(மனோன்மணியம்.(

ஃ

காசுக் கடைகள் இன்று 'ஜுவல்லரி மார்ட்"டாக விளங்குகின்றன. காப்பிக்கடைகள் "லஞ்ச் ஹோம்" களாகவும் மாறுகின்றன. ஜவுளிக் கடைகள் இன்று "எம்போரிய"ங்களாகவும், "ஸ்டோர்" களாகவும் திகழ்கின்றன. க்ஷவரக் கூடங்கள் "சலூன்" களாகவும், பல சரக்கு கடைகள் "புரொவிஷன் ஸ்டோர்ஸ்" களாகவும் திரிபுற்றுவிட்டன.

மதனகலா நாட்டியம்

1

தான் துணிந்து கரம் இழுத்தே தன் மையல்
தெரிவித்தான்; தையலாளோ
'யான் இணங்கேன்' என மறுத்தாள்;
'இலையோ என்னிடம் காதல்?' என்று நின்றான்;
மான் விழியாள் 'அதை—விடுத்து மனம் மகிழ்வோம்'
என்றனள்; 'அம் மருவல் இன்றேல்
ஏன் நெருங்க?' எனக் கருதி ஏந்திழையைப்
பிரிந்தோருவன் ஏகினானே!

[*ஒரு வாலிபன் தன்னை மிகவும் விரும்பி நிற்கின்றாளென்று ஒரு நங்கையிடத்து அதிகமான உறுதிகொண்டுவிடுகிறான். அவளும் புன்சிரிப்புடன் மயக்கி இவனால் தனக்கு ஆகவேண்டிய உதவிகளைப் பெற்றவாறு இருக்கிறாள். ஒரு தினம் வாலிபன் துணிந்து அவள் கரம்பற்றித் தழுவச் செல்ல, அவள் விலகிச் சினங்கொள்கிறாள். தேக சம்பந்தமின்றி, சாதாரண அறிமுகமான தன்மையில் பழகுவோமென்று கூறித் தன் கற்புகெடாது காத்துக்கொள்கிறாள். கலவிச் சம்பந்தமின்றி வெறுமனே பழகுதல் எதற்கோவென்று வெறுத்துப் பிரிகிறான்.*]

2

எனைக் கலந்து மகிழ்வித்த ஏந்திழை என்
புன் வறுமை எண்ணி என்னை
மனத்தினால் வெறுத்(து) ஒருவன் மனைவி
ஆயினள்; பின்னர் வழியில் காண
எனை 'வருக' எனவுமிலை; எம்மொழியும் பேசவிலை;
இவள் முன்னாளில்
'உனை மனத்தில் காதலித்தோன் உயிரே!' என்(று)
உரைத்த திறம் உன்னினேனே.

[*தான் காதலித்த அன்பனுக்குக் கற்பும் தந்து ஒருபெண் மகிழ்கிறாள். பிறகு அவன் ஏழையாகிட, அதுகண்டு வெறுத்து, தன் கற்பழிவை மறைத்து மற்றொருவனை மணம்புரிகிறாள். பல வருஷங்கட்குப் பின் முந்திய காதலன் இவளை வழியில் சந்திக்க, அவனைத் தெரியாதவள்போன்றும சென்றுவிடுகிறாள். அவள் பழயநாளில் காட்டிய காதலை நினைத்து இவன் வாடுகிறான்.*]

கடவுள் தமக்காக இவ்வுலகில் உழைப்பவர்கள் காலம் முடிந்து புதைக்கப்பட்டுப்போனபோதிலும், அவர்கள் விட்டுப்போன வேலையை ஜீவித்திருக்கிற மற்றவர்களைக்கொண்டு செய்தவண்ணம் இருக்கிறார். ஆனதால் தான் இறந்தவர் விட்டுப்போன காரியங்களெல்லாம் நன்றாய் அபிவிருத்தியாகி இந்நாளளவும் அவர்களுடைய பெயர் அழியாமலிருக்கின்றது.

3

பெண்ணொருத்தி துணைவேண்டி, பேசுமவளுடன்
கலந்தால் பெருகும் அன்பு;
கண்மணியின் தொடர்புடைய காமத்தால்
வளருமெனக் கருதி நங்கை
தண்மலர்ச் செங்கரம் பிடித்தான்; "தங்கை முறையினில்
நின்று சாற்றும் அன்பில்
கண்ணனைய துணையாவேன்; கற்பினை ஏன் விட?"
என்றாள்; களித்திட்டானே!

[ஒரு பெண்ணைத் துணையாகப் பெறுவதில், அவளது கற்பையும் தனக்குக் கொடுத்தவளாக இருந்தால், தன்னைவிட்டுப் பிரியாது ஒன்றுபட்டிருப்பாளென ஒருவன் நினைத்து ஒரு நங்கையின் கைகளைப்பற்றப்போக, அவளோ உனக்கு நான் தங்கைபோலிருந்து உதவுகிறேன்; நீயும் நானும் கற்புகெடாமல் சகோதரவாழ்வினில் சன்மார்க்கமா யிருப்போமென்றாள். அவனும் அதற்கு இணங்கித் தமையன்போலிருந்து மகிழ்ந்தான்.]

4

தனக்(கு) அளிப்பார் எனக் கருதித் தன்
சொந்த சொத்தெனவே தான்களித்து
மனத்திருத்தி மணத்தின்முன் மங்கையோடு
கலந்து மிக மகிழ்ந்திட்டான்; பின்
'உனக்கில்லை' என்று உரைத்து பிறன் ஒருவனுக்கு
மணம் முடித்தார்; ஒருப்படாமல்
மனம் பெரிதும் சோர்ந்தவளாய் மங்கை
கிணற்றினில் வீழ்ந்து மடிந்திட்டாளே!

[ஒரு பெண் சிறு பருவமுதல் தன் பெற்றோர் குறித்துள்ள வாலிபனுக்கே தன்னைத் தருவரென நம்பி அவனுக்கு அந்தரங்கமாய்க் கற்பும் தந்துவிடுகிறாள். பிறகு பெற்றோர் அவளை வேறொருவனுக்கு மணமுடித்திட, அதுசகியாமல் விவாக நாளன்று மாலையில் கிணற்றில் விழுந்து மடிகிறாள்.]

5

காமவகையினர் இருவர்; காம(ம்) மிகு
மங்கை சுகம் காண்பதோடு,
தாம் மருவு நங்கையினை தம்முயிர் போல்
கருதி மிகச் சார்வார் இன்பம்;
தீமனத்தார் ஆவலது தீர்ந்தவுடன் மறைந்திடுவோர்;
சிறிதும் எண்ணார்;
மாமயலாய் வேறு பல மாதரையும்
மயக்கி சுகம் மருவுவாரே!

[காமிகள் இருவகையினர். (1) காமமும் விரும்பி, தாம் இச்சித்த பெண் மீதும் உயிராவர் ஒரு வகையினர். (2) தங்கள் காம விருப்பம் தீர்ந்ததும் பெண்ணைத் திரும்பிப் பாராமலும் நேசியாமலும் விலகிப் புதிதாக வேறொரு நங்கைமீது கண்ணுகிடுவர் மற்றொரு வகையினர்.]

6

கிட்டுமோ அனைவருக்கும் கிளர்ச்சி தரும்
திருமணந்தான்? கிடையா நாளில்
கட்டி அணைந்திட ஒரு நற் கண்மணியைப்
பெற நெஞ்சம் கருதிடுந்தான்;
எட்டிஎட்டிச் செல்வானை ஏனடி கண்ணே!
என்று இன்பம் மீறித்
தோட்டிழுப்பின் இசைவதுண்டு; துடைப்பப் பூசனை,
தவறின் சூழ்வதுண்டே!

[விவாகமில்லாதவர்கள் பலவித சேஷ்டைகளிலும், அக்கிரமத் துணிவுகளிலும் புகுந்து கெடுவது ஸர்வ சாதாரணம்.] ஒரு பெண்ணை மயக்க முயன்று இன்னோர் வெற்றி காண்பதுமுண்டு. பெண் இணங்காது கலகம் செய்திடில், இவர்கள் துடைப்பக்கட்டையடி படுவதுமுண்டு.

7

காமம் மிக இழிவென்பார்; கருத்திலோ
புகைந்திருக்கும் காம வெந்தீ!
தூமனத்தர் என 'மாதர் சோதரிகள்' என்பர்;
உள்ளுள் தூய்மையுண்டோ?
காமத்தால் கருத்தழிந்தும் கண்யரென
வெளியினிலே காட்டிக் கோள்வார்;
காமம் விடுத்தவர் போன்று காணினும்—
அன்னார் என்றும் கபடர்தாமே!

[எதை வெறுப்பதாகச் சொல்வரோ அதையே ரகசியத்தில் மிக மிக விரும்பிடுவர். காமத்தில்மட்டும் எத்தகைய உத்தம ஆடவரைக்கூட விவாகம் வெறுத்ததுபோன்று காட்டும் ஓயாத ஜெபதப வேதாந்திகளைக்கூட ஒரு சிறிதும் நம்புவதற்கில்லை. எவ்வளவோ காமசேஷ்டைகளை அந்தரங்கத்தில் மறைத்து வெளியில்மட்டும் மகா பரிசுத்தராகத் தோன்றுவர்.]

ஆரியூர்—வ. பத்மநாப பிள்ளை.

['மதனகலா நாட்டியம்' என்று 'அமிர்தகுணபோதினி' ஆசிரியர் முன்பு எழுதியிருந்ததின் கருத்துகளைத் தழுவிப் பாடலாகச் செய்யப்பெற்று, அவ்ரது வசன விளக்கமும் சேர்க்கப்பட்டது.]

கபட நரிகளை மதியேல்.



உள்ளே வருகிறவர்களையும்; சமையற்கட்டு வரை நுழைந்து ஸதா பேசிக்கொண்டிருப்பவர்களையும்;—அவர்கள் யதார்த்த அன்பினரா?—அல்லது கள்ளங்கபடா?—சுயநல காரியார்த்த நட்பா?—என்பதைத் தெரிகிறதிலேயே கண்ணாயிரு. இதைச் சீக்கிரம் அறிய ஒரு சண்டையோ கலகமோ எதிர்ப்படுமானால்—அதினின்றும் அவரது குணம்கண்டு தக்ஷணமே விலகித் தெளிவு பெற்றுக்கொள். உன்னைமீறி எதிர்த்தவரைக் கடைசி வரைக்தும் மறவாதே. அவர்கள் தாங்கள் விளைத்த கலகம் நடந்து நெடுநாளாகி விட்டதென்று உன்னை நெருங்கிப் பழயபடி நட்புகொள்ளவும் மயக்கவும் வருகையிலே, முன்பு அவர்கள் காட்டிய விரோதத்தையும், கைகளை உயரத்தூக்கி, மார்பெல்லாம் மேலே எழநீட்டி உரத்துப் பேசிய அவமான ஆக்கிரகவார்த்தைகளையும் நினைப்பூட்டி அவர்களைத் தூரத் துரத்திவிடு. எப்போது ஒரு பகையை நெஞ்சில் வைத்தபடி உன்னுடன் துலாவ வருகிறார்களோ அவர்களுடைய சகவாசமே வேண்டாம். அவர்களால் ஆயிரம் உதவிகள் கிடைப்பதாயினும் அவர்களின் சிநேகம் வேண்டாம். உன்னை எதிர்த்தவரை நீ மறவாதே. ஆனால், பதிலுக்குப் பதில் எதிர்த்துப் பகைக்காதே. அவர்கள் அக்கிரமமாக எதிர்த்ததை இறைவனிடம் தெரிவித்துவிட்டு, அவர்களின் அநியாயத்துக்கு ஆண்டவன் கூலிதரும் நாளை எதிர்ப்பார்த்திரு. பிறர் பொருள் அபகரித்து அநீதி செய்தவர்களின் வாழ்வு நீடித்ததில்லை. நீதியை எதிர்த்து நலமடைந்தவர்களில்லை. முக்கியத்திலே அவர்கள் முழுமொட்டையாய்ப் போவார்கள். அதாவது, எல்லா சம்பத்தும் இருக்கப் பெண் விதவையாவது போலாம். சகல ஐசுவரியங்களுமிருக்கலாம், மக்கட்பேறு இல்லாதுபோய்விடும். முக்கியமான ஒருவரை எதிர்த்து வேறிடத்தில் விவாகமும் செய்துகொண்டு, குழந்தைகளையும் பெற்றிடலாம். ஆனால், சீக்கிரத்தில் தானே குழந்தைகளும் கடவுளிடமாக, பிறகு புத்திரபாக்கியமின்றியே காலமுற்றும் ஏங்கும்படியாகலாம். பிறர் சொத்தை அக்கிரமமாகத் தன்னுடையதென்போர் சீக்கிரம் தமது சொத்துக்களையும் இழந்து, கணவன் மனைவி இருவரில் ஒருவர் எமபுரம் சேர, கடைசியில் வாழாமலே ஒண்டிமரமாகி அலங்கோலப்பட்டவர்கள் எத்தனையோ பேர். பிறகு இவர்களின் சொத்துக்களும் பிறருக்கு கால் அரைவிலைக்கு விற்கப்பட்டுத் தொலை-

---

“அவள் இந்த வீட்டில் இருந்த காலத்தில் என்னை என்ன அதிகமாகக் கவனித்து விட்டது; அவள் தாயினியிடத்துக்குப் போயிருக்கிற இப்போது எனக்கு என்ன சுகம் தவறிப்போய் விட்டது? அவள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என் காலம் எப்போதுமுள்ளபடி த்தான் நடந்துகொண்டிருக்கிறது” என்று ஒருவர் தமது இளைய மனைவியைப்பற்றிக் கூறினார். ஆனால், மூத்த மனைவியைப்பற்றியோ—“அவள் இருந்தால் நான் இப்படியிருப்பேனா? அவளோடு என் சுகமும் வாழ்வும் போய்விட்டது”—என்றார்.

ந்த கதைகளுமுண்டு. இன்று ஆனு வம் மிஞ்சித்துள்ளிக் குதிக்கலாம். ஆனல் பிறகு பகவானின் தண்ட னைக்காலம் வேறே யிருக்கிறது— அது தப்புவதில்லை. இவ்வளவு தூர் த்தகுணமிக்கவர்களை. அவர்கள் எவ் வளவு நல்லவர்கள்போல் நடந்து கொண்டாலும், சீக்கிரம் அவர்களின் தன்மையை அறிந்துகொண்டு விலகி விடு. ஆனல், அவர்கட்குக் கெடுதி செய்யாதே. அவர்களுக்குப் பிறரிட மிருந்து ஒரு நன்மை லாபம் கிடைப் பதாயிருந்தால் அதற்குத் தடையா கவோ, அதைக் கெடுக்கும்படியா கவோ இராதே. அவரவர்கள் பாவம் அவரவர்கள் அனுபவிப்பார்களென்று விட்டுவிட்டு, உன்மட்டில் நல்ல நடத் தையாக இருந்து, உன் எதிரிகளின் தண்டனைக் காலத்தை நோக்கியபடி நில். தண்டிப்பதும் ஆண்டவனின் வேலையை தவிர உன் வேலையல்ல.



4. மக்கள்.

(466-ம் பக்கத் தொடர்ச்சி.)

348. "மூத்தது மோழை, இளையது காளை."

"மூத்தது முத்தண்ணு."

இவ்விரு பழமொழிகளும் சாதாரணமாக ஜனங்களுடைய பேச்சுவார்த்தைகளில் வழக்கமாக வந்துவிட்டவைகள். சிற்சில சந்தர்ப்பங்களில் ஒரு குடும்பத்தில் ஜனிக்கும் மூத்தகுமாரன் இளையவனைவிட கொஞ்சம் புத்திமட்டமாயிருப்பானென்றும், அதுபோலவே இளையவன் 3-வது குமாரனைவிட கொஞ்சம் புத்திமட்டா யிருப்பானென்றும், அம்மாதிரியே பிற்பிறக்கும் குமாரர்களைவிட, முற்பிறக்கும் குமாரர்கள் புத்திமட்டாயிருப்பார்கள் என்றும் சொன்னபடி. வயதாக வயதாக, தாய்தந்தையர்களின் ஞானம் விசாலிப்பதால் முதிர்ந்த பருவத்திலுண்டான புதல்வர்கள் அதிக புத்திமான்களாக இருக்கக் கூடும். குழந்தைகள் பிறக்கையில் தகப்பனுர்கள் எவ்வளவுக்கு வயது முற்றினவர்களா யிருக்கிறுர்களோ, அதற்குத் தகுந்தபடி அந்தக் குழந்தைகள் பிற்காலத்தில் அதிகப் பிரக்யாதியை அடையுமென்றும், 45-வயதுக்கு மேற்பட்ட புருஷர்களுக்குப் பிறந்த குழந்தைகள் மிகுந்த பிரக்யாதியை யடைந்திருக்கின்றனவென்றும் ஆராய்ச்சியால் தெரிய வருவதாய் மிஸ்டர் ஏ. எப். டப்டன் என்பவர் கூறுகிறுர். எப்பொழுதும் இந்த ஒரு காரணமே மேல் நோக்கி நிற்காது. சில சமயங்களில் இந்தப் பழமொழி பொய்த்துவிடவும் கூடும்.

349. "வேளைக்கு உதவாப்பிள்ளை தாழங்காய்க்குச் சரி."

தாழங்காய் எவ்விதம் பிரயோஜனமற்றதோ. அதுபோலவே, தக்க சமயத்திற்கு உபயோகப்படாத பிள்ளையும் பயனற்றவனேயாவான் என்பது கருத்து. தனக்குக் குழந்தையென்று இருப்பது தனது சமயங்களுக்கு உதவாவிட்டால் இருந்தாலென்ன, இல்லாமற்போனுலென்ன: இரண்டும் ஒன்று

"உன்னைக் காணுமல் ஒவ்வொரு நாளும் என் கண்களில் நீர் ததும்பிக் கொண்டிருக்கிறது. உன் நினைவே பெரிதாகி என்று காண்போமோ என்ற ஆவலோடும் தத்தளித்து நிற்கிறேன். உன்னையும் வீட்டையும் குறித்து நான் அதிகமாக நினைத்துக்கொண்டிருக்கையில் உன்னுடைய நிருபம் சேர்ந்து அதிக சந்தோஷம் உண்டாக்கிற்று. உன் அன்பின் கிலாக்கியம் என் மனதில் தங்க எழுத்துகளில் பதிக்கப்பட்டிருக்கிறது. உன்னுடன் இருந்த நாட்கள் மகா பாக்கியமுள்ள நாட்கள்."

தான். ஒரு தாய்க்கோ, தகப்பனுக்கோ ஒரு பிள்ளை உதவாமற்போவது விவாககாலத்திற்குப் பிறகு வருகிற சண்டை மனஸ்தாபங்களால் தான். விவாகத்திற்குமுன் வரையில் பெற்றோரும் பிள்ளைகளும் எவ்வளவோ ஒற்றுமை தான்.

350. "பெண்ணைக்கொண்டு பையன் பேயானான்."

பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் உதவாமற்போவது விவாகத்திற்குப் பிறகுதான் என்பதை இப்பழமொழி நன்கு எடுத்துக் காட்டுகிறது. பெற்றோர்கள் நன்கு விசாரியாமல் நல்ல இடம், தகுந்த இடம், என்று அவசரப்பட்டுத் தங்கள் குமாரர்களுக்குப் பெண் எடுத்துவிடுவதில், விவாகத்திற்குப் பிறகு பெண்வீட்டார் பையனை வசப்படுத்தி விடுகிறார்கள். பெற்றோர்களை மதிக்காமலிருக்கும்படி போதிக்கிறார்கள். பையனுக்கு மனைவியின் வார்த்தையும், மாமன், மாமியின் வார்த்தையுமே சிலாக்கியமாகப் படுகிறது. அவர்களுக்கே எல்லாம் செலவிடுகிறான். தன் பெற்றோர்களைக் கவனிப்பதேயில்லை. இவ்விதமான தகாத இடத்து விவாகத்தால் பையன்களுடைய படிப்பு, அச்சம், கூச்சம், மரியாதை முதலிய நற்குணங்களெல்லாம் பாழ்பட்டு விடுகின்றன.

351. "ஆணை அடித்துவளர், பெண்ணைப் போற்றி வளர்."

ஆண்குழந்தை துடுக்குள்ளவனாக இருப்பான்; அவனுக்குச் சில சமயங்களில் மெதுவாக இரண்டு அடிகொடுத்துக் கண்டிப்பும் பயமுமாக அடக்கி வரவேண்டும். பயமென்றால் நம்மைப் பார்த்ததும் "வந்துவிட்டானே எமன்" என்று நடுங்கும்படி கண்டவாறு படபடவெனத் தடபுடலாய் கோபாவேசத்துடன் அடித்துத் தீர்த்துவிடுவதல்ல. அல்லது அற்ப குற்றங்களுக்கெல்லாம் நினைத்தபோதெல்லாம் பளீர் பளீர் என்று அறைவதுமல்ல. குற்றத்துக்குத் தகுந்தபடி நிதானமாகக் கண்டித்து, தக்க சமயங்களில் சாந்தமாகவே நற்புத்திகள் கூறி, எல்லாவற்றுக்கும் மேலாக நமது நடத்தையாலேயே அவர்கள் நற்குணமுள்ளவர்களாகும்படி திருத்தி, நாமும் யோக்கியமாகவும் சுசீலர்களாகவும் நடந்து காட்டவேண்டுமென்பது கருத்தாகும். ஆண்குழந்தைகளின் விஷயத்தில்தான் இப்படியென்றால், பெண் குழந்தைகளின் விஷயத்தில் அவர்களை அடிப்பதென்பது சரியாகாது. அவர்களை அன்புடனும், நயபயத்துடனும் திருத்துவதுமே மேன்மையாகும். பெண்கள் விசேஷமாகத் தாய்மார்களின் கண்டிப்பிலேயே தயாராகிறவர்கள். பெண் குழந்தைகள் கெடுவது என்றால், அது தாய்மாரால் நேருவதேயாகும். சில இடங்களில் தாய்மார் துர்ப்பாஷையாகத் தமது குமார்த்திகளை வைதும் அடித்தும் ஜனத்தனமாய்

ஷார்லெட் ப்ரோந்தியாள் தான் ஒரு கிராமத்தில் தனியே வாழ்ந்த வாழ்க்கையையே ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு கதை எழுதினர். நூலாசிரியர்கள் எழுதும் விஷயங்களுக்கு வேண்டிய முக்கிய கற்பனைகள் அவர்களின் சொந்த அனுபவத்திலிருந்தும், கண்ட சம்பவங்களிலிருந்துமே தோன்றக் கூடுமேயன்றி ஆகாசத்திலிருந்து பறித்துவிட முடியாது. கனவுகளும் சில சமயங்களில் கதைக்கு வேண்டிய பிரதான கற்பனைகளைச் சேகரித்துத் தருகின்றன.

நடந்துகொள்வதில், பெண்களும் பதிலுக்குப் பதில் தாய்மார்களை எதிர்க்கத் தொடங்கிக் கெட்டுவிடுகின்றார்கள். தந்தையிடத்திலுள்ள பயம் தாயினிடத்தில் இல்லாமற் போவதற்குத் தாய் கண்டபடி மூர்க்கமாய் நடந்துகொள்வது தான்! சில சமயங்களில் தன் தாய் தனது தந்தையை எதிர்த்து மூர்க்கமாய் நடந்துகொண்டு அடிபடுவதையும் பெண் பார்த்துத் தன் தாயின் பொல்லாத சுபாவத்தை அறிகிறபோது பெண்ணுக்குத் தன் தாயிடம் என்ன மதிப்பிருக்கும்? ஆகவே, தாய்மார் தாங்களும் அன்புடன் நடந்துகொண்டு, தங்கள் பெண்களையும் அன்புடன் கண்டித்துத் திருத்தி நயமாய் அடக்கி, நற்குணமுள்ளவர்களாகும்படியும், விசேஷமாய் வாய் அடக்கி சாந்தகுணமுள்ளவர்களாகும்படியும், வேலையில் சுறுசுறுப்புடன் இருக்கும்படியும் தயாரிக்கவேண்டும். மேலும், பெண் என்பது மற்றவரின் உடைமையேயாதலால், ஏதோ நமது வீட்டில் இருக்கும்வரையில் சந்தோஷமாய் இருக்கும்படி பெண்ணைப் போற்றி வளர்க்கவேண்டுமென்று இப்பழமொழி குறிப்பிடுகிறது. பொதுவாகவே, பெண் குழந்தைகளிடத்தில் தந்தைக்கு எப்பொழுதும் அன்பு அதிகமாகவே உண்டு. பெண்கோணல் செய்வதெல்லாம் தன் தாயிடத்தில்தான். அப்படிச் செய்யினும் கொரேமாக நில்லாமல் அன்புடனே திருத்தவேண்டுமென்பது இப்பழமொழியின் தாத்பரியம்.

பெண்ணைப் பெற்றவர் படும் பாடு!

வரன்தேட வந்தவர் பிள்ளையின் தகப்பனாரைக் கேட்டால், உள்ளே பையனுடைய தாயார், அத்தை இவர்களைக் கேளுங்கள் என்று சொல்லுகிறார். இவர்களைக் கேட்டால், ஏதோ உலக நடவடிக்கை ஏற்பட்டிருக்கிறதே, அதன் பிரகாரம் கைக்கும் காலுக்கு மில்லாமல் விவாகம் செய்துகொள்வது மதிப்புக்குக் குறைவென்று பையன் சொல்லுகிறானென்றும், இராமசாமி யாத்திலே கல்யாணம் விமரிசையாய் நடந்ததென்றும், சீர், வரதக்ஷணை வகையறா 1500-ரூபாய்க் குறைவில்லை யென்றும், தம்முடைய பையனும், பி. ஏ. பரீக்ஷைக்குப் போய்க்கொண்டிருக்கிறானென்றும் கூறுகிறார்கள் கடைசியாக, நிலத்தைவிற்றோ, கொதுவை வைத்தோ பணம் பெற்று அமளிகுமளியாய் லக்கினப் பத்திரிகை கொடுக்கப்படுகிறது. ஆனாலும், மாங்கல்யதாரணமாகி மூன்று முடிச்சுப் போடுகிறவரையில் கல்யாணம் நிச்சயமென்று சொல்லக் கூடவில்லை. விவாகதினம் குறுகக் குறுகப் புதிதாய் ரேட் உயருகின்றது. பையனுக்குப் புஸ்தகத்துக்கு 200-ரூபாய் வேண்டுமென்ற வார்த்தை கிளம்புகிறது. பெண்ணைப்பெற்றவனின் முகத்தை அப்போதுதான் பார்க்கவேண்டும்!

குடும்பக் கணக்குகள்.

("இராஜகுல தீபிகை"யிலிருந்தும் எடுத்துச் சுருக்கியது.)

முதலில் ஜோப்புக்குள் சாதாரணமாயும் கஷ்டமில்லாமலும் வைத்துக்கொள்ளக் கூடிய ஒரு சிறிய குறிப்புப் புஸ்தகமும் பென்சலும் வைத்திருந்து, அதில் அன்றாடம் வரவுவரும் தொகைகளையும், செலவாகும் தொகைகளையும் அப்போதைக்கப் போது குறித்துக்கொண்டே வர வேண்டும். இவ்வாறு எழுதிக்கொண்டால்தான் ஒரு பைசாகூட விட்டுப் போகாமல் எழுதக்கூடும்.

ஃ

வரவுகளைத் தனிப்பக்கமாகவும், செலவுகளைத் தனிப்பக்கமாகவும் எழுதுவது அவசியம். அதனால் சில காகிதங்கள் நஷ்டமாகின்றன என்பதைக் கவனிக்கக்கூடாது.

ஃ

பேரேடு.

மொத்த கணக்கிலிருந்து இனம் வாரியாய்ப் பிரித்து எழுதுவதற்குப் பேரேடு என்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்தப் பேரேடு போட வேண்டுமோ யென்பது அவரவர்கள் வரவு செலவுகளைப் பொறுத்தும் அவரவர்களுக்கு ஏற்படும் பல இனங்களைப் பொறுத்தும் சௌகரியா சௌகரியம்போல் அவரவர்களே யோசித்து வைப்பது நலம். ஆயினும் பொதுவாக (1) சாப்பாட்டுச் செலவு (2) துணிகள் (3) நகைகள் (4) வைத்யம்-மருந்துகள் (5) பத்திரிகை-புத்தகங்கள் (6) எதிர்பாராத சிலவுகள் என ஆறு விதங்களாய்ப் பிரித்தால் போதுமென நினைக்கிறோம். சாப்பாட்டுச் சிலவையும் விரும்பினால் இரு இனங்களாகப் பிரிக்கலாம். (a) சாப்பாடு (b) காப்பி பலகாரம் முதலியவை. இதில் சாப்பாடு இன்றியமையாதது. (c) காப்பி பலகாரம் முதலியதை ஆங்கிலத்தில் (லக்சரி) என்கிறார்கள். அதாவது, இன்பச்சாப்பாடு. அவ்வாறு எழுதிப் பார்ப்பதால் ஒவ்வொரு இனத்திலும் எவ்வளவெவ்வளவு செலவுகள் ஏற்பட்டிருக்கின்றன; எதைச் சுருக்குவது அவசியமெனச் சுலபமாய்க் கண்டுகொள்ளலாம்.

ஃ

மாதாந்தரக் கணக்கு.

ஆங்கிலேய மாதமோ அல்லது தமிழ் மாதமோ (எந்த மாதப்படி

எப்போதும் பிராமணத் துவேஷிகளாகவே இருப்பதும், அவர்களைத் தாழ்த்திப் பேசுவதும் சிலர் இயல்பு. பிராம்மணர்கள் எத்தனையோ தருணங்களில் பிராமண ரல்லாதாரை ஆதரித்துக் காத்து ரக்ஷித்துள்ளார். அநேக பிராமணப் பெரியோர்கள் தாங்கள் பிராமணர்கள் என்பதையே மறந்து பிராமண ரல்லாதாரைத் தங்களின் சொந்த உடன் பிறப்பாக மதித்து பிராணனுக்குப் பிராணனாக நடந்து கொண்டிருக்கிறார்கள். பிராமண சிரேஷ்டர்களாலே தான் இக்குறிப்பை எழுதுகிறவரும் முன்னுக்கு வந்து வித்தியா வந்தரானார்.

கணக்கு வைத்திருக்கிறுமோ அந்த மாதம் முடிந்தவுடன்) ஒவ்வொரு இனத்தின் மொத்தத்தையும் கூட்டிப்போட்டு மொத்தம் சரியாயிருக்கிறதா என்று தணிக்கை செய்து பார்க்கவேண்டும். அத்துடன் எந்தெந்த இனங்களில் கூடியோ குறைத்தோ இருக்கிறதென்று, கவனித்து அதன் காரணங்களையும் அந்தப் பக்கத்தில் எழுதவேண்டும். திருஷ்டாந்தரமாக சாப்பாட்டுச் சிலவு மாமூலுக்கு அதிகம் எற்பட்டிருந்தால், இன்னின்னர் இத்தனை நாட்கள் விருந்தாளிகளாக வந்திருந்ததில் உத்தேசம் இவ்வளவு அதிகம் ஆயிற்றென்றும், அல்லது மாமூலா யிருப்பவர்கள் வேறு எங்காவது சென்றிருந்ததால் அதன் மூலமாய் இவ்வளவு குறைந்ததென்றும், அந்தந்த மாத இறுதியில் குறிப்பு எழுதி வைப்பதவசியம். அவ்வாறு இருந்தால் சுலபமாய் வருஷக் கடைசியில் நாம் எவ்வளவு விருந்தினரை உபசரித்திருக்கிறுமென்பது தெரிவதுடன், வந்துபோன விருந்தாளிகள் கணக்கும் திட்டமாய்த் தெரியும். அதன் மூலமாப் சாத்தியமானவரை அச்செலவைச் சுருக்கவேண்டிய அவசியம் எற்படின் அவ்வாறு செய்வதற்கு ஹேதுகரமாகும். பல மாதங்கள்போல் இருந்து சாப்பிட்டுவிட்டுச் சென்ற பந்துக்கள், "நான் சில தினங்கள் தான் அங்கு சாப்பிட்டேன்" என்று பிறகு சொன்னல், ரிகார்ட் மூலமாய் ரூபிக்கவும் இக்கணக்குகள் ஆதார மாகும்.

ஃ

வருஷாந்திரக் கணக்குகள்.

இவ்வாறே வருஷம் முடிந்தவுடன் 12-மாதக் கணக்குகளையும் ஒவ்வொரு இனத்திலும் கூட்டிப்போட்டுப்பார்த்து எந்த இனங்களில் குறைத்தல் சாத்யமென வீட்டிலுள்ள எல்லோரும் யோசித்து நடக்க உதவியா யிருக்கும்.

இந்த வருஷாந்திரக் கணக்குகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது முன் துணிமணிகளுக்கு எவ்வளவு செலவிடப்பட்டது; இப்போது எவ்வளவு செலவு செய்கிறோம். இவ்வாறு அதிகரித்ததற்கு ஆட்கள் அதிகரித்ததால் உயர்ந்ததா?—அல்லது வேறு காரணங்களாலா எனக் கண்டுபிடித்து, அவசியமானல் குறைக்கவோ கூட்டவோ செய்யலாம். [முக்கியமாய் வீட்டில் குந்தியிருந்து உண்பவர்களுக்கு எவ்வளவு செலவாயிற்றென்று சரியாய்க் கணக்குவைத்து வரவேண்டும். ஏனெனில், அவர்கள் தான் நாளைக்குப் பெரிய சத்துருக்களாகலாம். எனக்கு என்ன செலவிட்டதென்று ஊரார்முன் தூற்றித் தெருமண்ணைவாரித் தெளித்து நாசமாய்ப் போக என்று திட்டவருகிறவர்களாவர்.]

பாத்திரங்கள் கணக்கு

நமது வீட்டிலுள்ள பாத்திரங்கள் என்னென்ன? புதிதாக என்னென்ன வாங்கப்பட்டன? திருடு போனதாகத் திட்டமாய்த் தெரிந்தால் அதன் விவரங்கள் அப்போதைக்கப்போது எழுதிவைத்து, வருஷத்திற்கொரு முறையாகிலும் பித்தளை சாமான்கள் சரிவர இருக்கின்றனவாவென்று தணிக்கை பார்ப்பது அவசியம். (பித்தளை பாத்திரங்களுக்குச் சொல்லியது, மற்ற புஸ்தகங்கள் வேறு பல சாமான்கள், விலை உயர்ந்த துணிமணிகள் நகைகள் முதலிய வற்றிற்கும் பொருந்தும்.



1. அவளே காலன்:—ஒருவனுக்கு மனைவி மிக்க ரூபவதியாயில்லாவிடினும், குணவிசேஷத்தால் இன்பம் பயக்கும் இல்லாளாயிருந்துவிட்டால், அவன் காலத்தைச் சற்றேறக்குறையக் கஷ்டமின்றிக் கடத்திவிடலாம். அப்படிக்கின்றி துன்பம் விளைக்கும் துஷ்டையாய் வாய்த்துவிட்டாலோ அவனை ஆயுள்காலச் சனியன் பிடித்துவிட்டதென்றே சொல்லலாம். அன்னவன் முன்பு செய்த பெரும்பாதகங்களின் பயனையெல்லாம் அந்த ஜன்மத்தில் அந்த மனையாட்டி மூலமாய் அனுபவிக்க வேண்டியதுதான். அவனுக்கு உலகமே துக்கமயமா யிருக்கும். அவளை வீட்டைவிட்டு ஒழிப்பதென்பது அசாத்யமாயிருக்கும். ஒழிக்க முடியாதபடி பிள்ளைக் குட்டிகள் வேறே பெற்று விடுவாள். இவளை விட்டு இன்னொருவளை மணந்தாலோ அவன் பாடு பின்னும் விசேஷமாய் விடும். அடடா! இந்தக் கஷ்டத்திற்குக் கலியாண மென்றும், அத்தகைய கல்யாணத்திற்குக் காரணமானவளை இல்லாள் என்றும் கூறுவது தகுமோ? இல்லை. அது, மணந்தவனைக் கொண்டு போகவந்த காலனேயாகும்.

2. ஏனிப்படி? வேசியை நாடிச் செல்பவன் அன்னவள் தன்னை நேசியா திருப்பினும், தனது முழுப் பிரேமையையும் அவளிடம் வைக்கிறான். விலையைப் பெற்றவர்கள் எப்படிப் பண்டங்களை யளந்தே கொடுக்கின்றனரோ, அவ்வாறே பரத்தையரும் தங்கள் கைக்கு வந்த பணத்திற்கு ஏற்பச் சுகமளிக்கின்றனர். மேலும், ஆடவன் அவளுக்கே அடிமையாயிருந்து அவளது இஷ்டத்தை யனுசரித்து அவளுடன் பழகுகிறான். தனது மனையாட்டி அழகுள்ளவளே யாயினும், விலைமாதரிடத்துள்ள ஆசை அவளிடத்து விளைவதில்லை. பொது மகளிரான அவர்கள் வீட்டை நாடுவதில் தன்னை யொத்தவர்களது போட்டியும், மிதமிஞ்சிய பணச் செலவும், ஊராரது பழிப்பும்—இன்னும் எத்தகைய இடையூறுகள் ஸம்பவித்தாலும், அவற்றையும் கடந்து அந்த வேசிகளது இன்பத்தையே விரும்புகிறான். மாநிலத்து மாந்தர்களுக்கு இத்தகைய வேட்கை விளைவது எதனாலேயோ? எல்லாம் பூர்வ ஊழ்வினையின் இச்சை போலும்!

3. அதிர்ஷ்டம்:—உலகில் பலர் காலை முதல் மாலை வரையில் உடம்பை வளைத்து 8-அல்லது 10-அணுக்களே சம்பாதிக்கின்றனர். சிலரோ 12-மணி நேரத்தில் சில நிமிஷங்கள்

ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்வது கூடாதென்று பிராமணரல்லாதார் தான் விசேஷமாய்த் தடுக்கின்றனரென்றும், பிராமணர்கள் ஆலயப் பிரவேசத்துக்கு ஒப்பினாலும் பிராமணரல்லாதார் ஒப்பார்களென்றும் ஒரு பண்டிதப் பிராமணர் கூறினார். இது வெகு பக்குவமான வார்த்தை. பிராமணரல்லாதாரின் தலைமீது போடுகிற தந்திரமான பழிதான் இது. பிராமணரல்லாதார் தங்களையும் ஹரிஜனங்களைப் போலவே இகழ்வாகப் பிராமணர்கள் நடத்துகிறார்களென்பதை மறந்து விடவில்லை.

கடிதத்தில் தமது கையொப்பங்களை யிட்டுவிட்டு 3000 அல்லது 5000 ரூபா சம்பளம் பெறுகின்றனர். தாசிகளும் சங்கீத வித்வான்களும் பிறரிடம் பணம்பெற்று சுகமனுபவித்துவிட்டு, தாமும் இலவசமாய் அதனுடைய இன்பம் நுகர்கின்றனர். சில தாருக்காரர்கள் மாதக்கணக்காய் உழைத்துவிட்டு ஒரு பைசாவும் அடைகிறதில்லை. சிலர் 1-அல்லது-2-ரூபாயில் திருவுளச்சீட்டு போட்டு விட்டு 1000-ரூபாய் பெருமானமுள்ள பொருளைக் கைப்பற்றுகின்றனர். சிலர் தொடங்கும் வர்த்தகம் எத்தனை வருஷங்களானாலும் விருத்தியாவதில்லை. வேறு இரண்டொருவருக்கு அவர் தொட்ட வியாபாரம் பொன்னாய் விளைகிறது. இந்த விஷயங்களை நோக்குங்கால் 'அதிர்ஷ்டம்' என்பதை ஒத்துக்கொள்ள வேண்டியதாய்த் தான் இருக்கிறது, "அதிஷ்டம்" என்றால் 'காணப்படாதது' என்று பொருள்படுவது அவ்வாறே யாருக்கு அதிர்ஷ்ட மிருக்கிறதென்பது முன்னால் தெரியவராதாம்.

4. எல்லாம் வேளையின் பலன்:—ஒருவருக்கு வியாதி சம்பவித்த காலத்தில் 'சோதிடன்' கிரக கதியினால் அஃது சம்பவித்தது என்கிறான். 'வைத்தியன்' பித்தத்தின் கோளாறு ஜாஸ்தியாய் விட்டது; அதனால் கடும் வியாதி வந்தது என்கிறான். 'மாந்திரீகன்' எது எப்படியிருந்தாலும் விபூதியை உள்ளுக்கும் மேலுக்கும் கொடுத்து அதை நீக்கிவிடுவதாய் உறுதிமொழி கூறுகின்றான். கடைசியில் நோய்க்குமேற்கண்ட கூற்றுகள் யாவும் காரணமாகவே இருக்கலாம். நோய் தீரவேண்டிய வேளைக்குமுன் உண்மையான மாந்திரீகன் அகப்படவு மாட்டான்; நல்ல மருந்தும் கிடைக்காது. மனதின் தன்மையால் வியாதி அதிகரிப்பதும் குறைவதும் இயல்பாதலால், விபூதி மட்டுமல்ல, சுத்த ஜலத்தைக்கூட "இஃது என் வியாதியை நீக்கும்" என உறுதியுடன் கூறிக்கொண்டு சாப்பிட்டால் அவனது நோய் நிச்சயம் தணிந்தேவிடும். ஆயினு மென்? அந்தவேளை வந்தால்தான் அந்தத் தீர்மானம் மனிதனுக்கு உண்டாகும்.

5. ஈசன் செயல்.—மனிதனால் ஆகாத தொன்றுமில்லை என்கிறான். எத்தனையோ புது அதிசயங்கள் மனிதனாலேயே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் என்ன? கடலிலுள்ள பாறைகளில் மோதிக்கொண்ட கப்பல்கள் எத்தனை? ஆகாயத்திலிருந்து எதிர்பாராத விதமாய்க் கீழேவிழுந்த விமானங்கள் எத்தனை? தூரதிருஷ்டியால் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே சமீபத்தில் தனக்கு வரவிருக்கும் ஆபத்தை யறியாமல் மனிதன் ஏன் இறக்கிறான்? நெடுநாள் வாசம் பண்ண எண்ணி உன்னத மாளிகையைக் கட்டி முடிந்தவுடன் அதற்குச் சொந்தக்காரன் தனது எண்ணத்திற்கு விரோதமாய் ஏன் காலனுக்கு வசமாகிறான்? இவற்றை நோக்குங்

வெடி குண்டுக்குள்ள பலனைச் சில வார்த்தைகள் உண்டாக்கி விடுகின்றன, ஒவ்வொருவனுடையவும் பிற்கால கதியானது அவன் மாணவனாயிருக்கையிலேயே நிர்ணயிக்கப்பட்டுப் போகின்றது. சமயத்தைக் கை நழுவவிடாதவன் வாழ்வில் முன்னுக்கு வரக்கூடும். ஆனால், உலக அநுபவமானது, முன்னுக்கு வந்த வாழ்வு எப்படியோ இடையில் உடைந்து முறிந்து ஏமாற்றமாகி, மற்றொன்றைப் புதியதாய்ப் பின்பற்றித் தாவவேண்டியதாய்ச் செய்துவிடுகின்றது.

கால். மனிதனது அற்புத சக்தியை வெல்லும் ஈசுவரனது இச்சை யொன்று தனித்திருக்கிற தென்பது புலப்பட வில்லையா?

6. பிராப்தி.—சமர்த்தர்களான நெசவர்களால் நெய்யப்பெற்ற ஆடைகளிற் சில. அழகிய பெண்மணிகளால் அணியப்பெறுகின்றன. பின்னும் சிலவோ பிணங்கட்கும் புது விதவைகட்கும் போர்த்தப்படுகின்றது. அழகிய செடிகளில் பூத்த மலர்களிற் சில, ஆலயங்களில் தெய்வங்கட்கு அலங்காரமாக்கப்படுகின்றன. மற்றும் சிலவோ பாடைகளுக்கு அலங்கரிக்கவும், சமாதிகளில் இடவும் உபயோகிக்கப்படுகின்றன. கனிகளிலிருந்தெடுக்கப்படும் இரும்பு முதலியனவற்றில் சிலபாகம் வாளாகவும் துப்பாக்கியாகவும் ஆக்கப் பெற்று யுத்த களத்தில் மானிடரது உயிரைக் கொள்ளை கொள்கின்றன; வேறு சில பாகங்கள் உன்னத மாட மாளிகை தளங்களைத் தாங்குபவனவாயும், மானிடரைத் தாங்கிச் செல்லும் சிவிகை முதலியவைகளாகவும் செய்யப்படுகின்றன. ஒரே இனத்தைச் சார்ந்த வஸ்துக்கள் ஒன்றுக்கொன்று நேர் விரோதமாய் உபயோகத்திற்காவது எதனால்? அது தான் பிராப்தி என்பது.

S. N. ஆழ்வார்சாமி.

ஹிந்து கோயில்களில் திருஷ்டி தோஷம் கிடையாது. பிராமணர்களும் மற்ற வகுப்பினரும் தாங்கள் வாங்கும் பொங்கலை மறைத்து உண்பதில்லை. அதே பொங்கலைக் கோயிலுக்கு வெளியில் பகிரங்கமாய் மறைக்காது உண்ண ஒப்புவதில்லை. இவ்விதமே கோயிலுக்குள் ஸ்திரீ புருஷ பேதமில்லை. யாவரும் ஸகோதரமயம். கூட்டத்தில் ஸ்திரீ புருஷர்களென்று பாராமல் முட்டி மோதிக்கொண்டு சென்று பகவானைச் சேவிப்பது ஸர்வ ஸாதாரணம். அதை நடு ரோட்டில் செய்வது கூடாதன்றோ? இடத்துக்கேற்றபடி நடக்குமாறு பெரியோர்கள் விதித்துள்ளார். அதை மீறி நாகரீகம் என்று தவறு வழியிற் செல்வது மௌடீகமாகும். ஹிந்துக்களைக் கிறிஸ்தவ, இஸ்லாம் மதத்தார் தாழ்த்தித் தூஷிப்பது தங்களின் அறியாமையையே விளக்குவதாகும்.



ஹாஸ்ய சஞ்சீவினி



பட்டணவாசி:உங்கள் ஊர்எங்கே?

நாட்டுப்புர வாசி:—கெயக்கே.

பட்டண:—இங்கு என் வந்தீர்?

நாட்டுப்புர:—பொயக்க.

பட்டண:—என்ன, இப்படிக் கொச்சையாகப் பேசுகிறீரே?

நாட்டுப்புர:—அது எங்க ஊரு வயக்கம்.

R. D. கோமளவல்லி யம்மாள்.

ஃ

வியாபாரி:—எங்களுக்கு அதில் காலணாதான் லாபம். விலை குறைத்துக் கொடுக்கக் கட்டாது.

வாங்க வந்தவன்:—எந்த சரக்கைப் பிறர்எடுத்தாலும் உடனே அதில்தனக்கு வருகிற லாபத்தை வெளியில் சொல்லிக்கொள்வதாகநடிக்கும் வியாபாரியை விட ஏமாற்றுதலான மனுஷன் உலகில் வேறேவனுமிரான்.

ஃ

கடைக்காரன் ஒரு பெட்டியை மூன்றரை ரூபாய்க்கு வாங்கி; அதை நாலரை ரூபாய்க்கு விலை சொல்லும்படி தன் குமாரனிடம் கூறிவிட்டு வீட்டிற்குச் சென்றான். அந்த சமயம் அங்கு வந்த

ஒருவன்:—இந்தப் பெட்டி என்ன விலை?

பையன்:—என் தகப்பனார் விற்கச் சொன்னவிலை நாலரை ரூபா.

ஒருவன்:—உன் தகப்பனார் வாங்கிய விலை என்ன?

பையன்:—தலைபோனாலும் அதைத் தான் சொல்லப்படாது என்றான்.

ஃ

ஒரு பட்டிக்காட்டான் ஊருக்குப் புறப்பட்டான்.

அவன் சிநேகிதன்:—எங்கேயடா போகிறாய்?

பட்டிக்காட்டான்:—ஊருக்குடா

சிநேகிதன்:—ஊருக்கு எதற்காக?

பட்டிக்காட்டான்:—யானையைப் பார்க்க.

ஃ

தாதுபுஷ்டி லேகியம் விற்பவர் ஒருவர் மன வருத்தத்துடன் இருந்தார்.

மற்றொருவர்:—என் இவ்விதம் முகம் சோர்ந்து இருக்கிறீர்?

பாபுசிங் என்பவரை விஷம் வைத்துக்கொன்றதான வழக்கில் எதிரிக்கு செஷன்ஸ் ஜட்ஜ் மரண தண்டனை விதித்தார். இறந்தவரது வயிற்றில் 'ஆர்சனிக்' என்ற விஷம் இருந்ததாக ரசாயன பரிசோதகர் அபிப்பிராயம் தர, அதைக்கொண்டு மரண சிக்ஷை விதிக்கப்பட்டது. அப்பீலில், அலகாபாத் ஹைகோர்ட்டார் ரசாயனப் பரிசோதகரின் ரிப்போர்ட்டை ஆதாரமாகக் கொண்டு மரண தண்டனை விதிக்கக் கூடாதென்றும்; ரசாயன பரிசோதகரின் ரிப்போர்ட்டை ஒரு ருசுவாக ஏற்றுக்கொள்வது சட்டப்படி சாத்தியமில்லையென்றும் கூறி எதிரியை விடுதலை செய்து விட்டனர்.

லேகியம் விற்பவர்:—லேகியத்தில் அதிகமாகக்கஞ்சாவைச் சேர்த்து விட்டேன்.

மற்றொருவர்:—அதனால் லேகியம் விலையாகாதென்று கவலைப்படுகிறீரா?

லேகியம் விற்பவர்:—அதை எந்தத் திமிர் பிடித்தவனாவது வாங்கி விடுவான். அதைப்பற்றியல்ல. நான் தின்று ருசிபார்க்க முடியவில்லையே யென்று தான் ஏக்கம் எனக்கு மயக்கம் ஒத்துக்கொள்ளாது.

ஃ

தகப்பனார்:—ஏனடா, இன்னும் இட்டிலி வாங்கப்போகவில்லை? மணி எட்டு அடிக்கப் போகிறதே?

குமாரன்:—என்ன அப்பா! கடிகாரத்திற்குள் மனிதன் இருக்கிறானா?

ஃ

ஒருவர் தன்னுடைய வீட்டு வாயிற்படியில் எவரும் முட்டிக் கொள்ளாதபடி வருவோரெல்லாருக்கும் சொல்லிக்கொண்டிருப்பார். அவரே ஒரு நாள் பலமாக அங்கு முட்டிக்கொண்டார்.

அவர் குமாரன்:—என்ன அப்பா! ஊராருக்கெல்லாம் எச்சரிக்கை செய்து விட்டு, இப்போது நீங்களே முட்டிக்கொண்டு விட்டீர்களே?

அவர்:—ஊராருக்கு யோசனைகள் சொல்லுகிறவன் தான் தன் காரியத்தில் யோசனை யில்லாமற் போகிறான்.

ஃ

எஜமான்:—இந்தப் பாலை யார் இப்படிக் கொட்டினது?

வேலைக்காரன்:—பூனை கொட்டி விட்டது.

எஜமான்:—இரண்டுகால் பூனையா? நாலுகால் பூனையா?

ஃ

தாயார்:—இன்னும் பால் குடிக்க என்னிடம் வருகிறாயே? உன்னைப் போல ஒரு சின்ன பிள்ளை பிறந்து விட்டதா இல்லையா?

குழந்தை:—இரண்டு பேரும் இரண்டு பக்கம் குடிக்கிறோம். எனக்கு ஒரு பக்கம், தம்பிக்கு ஒரு பக்கம். நீதான் இரண்டு பக்கமும் பால் வைத்திருக்கிறாயே.

ஃ

அவன்:—ஏனடா பட்டணம் போனாய்?

இவன்:—பட்டணம் பொடி வாங்கப் பட்டணம் போனேன்.

ஃ

காபி ஹோட்டலில் க்ஷத்திரியர்களும், வைசியர்களும், சூத்திரர்களும் வெளியிலேயே கிடந்து உண்ண வேண்டியவர்கள். இம்மூன்று வகுப்பையும் சூத்திர வகுப்பாகவே இழிவு படுத்திவிட்டு, பிராமண குலத்தில் அவதரித்தவர்கள் மட்டுமே உள்ளுக்குச் சென்று புசிக்கலாம் என்று ஏற்பாடு. இதனாலேயே ஹரிஜனங்களைப் போலவே க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களும் நடத்தப்படுவது விளங்கும். இங்ஙனம் மிதி படுகிற மூன்று வகுப்பினரும் ஹரிஜன ஆலயப் பிரவேசத்தைத் தடுப்பதாகப் பேசுவது, பிராமணர்கள் தாங்கள் தப்பித்துக் கொள்வதற்குச் சொல்லும் சாதுரிய வார்த்தையேயாகும். இதை நாம் துவேஷத்துடன் எடுத்துக் காட்டாமல், சாதாரணமாக நடந்து வரும் உண்மையையே இங்கு விளக்கினோம்.

கடன்காரர்:—என் கடன் மூன்று ரூபாயை எப்போது கொடுக்கிறது? எத்தனை நாள் வந்து அலைகிறது.

லேகியம்விற்பவர்:—அதற்குப்பதிலாக லேகியம் வாங்கிக்கொள்கிறீரா?

கடன்காரர்:—லேகியம் எனக்கு எதற்கு? பணத்தைக்கொடும். என்ன மெதுவாக ஏமாற்றுகிறீரே?

லேகியம் விற்பவர்:—இல்லை. இல்லை, லேகியம் விற்றானதும் கொடுக்கிறேன்.

கடன்காரர்:—என்னிடம் ரூபாய் பெறும்போது லேகியம் விற்றுக் கொடுப்பதாகவா சொன்னீர்? நல்ல சாக்கு ஐயா இது.

ஃ

ஒருவர் பல விருத்திக்கு டானிக் மாத்திரைகளை புட்டி புட்டியாக விற்றுக்கொண்டிருந்தார். அவரிடம் ஒருவர் சென்று,—"நல்ல பலமுள்ளவர்களாவதற்கு என்ன செய்வது?

டானிக் விற்பவர்:—என்னுடைய டானிக் மாத்திரைகளை—

அவர்:—எனக்கு உமது மாத்திரை வேண்டாம். வேறு விதமாய்ப் பலம் பெறுவதற்கு ஏதாவது வழியிருந்தால் சொல்லுங்கள்,

டானிக் விற்பவர்:—நாள்தோறும் நாலு வேளை மாத்திரையைப் பேதிக்குச் சாப்பிடுங்கள். பலம் வரும்.

ஃ

மேரி:—உனக்கு என்ன சிக்கு?

ஜான்ரோஸ்:—எனக்கு சிக்குஒன்றுமில்லை. என் முந்திய புருஷனுக்கு ரொம்ப சிக்காம். அதனால்தான் பழய ஆசையால் கோய்ப் பட்டவள் போல் இப்படி வாடிவதங்கி இருக்கிறேன்.

ஃ

முன்பு பிரஸவத்திற்கு வாங்கித் தீர்ந்துவிட்ட காலியான பிராந்தி புட்டி யொன்று மேஜைமேல் இருந்தது. அதை ஒரு சிறுவன் கண்டு இது எது அப்பா பிராந்தி புட்டி என்றான். அதற்குத் தகப்பனார் நேற்று குடிப்பதற்கு வாங்கினேன். இன்று காலைக்குள் தீர்ந்து விட்டது என்றார்.

குமாரன்:—அவ்வளவு ருசியாயிருக்குமா? எனக்கும் அப்படியே குடிப்பதற்குக் கற்றுக்கொடு அப்பா.

ஃ

ஒருவன்:—என்னடா வீடு கட்டிவிட்டாயா?

மற்றவன்:—வீடு முழுதும் கட்டவில்லை. ஆனால் கட்டி முடிந்தவரை போதும். கிரகப் பிரவேசம் நாளைக்குச் செய்யப்போகிறேன்.

ஒருவன்:—வீடு கட்டப்போன பிறகுதான் அதன் கஷ்டம், செலவுகள் தெரிந்ததோ?

ஃ

உபாத்தியாயர்:—உமக்கு அதிக கௌரவமா? எனக்கு அதிக கௌரவமா?

வக்கில்:—சச்சரவு எதற்கு? வாருங்கள், இரண்டு பேரும் கோர்ட்டுக்குப்போய் தீர்த்துக்கொள்வோம்.

S. R. வேணுகோபால், ஸ்ரீரங்கம்.

குருடியின் கல்யாணம்.

“மாப்பிள்ளை இன்னும் கிடைக்கவில்லை. கிடைத்ததும் திருப்தி யில்லை. ஏதோ அவளுக்குக் கல்யாணம் ஆய்விட்டது என்று ஒரு பேர் இருந்தால் போதும். எனக்கு அவள் மகளாய்ப் பிறந்துவிட்டதற்கு என் காலம் உள்ளவரை எப்பாடு பட்டாவது வயிறு பசிக்காமல் காப்பாற்றிவிடுகிறேன். ‘குருடிக்கு இன்னும் கல்யாணம்’ இல்லை என்று ஊரார் சொல்லிப் பழிப்பதை நான் காதுகொடுத்துக்கேட்க முடியவில்லை. சிலர் அவளை வேசையாகப் போவதற்கு நான் தயாரிப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்த அநியாயம் எங்கேயாவது உண்டா? பெற்ற தந்தை இப்படிச் செய்ய இணங்குவானா? இவ்வளவுக்கும் ஒரு தாலி அவள் கழுத்தில் ஏறிவிட்டால் ஊர் வாய் உடனே அடங்கி விடும்” என்றான் ராமதாஸன்.

ஹீரலால்:—எனக்குச் சொன்னால் நானே உமது பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்கிறேன்.

ராமதாஸன்:—அப்படியானால், தங்களின் செய்திகளையும், குடும்ப வரலாறுகளையும் நான் விசாரித்தாக வேண்டும். என் குமார்த்தி குருடியானாலும், அவள் பகுத்தறிவுடன் அமைந்த ஜீவனேயுள்ள ஒரு மனுஷியே யாவாள். எதையும் முன்பின் நன்றாகக் கேட்டறியாமல் முடிவு சொல்லக் கூடாதல்லவா?

ஃ

இந்த சமயத்தில் ஹரிநாதவஸு அவ்விடம் வந்தான். அவனைக் கண்டதும் ஹீரலால் மௌனமாய் எழுந்து, பிறகு தான் வருவதாகக் கூறிக்கொண்டு சென்றான். ராமதாஸன் இதில் ஏதோ விசேஷம் இருக்கிறதென்று நினைத்தவனாய் ஹரிநாதவஸுவை நோக்கி இந்தப் பெரிய மனிதரை உனக்குத் தெரியுமோ என்றான்.

ஹரிநாதவஸு:—ஹீரலாலைப் பற்றியா கேட்கிறீர்கள்? அவர் மிகவும் பெரிய மனிதர்தான். முன்பு கலெக்டர் ஆபீஸில் குமாஸ்தாவாக இருந்தார். பானதாரியானதால் தனது குடி வெறியிலே கலெக்டரைக் கட்டிக்கொண்டு முத்த மிடப்போக, உடனே அந்த உத்தியோகம் போய் விட்டது.

ராமதாஸன்:—ஹீரலால் அவ்வளவு முதிர்ந்த மதுபானியா?

ஹரிநாதவஸு:—ஆம். அவன் சரித்திரத்தை முழுதும் கேளுங்கள். உத்தியோகத்திற்குப் பிறகு அவன் சிலரைப் பங்காகச் சேர்த்துக் கொண்டு ஒரு கடை வைத்தான். நல்ல லாபம் வந்தது இரண்டு தாஸிகளை வைத்துக்கொண்டான். மற்றவர்களின் லாபத்தையும் தானே விழுங்கி ஏப்பமிட்டான். இதில் கடன்கள் அதிகரித்தன. வியாபாரம் நின்றுபோய்க் கடை மூடியாய்

விட்டது. இதானபிறகு ஒரு கிராமத்தில் ஸ்கூல் மாஸ்டரானுன். அக்கிராமத்தில் மத்தியம் அசப்படாததால் அந்த வேலையை விட்டுவிட்டான். அதானதும் ஒரு நியூஸ் பேபர் போட ஆரம்பித்தான். இதில் சிலநாள் நல்ல லாபம் வந்து கையில் இரண்டு பணம் ஓடிக்கொண்டிருக்கையில், ஒரு அவதூறு கேஸ்தோன்றி போலீஸ் டாணுவுக்குப் போய் வரவேண்டி யிருந்ததால் பயமுதித்து நியூஸ்பேபரைச் கைவிட்டு எங்கேயோ மாயமாய்ப் போனுன். சில நாட்கள் கழித்துத் தற்செயலாய் மிதந்து வந்தவன்போல் வந்து நமது ஜமீன்தார் குமாரரான சுசீந்திரரிடம் ஏதோ வேலை செய்ய ஆரம்பித்தான். ஆனுல் சுசீந்திரரிடம் 'பானகடத்தை' இல்லாததைக் கண்டு தானுகவே அவ்விடம் விட்டகன்ருன். பின் வேறு உபாயமொன்றும் தோன்ருமல் நாடகங்களை எழுத ஆரம்பித்து அதை அபிநயிப்பதிலும் கற்றுக்கொடுப்பதிலுமாக நாடகசாலைக்கு மானேஜ ராஞன். நாடகத்துடன் ஊர் ஊராய்த் திரிந்து தன் செலவுகளுக்குக் கட்டாமல் அந்த யாத்திரையை விட்டுவிட்டான். இந்தப் பலவித ஸம்ஸாரத்தில் எந்தக் கிளையும் உறுதியாய் அகப்படாமல் விலகிக் கதியில்லாதவனுய்த் தன் அக்காளான ரம்பாவின் வீட்டிற்கு இப்போது வந்திருக்கிருன்.

ராமதாஸ்:—ஹீரலால், ரம்பாவின் தம்பியா? ரம்பாவின் கணவன் என் குமார்த்தியை விவாகம் செய்துகொள்வதாகவும், தனக்கு அதற்காக 500-ரூபாய் ரொக்கமாகத் தரவேண்டுமென்றும் கேட்க, நானும் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறேன். தனக்கு முன் ஒரு சக்களத்தி யிருப்பதில் என் குமார்த்திக்கு இஷ்டமில்லை. ஆனுல், வேறு எவரும் மணக்க ஒப்பவில்லையே! என் செய்வது?

ஹரிநாதவஸு:—ரம்பா மிகவும் உத்தமியே. ஆனுல், தன் கணவனுக்கு இன்னெருத்தி வரக்கண்டு சகிக்கமாட்டாள். இந்த விவாகத்தை எவ்விதமேனும் கெடுத்துவிடுவாள். அவள் தம்பி ஹீரலாலுக்குத் தருவதானுல் உடனே அதற்குச் சம்மதிப்பாள். ஆனுல், வரன் படித்துக் கெட்ட துராசாரனுக இருப்பதால் யோசிக்கவேண்டி யிருக்கிறது. நான் மெதுவாக ரம்பா வீட்டிற்குப் போய் அங்கே என்ன நாடகம் நடக்கிறதென்று பார்த்து வருகிறேன்.

ராமதாஸன்:—அப்படியே செய்யுங்கள். எவ்விதமோ ஏழையின் பெண்ணைக் காப்பாற்றுங்கள்.

ஃ

ஹரிநாதவஸு புறப்பட்டுச் சென்ருன். அவனுக்கு முன்பே சென்ற ஹீரலால் தன் தமக்கையிடம் குருடியின் விவாகத்தைப்பற்றிக் கூறினுன். ரம்பா எவ்விதமேனும் தன் கணவனுக்குக் குருடியைத் தராதிருக்கும்படியான பிரயத்தனத்தில் திருஷ்டியா யிருந்தாள். ஆகவே, தன் ஸ்வய காரியத்துக்காகத் தம்பியைத் தேர்ந்தெடுத்துத் தூபம் போட்டாள். ஹீரலால் தன் அக்காளிடம் கேட்டு ஸமாசார மெல்லாம் விவரமாய் அறிந்துகொண்டு, "ரூபாய்

பெற்ருேரும், கூடப்பிறந்தோரும், முதல் மனைவியும், மக்களும் தவிர, மற்ற சகலமானவற்றையும் காசு கொடுத்துப் பெற்றுக் கொண்டு விடக்கூடிய அவ்வளவு சுலபமாய்க் கிடைக்கத் தக்கவைகள் தானும்

500 - கொடுப்பது நிச்சயம்தானே? இந்தக் குருடியை விவாகம் செய்து கொண்டால் பணம் விவாகத்திற்கு முன்பே வந்துவிடுமோ?" என்று கேட்டான். ரம்பா அந்த விசாரத்தில் அவன் ஸந்தேகத்தைத் தீர்த்தாள். அக்கா. எனக்குப் பணம் இப்போது அவசியம் வேண்டி யிருக்கிறது. நான் ராமதாஸன் வீட்டுக்குப் போகிறேன் என்று சொல்லி எழுந்தான். வெளி யில் நின்ற ஹரிநாதவஸு இவ்வள வும் கேட்டுவிட்டுச் சிரித்தபடி அவ் விடத்தை விட்டு அகன்றான். பாவம், குருடியை நல்ல இடத்தில் சேர்ப் பித்துவிடவேண்டுமென்பது அவ னது ஆவலாக இருந்தது. ஜமீன் தாரின் குமாரனான சுசீந்திரரின் வீட்டைநோக்கி விரைந்து நடந்தான்.

ஃ

ஹீரலால் ராமதாஸனிடம் திரும்பவும் வந்தான். அடுத்த அறை யில் குருடியான 'பிரபா' இருந்தாள். ஹீரலால் பேசுவதை யெல்லாம் கேட்டபடி நின்றாள் அவனது கண் டஸ்வரம் அதி கடூரமா யிருந்தது.

ஹீரலால்:—என் அக்காவுக்கு சக்களத்தி யாகும்படித் தங்கள் பெண் ணைக் கொடுப்பானேன்?

ராமதாஸன் — (துக்கபாவத் தோடு) என் செய்வேன்? அவ்விதம் கொடாவிட்டால்அவளுக்குக்கல்யாண மாகும் வழியைக் காணேன்! இத் தனை வயதாகியும் விவாகமாகவில் லையே என்ற தூஷணைகளைச் சகிக்க முடியவில்லை நானோ ஏழை. பூ விற்றுக் காலக்ஷேபம் செய்கிறவன். என் பெண்ணை வேறு யார் விவாகம் செய்துகொள்வார்கள்? அவளுக்குக் கண்ணுமில்லை. வயதும் ஆய்விட்டது

ஹீரலால்:—கண் இல்லாமற் போனாலென்ன? எனக்குச் சொன் னால் நானே கல்யாணம் செய்து கொள்கிறேன். இக்காலத்தில் ஜனங்கள் வயதான பெண்ணையே அபேக்ஷிக்கின்றனர். நான் "இந்தியன் நியூஸ்" என்னும் பேபருக்கு எடிடரா யிருந்தபொழுது பெண்க ளுக்கு வயது வந்து பெரியவர்க ளான பிறகு விவாகம் செய்யவேண்டு மென்று எத்தனையோ ஆர்டிகல்களை (விஷயங்களை) எழுதியிருக்கிறேன். அதைப்படித்து ஆகாசமே கர்ஜிக்க ஆரம்பித்தது. பால்ய விவாகம் சீ! சீ! பெரிய பெண்களின் விவாகம்தான் செய்ய வேண்டும். சிறு பெண்களை மணந்துகொண்டு காமசாந்திக்காகத் தாசிகளை வைத்துக்கொண்டு காத்துக் கிடப்பது எத்தனை மௌடீகம்? வாருங்கள், தேசோன்னதிக்காக என்னை (Example) எக்ஜாம்பிலாக (உதாரண ஸ்வரூபமாய்) ஸெட் பண்ணி (Set மாதிரியாய்) ஏற்பாடு செய்யும்; நானே இப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்கிறேன்.

ராமதாஸன்:—விவாகத்தைப் பற்றிமுன்பே வார்த்தை நிஷ்கரிஷை யாய்விட்டது. இப்பொழுது மாற்ற முடியாது. அதுவுமல்லாமல் இந்த விவாகத்திற்கு ஜமீன்தாரின் குமாரர் சுசீந்திரரே எஜமானரா யிருக்கிறார். அவர் வீட்டிற்கு நான் பூ கொடுப்பவ னதால், என் விஷயத்தில் தயாள சிந்தையுடன் விவாகத்தை நடத்த முன் வந்திருக்கிறார். அவர் உன் அக்காவின் புருஷனான கோபால பாபுவிடம் ஸம்பந்தத்தை நிச்சயித்து அவரே 500-ரூபாய் இனமாக அவ னுக்குத் தருவதாகவும் பேசி முடித்தி ருக்கிறார்.

ஹீரலால்:—சுசீந்திரரின் உள் அபிப்பிராயத்தை நீங்கள் எப்படி அறிய முடியும்? பெரிய மனிதர்க ளின் மர்மத்தை யறிவது கஷ்டம்! அவனை நீ நம்பாதே. எனக்கு அதக

500 ரூபாவும் கிடைக்கும் வழி செய்துவிடு. நான் விவாகத்துக்குத் தயார். சரி. அதிக ஆபாஸம்; உங்கள் வீட்டில் மத்யமில்லையா? அநேகமாய் இராதென்று தெரிகிறது

ராமதாஸன்:—(ஆச்சரியத்துடன்) மத்தியமா? எதற்காக அந்தப் பாழும் பானத்தை என் வீட்டில்நான் வைக்கவேண்டும்?

ஹீரலால்:—மத்திய மில்லையா? கேவலம் பண்டிதனைப்போல் அபிநயிப்போர்கூட மத்யம் இல்லாமல் இரார்களே! இக்காலத்தில் பெரிய வீட்டுக்கார்களின் ஸம்பந்தத்தைச் செய்யவேண்டுமானால் மதுபான வகைகள் புட்டிபுட்டியாக வீட்டிலிருந்தே தீரவேண்டும். இல்லாவிடில் கௌரவமே உண்டாகாது.

ஃ

"அந்தக் கௌரவம் இந்த மூடாத்மாவான ராமதாஸுக்கு ஒரு போதும் தெரியப் போவதில்லை" என்று சொல்லிக்கொண்டே ஹரிநாதவஸு உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டதும் ஹீரலால் இவன் எங்கே வந்தான், என்று வெறுப்புடன் வெளியே சென்றுவிட்டான்.

ஹரிநாதவஸு தான் ரம்பாவின் வீட்டில் மறைந்திருந்து கேட்டயாவற்றையும் கூறி, இப்போதைய வரனான கோபால பாபு தன் மனைவியானரம்பாவின் கோபத்துக்கு நடுநடுங்கியவனாகி விவாகத்துக்குத் துணிய மனமற்றிருப்பதாய் சுசீந்திரரின் காலில் விழுந்து வேண்டிக்கொண்டதையும் தெரிவித்தான். ராமதாஸன் தன் புத்திரியின் விவாகம் நின்று போனதைக் கண்டு ஏங்கினான்.

ராமதாஸன்:- இந்தஹீடலாலுக்கே தந்துவிடலாம்! ஆனால், அவன் பெரிய மதுபானி. என் பெண்ணைத் தக்கபடி போஷணை செய்யமாட்டானே?

ஹரிநாதவஸு:—படித்துக் கெட்ட அந்த நீசனுக்குத் தருவதைவிடக் கிணற்றில் தள்ளலாம். நான் ஒரு நல்ல ஏற்பாடு செய்துவிட்டேன். கோபாலபாபு மறுத்துவிட்ட பிறகு ஜமீன்தாரின் குமாரர் சுசீந்திரரே தங்களின் புத்திரியை மணக்க ஒப்புக்கொண்டுவிட்டார். ஒரு உத்தம கன்னிகை வீணாகி விடுகிறதே யென்று அவரது தர்ம பத்தினியும் இந்த ஏற்பாட்டுக்கு முக்கிய துணையாக நின்று என் பக்கமாகப் பேசி, நிச்சயமான முடிவு செய்துவிட்டாள். எனக்கு ஒரு தங்கை யிருந்து அவள் குருடியா யிருந்தால், என் கணவனுக்குக் கொள்ளுவதில் அதிர்ப்தி படுவேனா? என்றுஅந்த அம்மணி மிக உருக்கமாகக் கூறினாள். சுசீந்திரரின் தந்தையான பெரிய ஜமீன்தாரும் தமது மருமகள் செய்த ஏற்பாட்டுக்கு அது வெகு தயாளபூர்வமானதென்று கொண்டாடி ஆசி கூறினார். கடவுள் தம்மை நம்பிய ஏழைகளை நிச்சயமாகக் காப்பாற்றுவார்.

ஃ

ராமதாஸன் பிரமித்து நின்றான். பகவானை மனஸ்பூர்வமாகக் கை கூப்பி வணங்கினான். அடுத்த நிமிஷம் சுசீந்திரபாபுவும் அவன் மனைவியும் அங்கு வந்தனர். சுசீந்திரன் ராமதாஸனைத் தழுவிக்கொண்டான். இனி நீங்கள் என் மாமனார் என்றான். சுசீந்திரரின் மனைவிகுருடியான பிரேமப்பிரபாவை அணைத்துக்கொண்டு முத்தமிட்டாள்.

ஃ

இந்த ஸம்பவத்திற்குப் பிறகு இரண்டாவது வாரத்தில்சிறியஜமீன்

தார் சுசீந்திரபாபுவுக்கும் குருடியான பிரேமப்பிரபாவுக்கும் விவாகம் மங்களகரமாய் நிறைவேறிற்று. ராமதாஸனின் பூரிப்புக்குச் சொல்லவும் வேண்டுமா?

[ஆநந்த கதா கல்பகம் நான்காம் வால்யத்தில் "பிரேமப்பிரபா" கதையில் சேராமல் தவறி விடப்பட்டுப் போனதின் ஒரு பகுதியைத் திருத்தியதாகும் இது.]

நமது பரஸ்பர அன்பில் ஓர் தவறு.

பரஸ்பரம் நாம் ஒருவருக்கொருவர் வாய்மொழியாலும், கடிதங்களாலும், உபசாரம் வழங்கி வருகிறோமேயன்றி, அந்தந்தப் பிரதான சந்தர்ப்பங்களுக்கு அருகிலிருந்து, அவ்வித அவசர காலங்களுக்குத் துணையாக வந்து கலந்து உதவிக்கொள்கின்றோமில்லை. ஒரு முக்கியத்திற்கு வரக்கூடாதென்றாவது; அதை அலக்ஷியமாகவாவது, யாருக்கோ வந்த விருந்தென்றாவது, பராமுகத்தில் இருந்துவிடுகிற திரஸ்கார சித்தமும் நமக்கு அப்படிக் கடினமாக உண்டாகி விடவில்லை. அவ்வளவுக்கு அன்னியராய்க் கன்மனத்தினராகவும் நாம் மாறி இழித வகையினராய்க் கெட்டுவிடவுமில்லை. ஒருவர்மீதொருவர் இரக்கமும், உருக்கமும், சந்திப்பின் ஆவலும், மகிழ்வும் பூரிப்பும், உல்லாச புன்னகைகளும் கொள்ளத்தக்க மிருதுமயமான ஈரப்பசையுள்ள தயாளத்துவ மனச்சார்பிலேயே நாம் இன்றும் இருந்துகொண்டிருக்கிறோம். இனியும் இருப்போம்—இருக்கக்கடவோம். ஆனால், காலசோதனையோ, பொருத்தமின்மையோ, யாதோ—சமீபத்திலிருப்பினும், தூரத்திலிருப்பினும் உடனே ஓடிவந்து சந்தித்துத் தழுவிக்கொள்ளவேண்டிய ஒரு முக்கிய தருணத்தில் எவ்விதமோ சில தடைகள், பேத சிந்தனைகள், சிக்கல்கள் சிருஷ்டிக்கப்பட்டுப்போய்விடுவது வியப்பும் வியஸனமும் தரற்பாலதாம். இது நமது உறவு நேசச் சங்கிலியின் கரணைகள் எவ்விதம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதவைகளாக இருந்துவருகின்றன வென்பதை நிரூபணம் செய்கின்றது. ஒரு அடியைப் பிடிக்க இன்னொரு அடியையும் பிடி என்பதை மறந்து போய், நாம் ஒரு அடி தூரம் விலகிவிட, அது பல அடிக்கும் விலகிப் பிரியும்படியாகி, இப்படி ஒருவருக்கொருவர் பரஸ்பரம் உதவிக் கொள்ள முடியாமற் செய்துவிட்டதாகத் தோன்றுகிறது. இந்தப் பெரும் பிழைப்பாட்டினை நாம் மனதார உணர்ந்து கொண்டு, இனிமேலேனும், ஒரு அடியைப் பிடிப்பதற்காக இன்னொரு அடியையும் பிடிப்பதற்கு அன்புடன் முயன்று சேர்ந்து ஒருவரது விசேஷங்கட்கு மற்றவரும் ஓடிவந்து கலந்து உழைத்துத் துணையாகி மகிழக்கடவோம்.

முயற்சி தத்துவம்.

லட்சியங்களுக்காகப் பாடு படு வதிலுள்ள சந்துஷ்டியைக் குறித்துப் பண்டித ஜவஹரிலால் நேரு பின் வருமாறு கூறுகிறார்,— தனிப்பட்ட நபர்களைப் போலவே தேசங்களும் இரு வழிகளில்தான் வாழ்ந்து வர முடியும் அவைகள், இப்போதைய நிலைமையே சிறந்ததென்று நினைத்து அதில் பரம திருப்தி யடைந்திருக்க லாம்; அல்லது அநீதி, அக்கிரமம் முதலியவைகளை எதிர்த்து இடை விடாது போராடி வரலாம். முதல் முறையானது மலைகளிலிருந்து வழிந் தோடி வரும் வியாதிகளையும் அழுக்கு களையும் சகித்துக்கொண்டு அதன் கீழுள்ள பள்ளத்தாக்கில் வசிப்பதை ஒக்கும்; மற்றொன்று நம்பிக்கையுடன் மலையுச்சியை அடைவதற்குச் செய் யும் முயற்சியைப் போன்றது.

"மலையடிவாரத்தில் வாழ் வதே சிறந்த தென்று நினைத்தவர் களுமுண்டு. இந்தியர்களிற் பலரும் அவ்வித மனோ பாவமுடையவர்களா கவே இப்பொழுது இருந்து வருகி றார்கள். அவர்களின் அபிப்பிராயங் கள் சரியானதாகஇருக்கலாம். ஆனால், மலையில் அதிர்ச்சி ஏற்படுகையில் அதிலிருந்து விழும் பாறைகளால் தங்களுடைய வீடுகளுக்கு அபாயம் ஏற்பட்டுவிடக்கூடு மென்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது."

"கஷ்டமும் அபாயமும் முன் நிற்பதைப் பொருட் படுத்தாமல் மலை மேல் ஏறிச் செல்வதா?—அல்லது மலையடி வாரத்திலேயே தங்கியிருந்து மலை மீதிருந்து விழும் கற்களால் நசுங்குண்டுபோய் விடுவதா? என் பதை இந்தியர்கள் முடிவு செய்து கொள்ளவேண்டும்."

விருந்தினர் உபசரிப்பு.

'வீட்டுக்கு வந்த விருந்தினர் களுக்கு விசேஷ போஜனங்களைப் பரிமாறு வதைவிட, உண்மையான அன்பும் அனுதாபமுமாய், அவர் களின் வருகையால் தாங்கள் மிக்க ஆநந்த உணர்ச்சியை எய்துவதாகக் காண்பித்துக் கொள்வதே மேலா னது. சமையல் எவ்வாறிருப்பினும், நெய், தயிர், பழங்கள்கூட இருந்து விடின் பரிமளப்பட்டு விடும். தாம்பூ லம் அநேகருக்குத் திருப்தியைக் கொடுக்கும். விருந்தினர்களுக்காகத் தாங்கள் எவ்வித சிரமமும் எடுத்துக் கொள்ளாமல் வீட்டிலிருப்பதையே பரிமாறி யிருப்பதால், அவர்களின் வரவால் தங்களுக்கு எவ்விதக் கஷ்ட நஷ்டமுமில்லை யென்று வணக்க மாகத் தெரிவித்துக் கொள்ளவேண் டும். விருந்தினர்களுக்கு ஆகவேண் டிய காரியங்களுக்குத் தங்களால் ஆகின்ற சிறு உதவிகளை யெல்லாம் செய்து மகிழ்விக்கவேண்டும். முக் கியமாக, தங்கள் வீட்டை அந்த விருந்தினர்கள் அன்னிய வீடாக எண்ணாமலும், சொந்த வீட்டிலிருப் பதுபோற் கருதும்படியும் செய்து விடவேண்டும். சில விருந்தினர் மிக வும் வெட்கப்படுவோரா யிருப்பர். அது அவர்களது நன்னடத்தையின் அறிகுறி. அத்தகையோரை தமது அன்பால் மேன்மைப்படுத்தி நாணா மல் தாராளமாயிருக்கும்படி செய்ய வேண்டும். அதிகச் செலவில் ஒரு தினம் உபசரித்துச் சோர்வதைவிட, நிதானச்செலவில் பலநாளும் உண் மைப்பேசி உபசரித்துக் கௌரவிப் பது உயர்தரமானதாகும்.

ஆறு வினாக்கள்

பின் வரும் ஆறு வினாக்களை நண்பரொருவர் கேட்டதற்கு நான் உலக அனுபவத்தை யொட்டி விநோதமான விடை தந்தேன். அதனை இங்கு குறிக்கின்றேன்.

1. அரசன் என்பது யார்?

2. சுயராஜ்யம் என்பது என்ன?

3. அஹிம்ஸை என்பது என்ன?

4. மதுவிலக்குஎன்பது என்ன?

5. ஜாதி என்பது என்ன?

6. மகாத்மா என்பது யார்?

இவற்றிற்கு விடையாவன:—

1. அரசன் என்பது. நம்முடைய 'வெற்றுடம்பு'—அதாவது, எவ்வித உணர்ச்சியுமின்றி வெற்றுடம்பாய்க் கிடப்பது. (பிரேதம்.)

2. அவ்வெற்றுடம்புக்கு முக்கியமாய் வேண்டியது சுவாசம். (காற்று) அக்காற்றானது தங்குதடையின்றித் தானாக அவ்வெற்றுடம்புக்குச் சுயேச்சையாகப் போய்கொண்டும் வந்துகொண்டும் இருந்தால் அதையே சுயராஜ்ய மெனலாம்.

3. ஆண்டவனால் அளிக்கப்பட்ட சுயராஜ்ய மென்னும் காற்று வெற்றுடம்புடன் உயிர்கொண்டு ஜீவகளையைப் பெறுகிறது. அத்துடன் முக்கியமாய் வேண்டியது அறிவு. அந்த அறிவு தர்ம சிந்தையோடு சாந்தமுடன் நிலவி யிருத்தல் முக்கியம். அதற்கே அஹிம்ஸை என்று கூறுவதாகும்.

4. மது விலக்கு என்பதும் அறிவுடன் கூடிய ஓர் பகுதியே அறிவு இருந்தால் மட்டும் போதாது. வஞ்சனை, பொய், களவு, கொலை, காமம் முதலியனவற்றை நீக்கவேண்டியது அவசியம். அறிவுடையாரிடத்தும் இத்தீய குணங்களைச் சாதாரணமாகக் காணலாம். அவற்றைக் களைந்தெறிவதே உயர்ந்த அறிவாம். இதேபோல் மது விலக்கு என்பது சன்மார்க்கத்துடன் கூடியிருத்தலால் பேரறிவின் துணைகொண்டு அவ்விலக்கில் வெற்றி பெறவேண்டும். மது என்பதற்குத் தித்திப்பு என்பது பொருளானால், கெட்ட தித்திப்புகளை விலக்கிச் சுகப்பட வேண்டுமென்பது கருத்து.

5. தேகத்தின் ஒவ்வொரு அவயவங்களையும் ஒவ்வொரு பிரிவாகக் கூறலாம். அப்பிரிவுகளைக் கூறுமிடத்து ஒவ்வொரு ஜாதிப் பெயரையும் அதற்கு இடலாம். இதில் உயர்ந்தது, தாழ்ந்தது என்று இல்லாமல் ஒவ்வொரு அவயவமும் அதாவது கால், கை, கண், வாய் என்ற பல ஜாதிகளும் தேகத்திற்கு வேண்டியதே. ஆதலால் இந்த அவயவங்களை மானிட ஜாதிக்கு ஒப்பிடலாம்.

6. மஹாத்மா என்பது முதலில் கூறிய வெற்றுடம்பு. சுவாசம் (காற்று) அறிவு, இவைகளுடன் கூடி மதுவிலக்கு செய்து காம விரோத லோப மத மாச்சரிய மென்னும் பாதகச் செயல்களை ஒழித்து இருக்கக்கூடியதாய் ஒரு ஜீவன் இருந்தால், அதற்கு ஜீவாத்மா அல்லது மஹாத்மா என்றும் பெயர் கூறிக் கொள்ளலாம்.

அரசனுக்குத் தன் பிரஜைகள் இல்லாவிட்டால் எப்படியோ, அப்படியே இவ்வெற்றுடம்புக்கும் சுவாசம் அறிவு முதலியன இல்லாவிடில் பயன்படாது; பிரேத சமானம் தான். மஹாத்மா என்னும் காந்தி மகான் தற்காலம் எவ்வித கீர்த்தியுடையவராய் விளங்குகிறாரோ, அதே போன்று முன்கூறிய விதமாய் ஸத்குணங்களுடன் கூடி யிருக்கும் உத்தம ஜீவனும் புகழுடன் விளங்கும்.

S. R. முனிசாமி பிள்ளை, ஸ்ரீரங்கம்.

கடலின் அலைகளிலிருந்து ஒரு படிப்பினை.

கடற்கரையில் முதலிலேயே அலைமிகப் பெரிதாக மேலே எழும்பிக் கரைமேல் வெகுதூரம் வந்து மோதுவதில்லை. ஒவ்வொரு அலையும் அதற்கு முன்வந்த அலையைப் போலவே சற்றுமேலே எழும்பி வந்து அடங்கிப் போகுமென்று தோன்றுகின்றது. ஆனால், உண்மை அப்படி யில்லை. அலைகள் ஒன்றின்பின் ஒன்று சிறிது சிறிதாக உரத்து மேலெழுந்து கொண்டுவர, சற்று நேரத்துக்குள் ஒரு அலை மிகப் பெரிதாய் அதிக உயரம் வானத்தில் எழும்பிக் கரைமேல் வெகுதூரம் வந்து மோதுகின்றது. சரியான ஏற்பாடுகளின்மேல் நடத்தப்படுகிற ஒவ்வொரு காரியமும் இத்தன்மையானதே. சில சமயத்தில் அது அப்படியே நின்று போனதாகத் தோன்றும்; சில சமயம் அதற்கு ஆதாரமே அற்றுப் போனதாகக் காணப்படும்; ஆயினும், கடைசியில் சிறுசிறு காரிய முயற்சிகளெல்லாம் ஒன்றுகூடி உயர்ந்து பெரிய வேகத்தோடும் வந்து எடுத்த காரியத்தைக் கைகூடச் செய்துவிடும். ஆகவே, சலிப்பில்லாத ஒருவர் முயற்சித்த காரியமானது இடையில் சோர்ந்ததுபோல் தோன்றுவது, புலி பின்னடைந்து பதுங்குவதை யொத்ததாகும். பதுங்கிய புலி பிறகு பாய்வதுபோல, காரியமும் கடைசியில் வெற்றியின் கரையை எட்டி ஜெயம் உண்டாக்கி விடும்.

நம்முடைய தேசம் நம் நேச பாத்திரத்திற்கு இருப்பிடமானது. கடவுளால் நமக்கு அளிக்கப்பட்ட வாஸஸ்தலம் இதுவே இதில் நம்மை நேசிக்கும் குடும்பங்களும், நம்மால் நேசிக்கப்படும் குடும்பங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. மற்றவர்களைவிட இவர்களிடம் மனதத்துவமும் உணர்ச்சியும் நம்மனத்திற்கு ஒத்தனவாயும் நெருங்கினவாயும் இருக்கின்றன. நாம் தொழில் செய்வதற்காஸ்பதமான இடம் நம்முடைய தேசமே.

சீன தேசத்து ஆசரணைகள்.

சீன தேசத்தில் கூண்டு போன்ற ஒரு மரத்தினால் செய்யப்பட்ட ஜெயில்கள் உண்டு. அவை மிகவும் சிறியவைகளாயும், உடம்பை வருத்துவனவாயும் இருக்கின்றன. அவை மூன்று அடி உயரமும், இரண்டரை அடி நீளமும், பதினான்கு அங்குல அகலமு முள்ளவை. கூண்டின் மேல்தட்டில் ஒருவித சிறிய கதவு உண்டு. அதன் வழியாகக் குற்றவாளியைக் கூண்டினுள்ளே செலுத்துவது வழக்கம். நாட்கள் கணக்காகவும், வாரங்கள் கணக்காகவும் இந்த "இடுமுடுக்"கான கூண்டில் கைதிகளை யடைத்து வைப்பது மிகவும் பரிதாபகரம்.

2. படகுப் பட்டணம்:—சைனாவில் காண்டன் நதியில் படகுப் பட்டணம் என்பது ஒன்று உண்டு. ஆறுகளும், வாய்க்கால்களும், ஏரிகளும் அநேக ஏழை ஜனங்கள் வாஸம் செய்யும் இடமாக இருக்கின்றன. அநேக துன்மார்க்கர்களும் குற்றவாளிகளும் படகுப் பட்டணங்களில் வசித்துக் கொண்டு அகப்படாமல் திரிவார்கள்.

3. சீனர்களின் மதம்:-பலவகைப் பட்டது. முக்கியமாய் மூன்று மதங்கள் வியாபகமானது. நியாய மதம் ஒன்றும், புத்தமதம் ஒன்றும், கன்ப்யூஷிய மதம் ஒன்றுமாம். நியாயமதம் மோக்ஷ தேவனும், பாப விநாஷியும் ஜலராஜனும் ஆகிற கடவுளினிடத்து நம்பிக்கை வைத்து வணங்கும்தன்மையது. இந்த மதத்தில் வேறு அநேக முரட்டுக் கொள்கைகளும் காணப்படுகின்றன.

4. புத்த மதம்:—சைனாவில் புத்த மதஸ்தர்கள் மூன்று திவ்ய புத்தர்களை வணக்கம் செய்வதுண்டு. இறந்த கால புத்தரையும், நிகழ்கால புத்தரையும், எதிர்கால புத்தரையும் விக்கிரக ரூபமாக அவர்கள் தொழுவார்கள்.

5. கான்ப்யூஸி மதம்:—இது கற்றறிந்தவர்களாலும், ராஜாங்கத்தாராலும் அனுஷ்டிக்கப்படுவது. கான்ப்யூஸியஸ் என்பவர் கிறிஸ்து பிறப்பதற்கு ஐந்நூறு வருஷங்களுக்கு முன் பிறந்தவர். ஒவ்வொரு தேசத்திலும், ஒவ்வொரு மதத்திலும் பெரிய போதகாசிரியர்களுக்கும், அரிய குணத்தினருக்கும் கணக்கில்லாத துன்பம் வந்து சேர்வது போலவே கான்ப்யூஷியஸுக்கும் அநேக கஷ்ட சோதனைகள் நேர்ந்தனவாம். பற்பல இடங்களில் அவர் உழன்றுழன்று திரிந்து திரிந்து கடைசியாகத் தம் மதத்துக்குப் பல சீடர்களைச் சேர்த்துக் கொண்டார். அவர் சீடர்கள் முதல் வகுப்பில் தர்மம் என்பதையும், இரண்டாவது வகுப்பில் நியாயம் என்பதையும், மூன்றாவது வகுப்பில் ராஜாங்க முறைகளையும், நான்காவது வகுப்பில் தத்துவ விஷயங்களையும் படிப்பது வழக்கம். கான்பியூஷியஸுடைய பிரியசீடர் ஒருவர் இறந்துவிட்டமையால், அவர் மிக்க வருத்தமடைந்து கதறிக்கொண்டே மோக்ஷம் சேர்ந்தாரென்பது கதை.

விகட கவியே நீ உண்மையைச் சொல்லுகிறாய்; ஆனால், கடுமையா யிராதே.

6. சைந விக்கிரகங்களுக்குப் பூஜை:—மாம்ஸம் படைப்பதும், வர்னக் காகிதங்கள் கொளுத்துவதும், நமஸ்காரம் செய்வதும் ஆகிய காரியங்களாலே சைனுக்காரர் அவர்களுடைய விக்கிரகங்களைப் பூசிப்பார்கள். சைனுக்காரர்களுடைய குருக்கள் பான்ஸஸ் என்னப்படுவார்கள். விக்கிரகங்களைப் பூசிப்பதன்றி இறந்தவர்களையும் அவர்கள் பூஜிக்கவேண்டுமென்பது அவர்களுடைய மதக்கோட்பாடு. அப்படி அவர்கள் செய்வாராயின் அது அவர்களுக்குள் வெகு குறைவாய் எண்ணப்படும்.

7. விக்கிரகங்களுக்கு சிக்ஷை:—சைனுக்காரர்களுக்கு அதிருப்தியான விஷயம் யாதாயினும் காணப்படுமோயின்,—நம் ஊரில் குடும்பத் தொந்தரைகள் அதிகமாக நேர்ந்தால், "உன் கோயில் இடிய—கோபுரம் விழ" என்று கடவுளை நிந்திக்கும் வழக்கம்போல்,— சினுக்காரர்களும் நிந்திப்பதோடு அதற்கு மேலாகவும் துள்ளிக் குதிப்பார்கள். விக்கிரகங்களை அவைகளிருந்த நிலைகளினின்றும், மேடைகளி லிருந்தும், கர்ப்பக்கிரஹங்களிலிருந்தும் கோபத்தோடு இழுத்து, கழுத்தைப் பிடித்துத் தள்ளி, தெருத் தெருவாய்க் கோலங்காட்டி, அவைகளைக் கடவுள் நாய்கள் என்று வைது, அவைகளுக்கு அதன் பிறகு வர்னம் கொடுக்கவும் மூலாம் பூசவும் கோயில் கட்டவும் பிரசாதங்கள் படைக்கவும் முடியாதென்று பிரம்பா லடிப்பார்கள். தங்கள் காரியங்கள் ஆகிற வரைக்கும் தான் சைனு வாசிகள் விக்கிரகபூஜை செய்வார்கள் தங்கள் காரியம் ஆகாவிடின் அனர்த்தம் தான்.

8. வேறு பல தேவதைகள்:—ஒன்பது மனிதத் தலையுள்ள புலியையும், ஆறு தலையுள்ள முதலையையும், வெள்ளைத் தலையை யுடையதும் சிவந்தவாலை யுடையதும் குதிரை போன்றதுமாகிய மானையும், ஒரு கண்ணுள்ள பறவையையும், நாய்த் தலையையும், ஆறு கொம்புடைய கல்யானையையும், காற்றுத் தேவதையையும் இன்னும் பற்பல விநோத விசித்திரமான தேவதைகளையும் சைனுக்காரர்கள் தொழுவார்கள்.

8. பெரிய வாய்க்கால்:—இது சுமார் எழுநூறு மைல் நீள முள்ளது. முப்பதாயிரம் மனிதர்கள் நாற்பது வருஷம் கஷ்டப்பட்டுக் கட்டிய கால்வாய். இது முதலில் அதி ஸமத்காரமாய் உத்தேசிக்கப்பட்டு வெகு அழகாய் முடிக்கப்பட்டுள்ளது.

10. பெரிய மதில் சுவர்:—சைனுவின் மீது டார்டார ஜாதியார் படையெடுத்து வாராதிருக்கும்பொருட்டு ஆயிரம் வருடங்களுக்கு முன் இது கட்டப்பட்டது. இது ஆயிரம் மைலுக்கு அதிக நீளமும், முப்பது அடி உயரமும் உள்ளது. அது இடையிடையே நாற்பது அடியுள்ள கோபுரங்கள் வாய்ந்திருக்கின்றது. மண்ணால் சுவர் வைக்கப்பட்டுப் பக்கங்களில் கருங்கல்லும் செங்கல்லும் அமைக்கப்பட்டது. அது கட்டி முடிப்பதற்குள் எத்தனையோ ஆயிரக்கணக்கான உயிர்கள் சேதமாயினவென்றும், அது கட்டுவதற்காக ஆன செலவில் பாதியாவது இப்போது கிடைக்குமாயின் சைனு ராஜ்யத்திற்குக் குபேர சம்பத்து உண்டாய் விடுமென்றும் சொல்கிறார்கள்.

11. சலவைக்கல் பாலம்:—சைனுவில் மிக அழகிய பாலம் அல்லது வாராவதி ஒன்றுண்டு. இரண்டு பக்கங்களிலும் எழுபது கால்கள் நிறுத்திப் பிரமாண்டமான சிங்க உருவங்களால் அலங்காரம் செய்யப்பட்டு, வெள்ளைச் சலவைக் கற்களால் கட்டப்பட்டது.

12. பீங்கான் கோபுரம்:—நான்கின் பட்டணத்திலுள்ள பீங்கான் கோபுரம் ஒப்புயர்வற்றதும், மிகவும் அழகியதுமான கட்டிடம். அது இருநூறு அடி உயரமுள்ளதாம். அதின் ஒன்பது அடுக்கு மெத்தையும், பீங்கானுல் செயயப்பட்ட ஓட்டின் கூரையும் பார்க்கப் பார்க்க மனதுக்கு வெகு ரம்மியம் செய்யும். இந்தப் பீங்கான் கோபுரத்தைப்போல் இங்கிலாந்து முதலிய வேறெந்த இடங்களிலும் காணமுடியாது.

13. நீலக்கல் கோயில்:—லாம் போவுக்குச் சமீபத்தில் நீலக்கல்லாற் கட்டப்பட்ட ஒன்பது அடுக்கு மெத்தைகளுள்ள கோயில் ஒன்று இருக்கின்றது. அந்தக் கோயிலைப் பார்த்தால் ஆகாயத்தையும் பூமியையும் அளாவி நிற்கும் ஒரு பெரிய ராக்ஷத ராஜன்போல் காண்கிறது. சலவைக்கல்லால் கட்டினபோதிலும், இவ்வளவு அழகாயிராதென்றும், அந்தக் கட்டிடத்தில் காலகதியால் அவைகளில் முளைத்திருக்கும் செடி கொடி முதலியவைகள் அதை மிகவும் அழகுபடுத்துகின்றனவென்றும் சொல்கிறார்கள்.

14. பளுவான மணிகள்:—லக்ஷம் பவுன் நிறையுள்ள மணிகள் எத்தனையோ இருக்கின்றனவாம். இவைகள் சப்தம் போட்டால் காது அடைத்துப் போகுமாம். ருஷியாவில் மாஸ்கோ பட்டணத்திலுள்ள பெரிய மணியானது மூன்று லக்ஷம் பவுன் நிறையுள்ளது. இது தவிர உலகத்தில் பெரிய மணிகள் சைனுவில் உள்ளனவென்று சொல்லலாம்.

15. சைனு பாணவேடிக்கைகள்:- இது மிகவும் பெயர்போனவை. பாணங்களின் உருவங்கள் மிகவும் ஆச்சரியம் தரத்தக்கவை. திராக்ஷைப் பந்தர் ஒன்றைப் போல் சைனுக்காரர்கள் தங்கள் பாண வேடிக்கையில் காட்டுகிறார்கள். அதனுடைய இலைகளும் கொடிகளும் பழங்களும் வெகு விநோதமாய்த் தெரிகின்றன. அநேக ஆகாய கிரணங்கள் மினுக்கென்கிற நக்ஷத்திரங்களைப் போலவும், புஸ்ஸென்கிற பாம்புகளைப் போலவும் மிக அருமையாய்த் தோன்றுகின்றன. நெருப்பு மழை காட்டும் பாணங்கள் அற்புதமானவை. சைனு வாசிகள் தமது பாண வேடிக்கைகளால் நடுராத்திரியைப் பட்டப் பகலென ஆக்கி விடுவார்கள். அநேகம் பறவைகள் ஏககாலத்தில் ஆகாயத்தில் பறப்பதும், அவைகளைச்சுற்றி அநேககொடிகள் பிரகாசிப்பதும் மிக அபூர்வமான காட்சி. எல்லாவற்றையும்விட, சக்ரவர்த்தி யொருவர் வீற்றிருக்க, அவரது சிரசின்மீது பச்சைப் பந்தல் போலமைத்து, ஆயிரம் பதினாயிரம் வெடி சப்தம் உண்டாகச் செய்வது மிகச் சிறந்த வேடிக்கையென்று சொல்லப்படுகிறது.

(மற்றதில் முடிவு.)

அயல் நாடுகளுக்கு யாத்திரை போகிற திறமையும், அங்கு தன் புத்தியால் பிறக்கக் கூடிய ஞானமும் எல்லோருக்குமே பொருந்தி விடுவதில்லை. சிலர் தேசயாத்திரை செய்து விட்டுத் தங்களின் ஊர்களுக்குத் திரும்பி வந்த பிறகும் ஒன்றும் தெரிந்துகொள்ள மாட்டாமலும், நூதன அறிவு படைத்திராமலும், தாங்கள் போனபோதிருந்த புத்தி யுடனேயே வெறுமனே திரும்பி வருகிறவர்களாகிறார்.



இன்று கூடிய நமது கடையில் பஞ்சாப் லாலா சிங் பின்வருமாறு கூறினார். "நான் எனது மாற்றாந்தாய்க்கு ஒரு ரிஜிஸ்தர் கடிதம் அனுப்பினேன். அதில் நான் கண்டிருந்ததாவது:—"என் மாமாவின் தங்கையை வீட்டோடுசேர்ந்து வெகுவாக உறவாடி நின்ற அன்னியனாகிய சுபாஸ் என்பவன் துன்மார்க்கமாய் அழைத்துச் சென்று குடும்ப கௌரவத்தைக் கெடுத்துவிட்ட விஷயம் உனக்குத் தெரியும். அதுபோலவே, உனது குமாரன் என் மனைவியை மயக்கிக் கெடுத்துவிட ஓயாமல் என் வீட்டைச் சுற்றியபடி இருப்பதால், அவன் இனி என் வீட்டு வாயிலை மிதிக்கக்கூடாது. இங்கு எக்காரணங்கொண்டும் வரவும் கூடாது. அவன் ஒருவனைத் தவிர நீயோ, மற்றவர்களோ, உன் பெண்களோ என் இல்லத்திற்கு வருவதைப் பற்றி நான் ஆக்ஷேபிக்கவில்லை" என்று குறிப்பிட்டிருந்தேன். இதை என் மாற்றாந்தாய் பெற்று கனத்த கோபங்கொண்டு, அது முதல் என் வீட்டுக்கு வாராமலே நின்று விட்டாள். இவள் நியாய ஒழுங்கின்படிச் செய்யவேண்டியதென்ன? என் ரிஜிஸ்தர் கடிதம் பெற்றதும், என்னிடம் நேரில் வந்து, "எப்படி எனக்கு ரிஜிஸ்தர் கடிதம் எழுதலாம்?—என் குமாரன் அவ்விதம் ஒழுங்கு தப்பி நடக்க மாட்டான்; நடந்திருந்தால் அவனை நான் கண்டிக்கிறேன்" என்று சொல்லி என்னுடன் வாதிட்டோ, சச்சரவு செய்தோ, என்னை சமாதானப்படுத்தியோயிருந்தால், அது யோக்கியதைக்கும் ஒழுங்குக்கும் பொருந்தியதாயிருக்கும். அவ்விதம் செய்வதை விட்டுவிட்டு, தனது குமாரனின் ஒழுங்கீனமான நடத்தையைக் கண்டியாமல் என்மேல் மூர்க்கமான கோபம் கொள்வதானால், இதைவிட கண் மூடித்தனமும் ஒழுங்கற்ற தன்மையும் வேறில்லை. இத்துடன் போய் விட்டதா? பத்து மாதங்கட்குப் பிறகு நான் வீட்டில்லாத சமயம் பார்த்து என் மாற்றாந்தாயும் அவள் குமாரனும் பெண்ணும் என் வீட்டிற்கு வந்து நான்கு நாள் இருந்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இது எனக்குத் தெரியாதென்று என் மாற்றாந்தாய் நினைத்துக்கொண்டிருக்கிறாள். என் இவ்விதம் திருட்டுத்தனமாக வரவேண்டுமோ? நான் வீட்டிலிருக்கிறபோது வரத் தனது ஒழுங்குகெட்ட தன்மை பின்னடையச் செய்கிறதா? நான் வரக் கூடாதென்றவனையும் இட்டு வந்தது சரியா? என் மனைவிக்கு என்னவோ மிக்க வேண்டியவர் போல் காட்டி உள் நுழைந்து தங்கி உறவு பிடிப்பதும், என்மேல் பகையும் கோபமும் வேற்றுமையும் காண்பிப்பதும் என்ன ஒழுங்குகெட்ட நடத்தை? இது புருஷனையும் மனைவியையும் பிரித்து நடுவில் 'சந்து' உண்டாக்க வைக்கிற மித்திரபேதத் துரோக சண்டாளத்தனமல்லவா? நான் அந்த மூடமான என் மாற்றாந்தாயின் கோபத்தை லக்ஷியமே செய்யப்போவதில்லை; அவனை ஒரு யோக்கியதையான

மனுஷியாக மதிக்கப் போவதுமில்லை. அவள் என் இல்லத்திற்கு வராதொழிவதே என் மனதுக்குப் பெரிய ஆறுதலாக இருக்கும்'' என்றார்.

ஃ

"இத்தகையோர் ஒரு நல்ல குடும்பத்தைக் கெடுக்கிற புல்லுருவிகள், சண்டாளிகள். இவர்களைப் போன்றவர்களால் குடும்பங்களில் விளையும் சச்சரவுகளுக்கும் பொல்லாப்புகளுக்கும் அளவேயில்லை. இவர்களுடைய மதிகெட்ட தன்மையானது எது நியாயம்—எது ஒழுங்கற்றதன்மை என்பதைக் கவனிப்பதேயில்லை என்னை அப்படி இப்படிச் சொல்லலாமாவென்று மட்டும் கோபவெறி பிடித்துத் துள்ளிக் கொக்கரிப்பதைத் தவிர, அப்படிப் பிறர் சொல்லும் முறைகேடான விஷயங்கள் உண்மையா, பொய்யாவென்று ஆராய்வதே யில்லை. அதற்குத் தகுந்த நல்ல புத்தியும் இருப்பதேயில்லை. உன் குமாரன் திருடிவிட்டானென்றால், "எப்படி என் குமாரன்மீது திருட்டுத்தனம் கற்பிக்கயிராம்'' என்று சண்டை பிடிக்கிறார்களேயன்றி, திருடியது மெய்தானாவென்று அறிய முயல்வதேயில்லை. இன்னோர் திருந்த முடியாத ஜென்மப் பிரகிருதிகள். இவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து எவ்வளவு தூரத்துக்கு விலகியிருக்கிறார்களோ அவ்வளவுக்கும் நன்மையே'' என்று நன்னெறி அல்லா பிச்சை இயம்பினார்.

புளியோதரைத் தேவர் எழுந்து நான் ஒரு வித்துவ சிரோன்மணிக்குச் சென்னையில் வாடகைக்கு வீடு தேடப்போன விசித்திரத்தைக் கூறுகிறேனென்று சொல்லத் தொடங்கினார். "நான் அந்த வித்துவானிடத்தில் நன்னூல் பாடம் கேட்டுக்கொண்டிருந்தபோது இருவருமாகச் சென்னைக்கு வந்தோம். என்னை ஒரு வீட்டை வாடகைக்குத் தேடி வருமாறு அனுப்பினார். நான் குடும்பப் பெண்களுள்ள வீட்டில் மூன்று அறைகளை நயமான வாடகைக்குப் பேசிக்கொண்டு வந்து, நேர்த்தியான இடம் என்றேன். அதற்கு அவர் என்னைப் பார்த்து, "உனக்குப் புத்தி போதாது; அந்த இடத்தில் அம்புஜத்தோடு வசிக்க முடியாது. பெண்கள் சாதாரணமாகப் பிறருடைய குணத்தைக் கண்டுபிடித்து விடுவார்கள்; அதிலும், குடும்பப்பெண், வேசிப்பெண் என்பதை ஒரு நிமிஷத்திலேயே அறிந்து விடுவார்கள். குலமாதர்கள் உள்ள இடத்தில் வேசிப் பெண்ணான அம்புஜத்தோடு நான் குடியிருக்க சௌகரியப்படாது; அவ்வீட்டுக்காரரும் ஒப்பமாட்டார். இது தெரியாமல் குடும்ப ஸ்திரீகளுள்ள வீட்டைத் தேடிப் பிடித்து வந்தாயே; உன் புத்தி என்ன புத்தி?'' என்று இடித்துச் கூறினார். பிறகு தாசிகள் பலர் வசிக்கும் வீடொன்றைப் பார்த்து அங்கு இரண்டு அறைகளை எடுத்துக்கொண்டார். வித்துவானின் உபநாயகியான அம்புஜமும் ஊரிலிருந்து வந்து சேர்ந்தாள். "இந்தத் தாசி வீட்டுச் சௌக்கரியம், நீ பார்த்து வந்த குடித்தன வீட்டில் கிடைக்குமா? இங்கு, நம் இஷ்டப்படி உல்லாஸமாக இருப்பதுபோல், குடும்ப மாதர்கள் உள்ள வீட்டில் நடக்க முடியுமா? இப்போது இரண்டுக்குமுள்ள வித்தியாசம் தெரிந்ததா:'' என்றார். நானும் இதிலிருந்து ஒரு புதுப் படிப்பினையைக் கற்றுக்கொண்டேன்'' என்றார்.

ஃ

"வித்துவான்களுடையவும், பண்டிதர்களுடையவும், கவி பாடத் தெரிந்தவர்களுடையவும் பொதுவாகப் படித்தவர்களுடையவும் போக்கே சில இடங்களில் கோணலாகத்தான்

இருக்கிறது. இவர்களிற் சிலர் வெளிக்கு மிக்க யோக்கியர்களாக நடித்துக்கொண்டு அந்தரங்கத்தில் மிக்க கொடிய காமிகளாயும், துர் நடத்தை யுடையோராயும், ஏமாற்றிப் பறிப்போராயும், தங்களுடைய கவித்துவ சக்தியால் பிறரை மயக்கி எல்லா மரியாதைகளும் பெற்றுக்கொண்டு, தாங்கள் அடைந்த உதவிகளுக்கு நன்றி காட்டாதவர்களாகவும், செய்நன்றி மறந்தவர்களாகவும் இருக்கிறார்கள். சிலர் பெரியநய வஞ்சகர்களாகவும் முடிகிறார்கள். அவர்கள் பெற்றுள்ள கல்வியோ, எவரும் பிரமிக்கும்படியா யிருக்க, அவர்களுடைய செயல்களோ பிண நாற்றம் நாறுவதா யிருக்கின்றன. அவர்களுடைய வித்வத் தன்மையிலே நமக்குள்ள பிரீதியால் அவர்களை விட்டுப் பிரிந்து விலகிக் கொள்ளவுங் கூடவில்லை. அவ்விதம் விலகினாலும், மீண்டும் அவர்களாகவே வலிய நமது வீட்டுக்கு வந்து குலாவத் தொடங்கி விடுவதில் மறுக்கவும் முடிகிறதில்லை. இவர்கள் நம்மிடம் பெற்ற பொருள் ஒன்றுக்குக் கிரயம் கொடுத்தால், அதைப் பிரீதியோடும் நாம் திருப்பிக் கொடுத்து விட்டாலுங்கூட, அதற்காக அவர்கள் ஒரு நன்றி விசுவாசமுங் காட்டுகிறதில்லை. இதைப் பட்டுத் தெரிந்த நான் ஒரு பண்டிதருக்கு என் கடையிலிருந்து எடுத்துக்கொடுத்த சாமானுக்கு அவர் தந்த ரூபாயை வாங்கிக்கொண்டு விடுவதுதான் சரியென்று மறுக்காமல் பெற்றுக்கொண்டு விட்டேன். அந்தப் பண்டிதர் 'தன்னிடத்திலிருக்கிறது இந்த இரண்டே ரூபாய் தான், வேறு ஒரு காசும் கிடையாது' என்று சொல்லிக்கொண்டே தான் கொடுத்தார், நான் வாங்கிக்கொள்ள மாட்டேனென்று அவர் எண்ணம் போலிருக்கிறது. எனக்கு இந்த இரண்டு ரூபாயைப்பற்றி லக்ஷியமில்லையானாலும், அதைக் கிரயமாகப் பெறுமல் தனது கடைச் சரக்கை இனுமாகக் கொடுத்தானே என்று நன்றி காட்டுகிற தன்மையற்ற ஒரு வழிப்பறி மனுஷ்யனுக்குத் தந்தாவதென்னவென்று வாங்கிக்கொண்டேன். என்ன செய்யலாம் சிலபண்டிதர்களுடையகோணல்கள் இப்படியிருக்கின்றன. எல்லாரையும் நான் இவ்விதம் பழிக்க வரவில்லை'' என்று பண்டரிபுரநாதர் பகர்ந்தார். இத்துடன் நமது கடையும் பூர்த்தியானது.

'பகதூர்' போன்வண்டுசெட்டியார்.

சாந்தப்படத் தனியிடம்.

கலகம் நேர்ந்து மனோ சமாதானம் பாழ்த்துப் பல பல அலைகளாய்ச் சிந்தனைகள் மேன்மேலும் ஓடுபவனுக்கு ரயில் வேஸ்டேஷனும் தேவாலயமும் ஏற்ற இடங்கள். அங்கே அவன் கோபத்தணலில் ஆத்திரம் மிஞ்சினால் உடனே முட்டி மோதிக் கொள்ளுவதற்கு வேண்டிய பெரிய சுவர்கள் உண்டு. தானே தணிந்து மனம் ஆறுதற்பட ஏகாந்த சுகமும் அங்கு உண்டு. அந்த இடத்தையே விட்டுஓடிச்சென்றுவிட, ரயில்வேஸ்டேஷனில் ஒரு டிக்கட்டுமுண்டு. தன் மனக் கொதிப்பிலிருந்து உதிக்கும் எண்ணங்களை வேண்டிய வரை எழுதிக்கொட்டப் போதிய பொழுதும் அங்கு உண்டு.



பத்மா

(436-ம் பக்கத் தொடர்ச்சி.)

iii

நாட்கள் சில சென்றன. இரவிக் கிரணங்கள் சிதறி விழுந்து மாளிகையின் மேற்றிசையைப் பொன்மயமாய்த் திகழச் செய்தது. வெகு தொலையில் நின்ற குளிர்-தருக் கூட்டம் ஒரு பச்சை கோடுபோல் நீலவானோடு சேர்ந்து விளங்கியது. ஆகாயத்தில் காற்று வீசத் துவக்கியது. அப்பொழுது திடீரென மேகத்தைப் பிளந்து கொண்டு வெளிப்படும் மின்னல் போல் பத்மா மாடியிலிருந்த தனது பெற்றோர் அறையினின்றும் வெளி வந்தாள். அவளது ஒளி வீசும் பேரழகால் அவ்விட முழுதும் விளக்க முற்றாற்போல் பொலிவடைந்தது. சுருள் சுருளாய்த் தொங்கிய அவளது மைகுழலின் சுகந்த வாடையும், கசங்கி நெளிந்த புத்துடையின் மணமும் மாடி யெங்கும் பரவின. அப்பனிமொழியாளின் சுந்தர முகத்தில் இளஞாயிற்றின் இளங்கதிரொளி படவே, அவள் தன் தலையை ஒரு பக்கம் ஒயிலாய்த் திருப்பிக்கொள்ள அவளது கன்னங்கள் அழகுத் திரளாய் ஒளிர்ந்தன. பத்மாவின் பார்வை தென்புற மிருந்த பூங்காவை யடைந்தது. ஆங்கு அரளிச் செடிகளின் குளிர் நிழலில் மனோகரன் அசைவற்று நின்றுகொண்டிருந்தான். அவன் மேனியின் நிறம் பசுந்தளிர்களினிடையே தெளிந்து காணப்பட்ட அழகிய அரளிப் பூக்களின் நிறத்தை ஒத்திருந்தது. சிவப்படாது சுருண்டு கிடந்த அவன் தலைமயிரின் கருநிறம் இத்தகையதென இயம்ப வொண்ணாததாயிருந்தது. மனோகரனின் முகத்திற்கு ஒருவித அபூர்வமான வசீகரத்தன்மையை அளித்த அதரங்கள் புதுப் பவழம் போல் பொலிந்தன. இத்தகைய பேரெழிலும், பெருந்தன்மையும், பார்ப்பவர் உள்ளத்தைப் பறித்துச் செல்லவல்ல பழுதுபடாத அங்க அவயவங்களும்வாய்ந்த இளைஞனை பத்மா இமைகொட்டாது நோக்கினாள். அவள் இதயம் பலவகை உணர்ச்சிகளால் நிறைந்து விம்மியது; மேனி தளர்ந்தது. அவள் ஒருவித மயக்கத்தினால் தள்ளாடிக் கீழே விழுந்து விடாதபடி அருகே யிருந்த கைப்பிடிச் சுவர்மீது சிறிது நேரம் உட்கார்ந்திருந்துவிட்டு எழுந்து அரவமின்றிப் படிக்கட்டுகளின் வழியாய் இறங்கிப் பூங்காவை அடைந்தாள்.

ஃ

"மனோகரா!" என்று பத்மா அழைத்தது இளைஞன் காதுகளில் தேவகானம்போல் ஒலித்தது. அவன் கண்ணும் கருத்தும் தாமாகவே அவள் பக்கம் திரும்பின. ஒரு வன தேவதையின் கிடைப்பதற்கரிய தரிசனம் கிடைக்கப் பெற்றவன்போல் மனோகரன் சந்தோஷமடைந்தான். ஆனால், இராமேசரின் உயர் நிலையும் அளவு கடந்த செல்வாக்கும் நினைவுக்கு வரவே அவன் கலக்கமடைந்தான். அத்துடன் இராமேசரின் கருத்திருண்ட அவலக்ஷணமான முகமும், கருடப் பார்வையும் மனோகரனின் அகக்கண் முன் தோன்றிக் காட்சியளித்தால் ஸஞ்சலமுற்று அவன் இமையாத கண்களால் தரையை நோக்கியவண்ணம் அசைவற்று நின்றான்

ஃ

பத்மா "மனோகரா!" என மீண்டும் விளித்தபோதுண்டாகிய யாழினுமினிய குரலோசை அவன் சிந்தனையைக் கலைத்தது. அவன் அச்சமும் திகிலு மடைந்தவனாய்ச் சுற்றுமுற்றும் நோக்கிக்கொண்டு "யஜமான்! யஜமான்!" என்று கனவு காண்பவன்போல் மெள்ளக் கூவினான்.

ஃ

"யஜமான் எங்கே இருக்கிறார்? நெஞ்சிரக்கமற்ற மனோகரா! உனக்கேன் இவ்வளவு பயம்?" என வினவினாள் அச்சுந்தர விளங்கொடி. உடனே மனோகரன் "என்னால் ஆகாது. நான் என் வேலைகளைச் செய்து முடிக்கவேண்டும். நீயோ என் எஜமானரின் பத்தினிஸ்தானத்தை யடையப்போகிறவள். இப்போது அவர் வீட்டுக்கே வந்துவிட்டாய். அவரது வீட்டிலிருந்து கொண்டே நீயும் நானும் அவருக்குத் துரோகம் செய்வதென்பது என் பரிசுத்தமான மனதிற்கு நியாயமாகத் தோன்றவில்லை" என்று கூறியபடியே தனது ஆபீஸ் அறையை நோக்கி விரைவாக நடந்து சென்றான்.

ஃ

பத்மா மனமுடைந்தவளாய் அவன் கேட்குமாறு கூவி உரைத்தனள்: —"மனோகரா! போகவேண்டாம். அழகு வாய்ந்த நீ இப்படி விசாரத்தோடும் செல்வதழகா? நமது பழையநாள் காதல் எங்கேபோயிற்று? உன்னையன்றி இராமேசரை நான் மணந்திடேன். மணக்கவரின் திண்ணமாக உயிரிழப்பேன்."

ஃ

மனோகரன் திரும்பிப் பாராமலே சென்று தன்னறைக்குள் புகுந்து கதவை மூடிக்கொண்டான். பத்மாவின் சந்தோஷமெல்லாம் அறவே அகன்றது. அவள் மனோகரரின் அழகிய உருவம் பார்வையினின்று மறையும் வரை நோக்கிக்கொண்டிடிருந்து, பிறகு எதையோ பறிகொடுத்தவள்போல் மெல்லச் சென்றனள்.

ஃ

எங்கும் இருள் சூழ்ந்தது. இராமேசர் வீடுவந்து சேர்ந்தார். பத்மா துயரக் கடலில் மூழ்கி கரை தெரியாது தவித்தாள். இராமேசரின் மேடு பள்ளம் நிறைந்த நெற்றியும், வசீகரமற்ற பார்வையும், சுருட்டுப் புகைப் படிந்த கருத்த அதரங்களும் அவள் மனதைச் சற்றும் கவரவில்லை. ஆயினும், அவள் வெகு சாமர்த்தியத்தோடு தனது மனவெழுச்சியையும், உணர்வையும் மறைத்துக்கொண்டு முகமலர்ச்சியுடன் சிறிது மந்தஹாஸம் செய்தாள். அப்பால் போஜனம் முடிந்ததும் அவள் படுக்கையறையை அடைந்து ஆங்கிருந்த ஹம்

ஸதூலிகா மஞ்சத்தில் அமர்ந்து அச் சத்தையும், திகிலையும், குறிப்பிடும் மருண்ட பார்வையோடு சென்ற மனோகரனின் அழகிய உருவத்தை அகக்கண்ணால் நோக்கி இனியகனவு கள் காணலானாள். அவனது பேரழ கில் ஈடுபட்டு உள்ளம் குழைந்து வாய் ஊற, நா ஊற நின்ற இராமே சரும். தந்தையான கிரீசரும் அவளது முகவாட்டத்திற்குரிய காரணம் வின வ, அவள் பின்வருமாறு கூறினள்:--

ஃ

"ஐயோ! இதென்ன காரிருள்—உலகமே நிலைதவறி விட்டதுபோ லிருக்கிறதே" என்றாள். பத்மா தன் உடம்பு அசௌக்கிய முற்றிருப்பதாக முணுமுணுத்துக் கொண்டு படுக்கை யில் குப்புறப் படுத்தாள். அதனால் மனமுடைந்த ராமேசரும் பத்மாவின் பெற்றோர்களும் பெருமூச்சு விட்ட னர்.

பொழுது புலர்ந்ததும் இரா மேசர் தூக்கத்தினின்றெழுந்து காலை கடன்களை முடித்துக்கொண்டு வந்து பணி மக்களை நோக்கி, "இவ்வளவு நேரமாகியும் மனோகரன் ஏன் வர வில்லை?" என்று கோபத்தோடு வினவிவிட்டு, "இப்படி ஒழுங்குத் தப்பி நடக்க நான் சம்மதியேன்" என்றார். பிறகு பத்மாவின் மனம் உடையும்படியான சம்பவம் ஏதே னும் நிகழ்ந்ததுண்டோவெனப் பணி மக்களை விசாரித்துவிட்டு மோட்டார் வண்டியிலேறி விவசாய சாலைக்குச் சென்றார். கிரீசரும் அவர் மனைவி யும் தம் குமாரத்தியைக் கவனித்த படி யிருந்தனர்.

ஃ

இரவு முழுதும் பலவித எண் ணங்களால் மனக்குழப்ப மடைந்த மனோகரன் பொழுது புலர சில நாழி கை யிருக்கும்போது தன்னை யறியா மலே துயிலி லாழ்ந்தான். வெகு நேரத்திற்குப் பின் அவன் திடுக்கிட் டெழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு துரிதமாய் ஆபீஸுக்குப் புறப்பட்டான். வழியில் இளங்காற்று வீசியதால் அவன் மனச் சோர்வும் களைப்பும் நீங்கி உற்சாகமும் சுறுசுறு ப்பு மடைந்தவன்போல் நடித்து விரைந்து நடந்து இராமேசர் மாளி கையை நெருங்கினான். அப்போது மேன்மாடியில் ஒரு சுந்தராங்கி நின்று தன்னை உற்றுநோக்குவ தறிந் தான. அவள் இன்னாள் என்பதை மனோகரன் தனது கூரிய பார்வை யால் இனிதறிந்து கொண்டான். மென்மையும், இனிமையும், கனிவும் நிறைந்த அவளது நோக்கம் அவன் உள்ளத்தில் மின்னல்போல் பாய, அதைத் தடுப்பதற்கு அவனது ஆண் மையும் பலமும் கூடப் போதிய ஆற் றல் இலவாயின. அவன் கட்டுக் கடங்கா காதல் வயப்பட்டு விழித்த கண் விழித்தபடியே அச் சுந்தர வடி வரசியின் பேரழகு வெள்ளத்தைப் பூரண சுதந்தரத்துடன் பருகி இன் புற்றவண்ணம் நடக்கலானான்.

பத்மா பின்வருமாறு மெல்ல கூறினள். "ஆ! மனோகரனின் அழகுதான் என்னே அவனை கட்டித் தழுவ விரும்பாத நங்கையரு முண்டோ?"

மனோகரன் மாளிகையினுள் சென்று ஹாலிலிருந்த அழகிய பட மொன்றை கூர்ந்து நோக்கிக் கொண் டிருந்தான். அப்போது பத்மா மெல் லென அடிமேலடி வைத்து நடந்து வந்து அவன் பின்னால் நின்று தனது செந்தளிர்போன்ற கைகளால் அவன் தோள்களைப் பற்றினாள். உடனே மனோகரன் உடலெங்கணும் ஒருவித

இன்பானுபவ உணர்ச்சி யெழுந்தது. அவன் திடுக்கிட்டு திரும்பிப் பார்க்க, பத்மா தனது கடைக்கண் பார்வையை அவன் முகத்தில் செலுத்திய வண்ணம் நகைத்தனள். அவனும் உள்ளத்தெழுந்த இன்பத்தின் மிகுதியால் மயக்குற்று புன்னகை பூத்து நின்றான். அது கண்டு பத்மா பேரானந்தத்தோடு தலையசைத்து நகைத்துக்கொண்டு கூறினாள்:—

"மனோகரா! பயப்படாதே! அச்சமுறும் மனதிற்கு ஆனந்திக்க இயலாது. என்னிடம் உல்லாசமாய் உரையாடுவதால் உனக்கென்ன கெடுதி வரப்போகிறது? உன்னருகே குடியிருக்க வேண்டுமென்ற பேரவாவினாலேயே நான் இங்கு வந்தேன். இராமேசர் என்னை விரும்புவதற்கு முன்பே நாம் இருவரும் காதலித்து முத்தமிட்டுக் கொள்ளவில்லையா?

மனோகரன் உடல் நடுங்கக் கூறினான்:—"பத்மா! இனி நீ எனது யஜமானி-எனது யஜமானரின் கொரே குணத்தையும் மட்டற்ற செல்வாக்கையும் நான் நன்கறிவேன். உன்னருகே நெருங்க என்னால் இயலாது. தாயே! தங்களுக்கு இனி கணவனாகக் கூடியவரின் ஆதரவில் இருந்துவரும் வெறும் வேலையாள் நான்."

"அப்படியானால், மனோகரா! நீ கடந்துபோன விஷயங்களை யெல்லாம் மறந்து விட்டனையா? நீ என்னைக் காதலிக்கவில்லையா?" என்னையே விவாகம் செய்து கொள்வதாகச் சத்தியம் செய்யவில்லையா? என்று வினவினாள் பத்மா.

"முடியாது,—முடியாது, ஒரு போதும் முடியாது. நீ பிறனொருவனுக்கு உரியளாய் விட்டாய். இனி நான் உன்னை இச்சித்து ஆண்டவன் சாபத்திற்கு ஆளாகேன்." என உறுதியாய் மொழிந்துவிட்டு அப்பால் செல்லலானான்.

பத்மா நிராசையோடு கூவினள்:-"மனோகரா! என் அருகே வா! என் அஞ்சுகிறாய். உன் உருவம் என் மனதை விட்டு நீங்கவில்லை. உன் உருவம் என் மனதை விட்டு அறவே ஒரு காலத்தில் நீங்கக் கூடுமென்றும் நான் நினைக்கவில்லை. நான் உன்மேல் கொண்ட காதல் கரைகடந்தது; ஒப்புயர்வற்றது. இனியேனும் வாராயோ? மனோகரா! மனோகரா!"

அன்றிரவு இராமேசர் வீடு வந்து சேர்ந்ததும் கிரீசர் அவரை அணுகி, பத்மா திடீரென சித்தம் கலங்கி ஏதேதோ பிதற்றிக் கொண்டிருப்பதாக அறிவித்தார். உடனே அவர்பரபரப்புடன் பத்மா இருந்த அறைக்குட் புகுந்தார். அங்கு மிரட்சியுற்ற பார்வையோடு வீற்றிருந்த பத்மா இராமேசரைக் கண்டதும் வெறுப்பான பார்வையுடன் அவரை நோக்கிவிட்டுக் கலகலவென நகைத்துக்கொண்டு வெளியே ஓடி இருளில் மறைந்தனள்.(மற்றதில் முடிவு)

T. S. சங்கரலிங்கம்.

குமாரனுக்குத் தெரிந்த அனுபவம் தந்தைக்கில்லை. தந்தைக்குத் தெரிந்த அனுபவம் குமாரனுக்கில்லை. மனைவி தெரிவிப்பதற்குமுன் அந்த யோசனை கணவனின் மனதில் உண்டாவதில்லை கணவன் தெரிவித்த பிறகே மனைவியும் ஆம் ஆம் அப்படித்தான் இருக்கும் என்கிறாள். எல்லாம் தெரிந்தவருமில்லை. ஏதுமே தெரியாதவருமில்லை.

நாகானந்தம்

(463-ம் பக்கத் தொடர்ச்சி.)

III

ஜீமூதவாகனன் வித்தயுவ ராஜனை நோக்கி. "மித்ராவஸு! உன் தகப்பனார் க்ஷேமமா?" என்றான். மித்ராவஸு "க்ஷேமந்தான். அவருடைய உத்தரவாலேயே உங்களை இப்போது நான் பார்க்க வந்தேன்" என மறுமொழி கூறினான். வித்தியாதர ராஜகுமாரன் "அவருடைய உத்தரவு என்ன?" என்று வினவ. மித்ராவஸு "மலயவதி என்று பெயருடைய என் தங்கையைத் தங்களுக்கு மனைவியாக நினைத்திருப்பதாய்ச் சொன்னார். இதில் உமது சம்மதி என்ன?" என்று கேட்டான். அதைக்கேட்ட ஜீமூதவாகனன் "உங்களைப்போன்ற உத்தமர்களுடைய சம்பந்தத்தை யார் தான் விரும்பார்? ஆனால் ஓரிடத்தில் பிரவேசித்த மனதை மற்றோரிடத்தில் திருப்புவது இயலாத காரியம். ஆதலின் நான் ஏற்கனவே காதலித்த ஓர் பெண்மணியை விடுத்து உம்முடைய சகோதரியை மணக்க விரும்பவில்லை." என்றான்.

தான் கௌரி கோயிலில் கண்டு காதலித்த பெண்மணியே மலயவதி என்பதை ஜீமூதவாகனன் அறியான். அவன் தன் மனதில் தன் காதலி வேறொருவளென்றும், தன் நண்பனாகிய மித்ராவஸுவின் தங்கை வேறொருத்தியென்றும் நினைத்திருந்தான், ஆனால் விதூஷகன் உண்மையை யறிந்தவன். ஆதலின் அவன் மித்ராவஸுவைச் சமாதானப்படுத்தி யனுப்ப நினைத்து, "அப்பா மித்ராவஸு! ஜீமூதவாகனன் எப்போதும் தகப்பனாருடைய ஆதீனத்தி லிருப்பவன். தன் தந்தையின் சம்மதியின்றி அவன் எக்காரியத்தையும் எப்பொழுதும் செய்வதில்லை. ஆகையால் நீ அவரிடஞ் சென்று இச்சமாசாரத்தை யறிந்தால், அவர் மூலமாக இக்காரியம் சித்திபெறும்." என்றான். மித்ராவஸுவும் விதூஷகன் கூறியது சரியே என எண்ணி, ஜீமூதவாகனனிடம் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான்.

விதூஷகனும் ஜீமூதவாகனனும் முன்பு பேசிய வார்த்தைகளைக் கேட்டவுடனே மலயவதி தன் மனோரதம் பலிக்காதென வருந்தினளென்று முன்பே கூறினோம். பின்பு தன்னை மணக்கும் விஷயத்தில் ஜீமூதவாகனன் மித்ராவஸுவுடன் மறுத்துப் பேசியதையும் அவள் கேட்டிருந்தாள். ஆகவே அவளுடைய ஆசைகளெல்லாம் நெருப்பிலிட்ட ஆகுதி போல் மாயமாய் மறைந்தன. ஜீமூதவாகனனைப் பெறாமல் தன் உயிரைத் தரித்திருக்க அவள் விரும்பவில்லை. தன் காதலனைப் பெறும் ஆசை விபலமாயிற்றென அவள் நினைத்தவுடனே இப்பூமியில் தான் உயிருடனிருக்க அவள் ஆசைப்படவில்லை, இச்சமயத்தில் நாம் உயிர்விடத்தக்க உபா

யம் என்ன?" என அவன் யோசித்தான். "அங்குள்ள கொடிகளைத் தன் கழுத்துக்குப் பாசமாகச்செய்து, தூக்கு போட்டுக் கொள்வதே தகுதி" எனத் தீர்மானித்து, அவள் தன் இஷ்டதேவதையாகிய கௌரி தேவியை ஸ்மரித்தாள். "சரணமடைந்தோரை ஆபத்தில் காக்கும் கௌரி! முற்பிறப்பில் நான்செய்த பாபத்தின் பயனாக இப்பிறப்பில் என் காதலனைப் பெறாமல் உயிர் துறக்கின்றேன். மறுபிறப்பிலாகிலும் இப்படிப்பட்ட வருத்தம் எனக்கு உண்டாகாமலிருக்கும்படி அருள்புரிவாயாக" எனக்கூறி, ஓர் கொடியைத் தன் கழுத்தில் மாட்டிக்கொண்டாள்.

அதே சமயத்தில் சதுரிகை, "ஐயோ! காப்பாற்றுங்கள்!! காப்பாற்றுங்கள்!!!" எனக் கூச்சலிட்டாள். மன்னுயிரைத் தன்னுயிராகப் பாவிக்கும் ஜீமூதவாகனன் உடனே ஓடிவந்து பார்க்கத் தன் காதலியே அத்தசையிலிருப்பதைக் கண்டு அக்கொடியை இருதுண்டாக்கினான். சதுரிகையும் மலயவதியின் வரலாற்றை ஆதியோடந்தமாக அவனுக்கு உரைத்தனள். இராஜகுமாரன் வித்தராஜகுமாரியை அழைத்துச் சென்று, தான் சந்திரகாந்தக்கல்லில் எழுதிய சித்திரத்தைக் காண்பிக்க, அது தன் உருவாயிருந்ததைக் கண்டவுடனே மலயவதி அளவில்லாத ஆனந்தமடைந்தாள்.

சந்தனலதா கிருதத்தை விட்டுச் சென்ற மித்ராவஸு அரண்மனைக்குச் செல்லும் வழியில், ஜீமூதகேது தன் மகனைத் தேடிக்கொண்டு கௌரி தேவியின் ஆலயத்துக்கு வந்திருப்பதாகக் கேள்வியுற்றான். துரிதமாக அவன் கோயிலுக்குச் சென்று. அங்கு வித்தியாதர சக்ரவர்த்தியைச் சந்தித்துத் தன் தந்தையின் அபிப்பிராயத்தைத் தெரிவித்தான். அதைக் கேட்ட ஜீமூதகேது மிகவும் களிப்படைந்து மித்ராவஸுவுடன் அரண்மனையை அடைந்தான். தனக்குத் தக்க சம்பந்தியாகிய வித்தியாதர ராஜனை வித்தராஜன் வரவேற்று, வெகு நேரம் அவனோடு வார்த்தையாடியபின். ஓர் சேவகனைச் சந்தனலதா கிருகத்துக்கு அனுப்பி, தன் மகளையும், ஜீமூதவாகனனையும் வரச் செய்தான்.

மணவினைக்கு வேண்டிய சாமக்கிரிகள் சேர்க்கப்பட்டன. ஜீமூதகேதுவும், விச்வாவஸுவும் தங்கள் பந்துக்களை வரவேற்று விவாக மண்டபத்தில் அழைத்து வந்தனர். விவாக வேஷம் பூண்ட மணமகனும் மணமகளும் மணமண்டபத்தில் வந்து சேர்ந்தனர்.

சுபமுகூர்த்தத்தில் மங்கள வாத்தியங்கள் முழங்க, பெண்மணிகள் கர்ண மதுரமான கீதங்கள் பாட, மலயவதிக்கும் ஜீமூதவாகனனுக்கும் விவாகோற்சவத்தைப் பெரியோர்ச் செய்து முடித்தனர்.

ஜீமூதவாகனனுடைய விவாகத்துக்குப் பின் ஜீமூதகேது மலய மலையிலேயே ஓர் பர்ணசாலையை யமைத்து அதில் வசித்து வந்தான். ஜீமூதவாகனனும் பெற்றோர்களுக்கு முன்போல் பணிவிடை செய்துக்கொண்டு மலய பர்வதத்திலேயே மலயவதியுடன் இனிது காலங் கழித்து வந்தான்.

4. கருடன் வாயிலகப்பட்ட நாகம்.

காலத்தின் கதியைத் தடுக்க யாரால் முடியும்? நிமிஷங்கள் மணிகளாகவும், மணிகள் தினங்களாகவும், தினங்கள் மாதங்களாகவும்,

மாதங்கள் வருஷங்களாகவும் மாறிக் கொண்டே சென்றன. முன்பு மாட மாளிகைகளில் வசித்துப் பலவித மான உலக சுகங்களை யனுபவித்துப் பலரும் தம் வாயிற்படியை யடுத்து வரும்படியான சௌபாக்கியத்தைப் பெற்றிருந்த தனிகர்கள் இன்று தம் முடைய துர்ப்பாக்கிய வசத்தால் பொருளிழந்து, உணவுக்கும் ஏற்ற வழியின்றி இங்கு மங்கும் அலைந்து திரிந்து வருந்துகின்றனர். முன்பு உணவுக்கும் வருந்திய தரித்திரர் களோ இன்று அரசாங்கத்தில் முத ன்மையான ஸ்தானத்தைப் பெற்று உலகம் புகழ, நன்மதிப்புடன் பெறு கின்றனர். ஆ! ' உடைமையும் வறு மையும் ஒருவழி நில்லா'என்று பெரி யோர் கூறியது சரியே. (தொடரும்)

கையில் சில்லரை இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டு ஒன்றை வாங்கு.

வீட்டிற்குக் காய்கறிகள் வாங்கி வந்தபிறகு, தெருவில் முருங்கைக்காய் விற்பவன் வருகிறான். வீட்டிலிருப்பவர்கள் அது நயமாய் இருப்பதாகச் சொல்லி அரையணாவுக்கு வாங் கிவிடுகிறார்கள். பக்கத்து வீட்டாரும் வாங்குகிறார்கள். உன் னிடமோ அன்றைய செலவுக்கே இரண்டணாதான் இருக்கி றது. அதை எடுத்துக் கொடுக்கிறாய். பக்கத்து வீட்டார் அரைரூபாயைக் கொண்டுவந்து முருங்கைக்காரியிடம் சில் லரை கேட்கிறார்கள். அவள் இல்லை என்கிறாள். அவர்கள் நீ தந்த இரண்டணாவில் தாங்களும் அரையணாவுக்குக் காய் வாங்கிக்கொண்டு உனக்குப் பாக்கி ஒன்றரையணாவை தங்க ளின் அரைரூபாயை மாற்றிப் பிறகு தருவதாகச் சொல்லுகி றார்கள். உனக்கோ அந்தப் பாக்கி ஒன்றரையணா அப்போ தே தேவையாயிருப்பதால், அவர்களின் அரைரூபாயை வாங்கிச் சென்று கடைத்தெருவில் சில்லரை மாற்றி வீட் டிற்கு வந்து அவர்களுக்கு ஆறரையணா தந்துவிட்டு, நீ ஒன் றரையணா எடுத்துக்கொள்ளும்படியாகிப் பெரிய தொல்லைப் பட நேர்கிறது. இவ்வளவு பாடுபட்டு முருங்கக்காயை வாங் குவதைவிட, உன்னிடம் அரையணா இல்லாதது தெரிந்ததும் வேண்டாமென்று கூறியிருந்தால் நலமா யிருக்குமல்லவா?

இவ்வுலகம் அழியுமளவும் தாய்க்குத் தன் மக்களிடத்திலுள்ள அன்பும், மக்களாலுண்டாகும் ஆநந்தமும் வேறுபடாதென்றும், சம்சாரத்திலுள்ள துக் கங்களெல்லாம் ஒருவாறு மக்கள் முகத்தைக்கண்ட மாத்திரத்தில் நீங்குமென் றும் நினைக்கிறேன்.

விவேகம்
வினோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

உலகப்போக்கின் வேடிக்கைகள்!

I



வந்தீர்களா! என் விகடக் குஞ்சுகளே! வாருங்கள் என் கண்மணிகளே! சென்ற தடவை பாதியிலே விட்ட என் அதனப் பிரஸங்கத்தைத் தொட்டுக் கொட்டுக் கொள்கிறேன்! அதிர்ஷ்ட முள்ள கை என்ன விதமாகச் சமையல் செய்தாலும், கழுதை மூத்திரத்தையே நேர்த்தியான மிளகு ரஸம் என்று இலையிலே வார்த்தாலும் ரொம்ப ரொம்ப ருசியென்று எல்லோருமே சாப்பிட்டு, ஹா! என்ன திவ்யமான சாப்பாடு என்று சொண்டாடுவார்களாம்! அதிர்ஷ்ட மற்ற கையோ எத்தனை பிரயாசைப் பட்டு வெகு பக்குவமாகச் சமைத்து வைத்தாலும், அதற்கு மேலே மாமி யொருத்தி யிருந்து கொண்டு, அது சொத்தை, இது புளியங்காய் என்று நோட்டமும் குறைப் பேச்சும் சொல்லிப் பழிக்க ஆரம்பித்துக்கொள்வாளாம்! சாப்பிடுவதற்கு இலையில் உட்கார்ந்தவர்களும் பாயசத்திலே உப்பில்லை யென்றும், ரஸத்திலே தித்திப்பு இல்லை யென்றும், குழம்பிலே சீனி சக்கரை குறைவாயிருக்கிறதென்றும் ஆயிரம் தப்புகள் அடுக்கடுக்காகச் சொல்வார்களாம்! வெறுமனே உழைத்த கட்டையாக வேணுமே தவிர, நல்ல பேரு, உயர்வு பெறுகிற வழியே மூடிப்போய் விடுமாம்! இந்தத் தூரதிர்ஷ்டக் காரர்களுக்கு எப்போது தான் நல்ல பொழுது வருமோ தேவா என்று விகடன் பரிதபிக்கிறேன்.

ஃ

தான் என்னவோ மிக்க ஒழுங்கான புள்ளியென்று மனதிலே கர்வித்துக்கொண்டு, மற்றவனின் தவறுதலையே அதிகமாக நினைத்துப் பிரமாதம் படிக்கிற சிலருக்கு, தங்களையும் பிறர் ஆழங்கண்டு கொண்டு தங்களுடைய கோணல்களையும், இடத்துக்குத் தக்கபடி இளிக்கிற விதங்களையும், சுயநல தந்திரங்களையும் எடுத்துச் சொல்

லும்போது—ஆ! அப்பா! நம்மை இவன் முழுதும் கண்டு கொண்டு விட்டானே என்று வாயைப் பிளந்துகொண்டு கொட்டாவி விடுகிறார்கள்! ஆ! என்னைப் பற்றி அப்படி நினைக்கலாமா, இப்படியும் நினைக்கலாமா என்று எத்தனையோ சாமர்த்தியமாய் தங்களின் உள்ளத்துக் குணங்களை மறைத்துத் தீவட்டி வெளிச்சம் போட்டாலும், மற்றவர்களுடைய மாறிப்போன மனத்தைப் பிறகு இவர்களால் மாற்றுவதற்கு முடிகிறதேயில்லை. இது ஒரு உலகத்து வேடிக்கையடா அப்பா!

ஃ

"அட, அநியாயக்காரனே! ஏன் இப்படியும் பிறர் சொத்துக்கு ஆசை படுகிறாய்! நீ செய்வது பெரிய அக்கிரமம்! உனக்குமுன் இருந்தவர்கள் உன்னைப்போல் அக்கிரமம் செய்ததற்கு அவர்கள் வாழாமலே போனார்கள்! பீமனைப்போல் பெரிய தொந்தியோடு பளபளப்பாய் சிவப்பாய் இருந்த அவன் பொடுக்கென்று ஒரே நாளிலேபோய் விட்டான்! அதை நினைத்துப்பார்! அநியாயம் செய்யவேண்டாம்" என்கிறான். இப்படி எடுத்து இடித்துக் காட்டிய சுத்தி வந்தனன இவனுக்கும் இவன் வீட்டுக்குந்தான் நோய் நொடிகளும் சோதனைகளும் நஷ்டங்களும் வந்து துன்பப்படுத்துகிறதே தவிர, அந்த அநியாயக் காரனும் அவனைச் சேர்ந்தவர்களும் நாளைக்கும் சுகமாகவே கைவீசி நிற்கிறார்களப்பா! இது ஒரு பெரிய கோணல் வேடிக்கையல்லவா!

ஃ

ஒருவன் கனத்த வியாதியில் விழுந்து, உண்ணும் மருந்தும் உடம்புக்குப் பிடிக்காமல், எடுத்ததற்கெல்லாம் வாந்தியாகிப் பாயிலே இரு கால்களையும் நீட்டி விடும்போது, எத்தனையோ பழ தினுசுகளையும், மிட்டாய் பக்ஷணங்களையும் வரிசை வரிசையாக வைத்து இது தின்னப்பா, அது உண்ணப்பா, எதைச் சாப்பிடுகிறாயப்பா என்று வெகு வெகுவாய் வேண்டிக்கொண்டு ஊட்ட வருகிறார்கள்! அப்படிப்பட்ட மனுஷ்யன் குண மடைந்து விட்ட பிறகோ, அவன் எவ்வளவு கொடுத்தாலும் புசிக்கத் தயாரா யிருக்கும்போது எதுவுமே அவன் வாய்க்குக் கிடைப்பதில்லையப்பா! உண்பதற்கு சக்தியிருக்கும்போது எதுவுமே கிடைப்பதில்லை, எவரும் கொண்டு வந்து தருவதுமில்லை. எல்லோரும் சூழ்ந்துகொண்டு வேண்டியதெல்லாம் தரும்போது உண்பதற்கு சக்தியில்லை! இதுவும் ஒரு வேடிக்கை தான்!

ஃ

ராமு சோமுவைக் காணவருகிருன்! சோமு தனக்கு வந்த சில கடிதங்களை எடுத்துக்காட்டி இவைகளுக்கெல்லாம் பதில் எழுத நேரமில்லையென்ருவது, அல்லது அக்கடிதங்களின் சம்பந்தமாகத் தனது அபிப்பிராயங்களையாவது வாய் திறந்து கொட்டுகிருன். ராமு இவற்றை யெல்லாம் கேட்டுக்கொண்டுபோய், சோமுவின் பதில் கடிதத்தை எதிர் பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கு, சோமு இன்னின்ன காரணத்தால் தான் கடிதம் எழுதாமலிருக்கிருனென்று, அவன் விஷயங்களைத்தான் என்னவோ அதிகமாக அறிந்து பழகி வைத்திருப்பவன் போல் தெரிவித்து விட்டு, அதில் தனக்கு ஒரு பெருமை ஏற்பட்டு, விட்டதாகவும் எண்ணிக் கொள்கிருன்! பிறகு சோமுவுக்கு வருகிற கடிதங்களிலே, ராமு இப்படி யெல்லாம் எழுதி யிருந்தானென்று அக் கடிதம் எழுதியவர்கள் தெரிவிக்கப் போக, உடனே சோமு திடுக்கிடுகிருன்! நமது மனதிலிருந்த எண்ணங்கள் தூரத்தி லிருப்பவர்களுக்கு எப்படித் தெரிந்தது?--ஓ! அன்றைய தினம் ராமுவிடத்தில் வாய் விட்டுச் சொல்லப்போக, அதை அவன் அந்தந்த இடங்களுக்கும் எட்டச் செய்து விட்டானே என்று ஏக்க மடைகிருன்! இது தனக்கு வந்த தபால்களைப் பற்றி இன்னொரு அன்னியனிடம் வெளியிட்டுக் கொண்டதில் வந்த வினையாகும்! எவனும் தன்னிடமிருந்து எந்த சங்கதியையும் தெரிந்துகொள்ள முடியாதபடி மூடி வைக்கிற வரைக்கும் தான் மதிப்பும் பெருமையும் இருக்கும்! ஆராய்ந்து அறிந்துபோக வருகிறவனுக்கு எதுவுமே எட்டாதவடி செய்வதுதான் சாமர்த்தியம்! இப்படியும் சிலர் கண்டிப்பாக, கருப்பு மூஞ்சித்தனமாக உர் உர் என்று இருக்கிருர்களானுலும் எதிலும் ஒரு அளவு நிதானம் வேண்டுமென்பதையும் விகடன் குறிப்பாகச் சொல்லப்போகிறேன்? அதிகக் கண்டிப்பிலே அன்பின் பசை வற்றிப்போகிற தென்பதையும், கபடமும் சுய நலமும் பெருத்து விடுகிறதென்பதையும் இதோடு சேர்த்து விகடன் சொல்லவேண்டியுமிருக்கிறது!

ஃ

தாராள சிந்தை, தயாள சிந்தை, கிருபா நோக்கம், அன்பு நெஞ்சு இவற்றைக் கொண்டவர்கள் தங்களின் உட்கருத்துகளைப் பிறருக்கு வெளியிட்டாலும் அதனுல் கெட்டுப்போவ தொன்றுமில்லை. அத்தகைய உத்தம புருஷர்களைக் கெடுக்கிற புத்தியும் மற்றவர்களுக்குத் தோன்ருது. இந்த தயாளமூர்த்திகள் என்ன செய்கிருர்களென்ருல், தங்களுக்கு மற்றவர்கள் தரவேண்டிய பணத்துக்குக் கணக்கு வைக்காமல், அதைக் கேட்காமலே மறந்தும், மன்னித்தும் விட்டுவிட்டு, மற்றவர்களின் கணக்கை மட்டும் ஒரு காசு கூட மிச்சம் வைக்காமல் கொடுத்துத் தீர்த்து மேலுக்கும் எத்தனை பேர் உதவிகளைக் கால முழுதும் தங்கள் சக்திக்கு இயன்றவரை

செய்தபடியே இருக்கிறார்கள் அய்யனே! இப்படிப்பட்ட தர்ம குணவான்கள் ஆயிரம் பதினாயிரம் சம்பாதித்துக்கொண்டு மேலோங்கிய வாழ்விலே விளங்கக்கூடாதா? அதுதானே காணோம்! கடவுள் அவர்களை உயரவிடாமல் ஒரு எல்லைக்குள்ளேயே வைத்து சம்மட்டியால் அவர்களின் தலையிலே அடிக்கிறார்! எங்குமே தர்மகுணவான்கள் தான் அதிகக் கஷ்டப்படுகிறார்களல்லவா! எவ்வளவு கஷ்டம் பாடுகளிலும் அவர்களின் தர்மகுணம் மட்டும் போவதில்லை! இதுவும் ஒரு வேடிக்கைதானே!

ஃ

வீட்டுக்கு வருகிற உறவினர்களிலே விபசாரப் பேய்களும் சிலது உண்டு அய்யனே! அவர்களை வீட்டுக்காரன் கண்டு பிடித்து வீட்டு வாசற்படி ஏறாதேயென்று விலக்கினாலும், எப்படியோ மறுபடியும் உள்நுழையப் பார்க்கிறார்கள்! கைக்குழந்தைக்கு ஐந்தணாவில் ஒரு சிறு சொக்காய் தைத்து வந்து அதைக் கொடுக்க வருகிறதுபோல வீட்டுக்குள்ளே நுழைகிறார்கள்! அந்த ஐந்தணா சொக்காயை வீட்டுப் பெண்டுகள் வெகு பெருமையாக நினைத்துக் கைக்குழந்தைக்குப் போட்டு அழகு பார்த்து, அதைக் கொண்டு வந்தவளைக் கொண்டாடுகிறார்கள்! இந்தக் கபடநாடகத்தை வீட்டுக்காரன் விலகியிருந்தபடி பார்த்து இதுவும் ஒரு சமர்த்தான வேடிக்கைதான் என்கிறான்!

ஃ

தன் மாமி மீது ஜென்மப்பகை கொள்கிறது! அவளைத் தூஷிக்கிறது, கேவலப்படுத்துகிறது, அவள் வாசனையே பிடிக்கிறதில்லை! ஆனால், தன் கணவனின் மாற்றாந் தாயான தூரத்திலிருக்கிற சின்ன மாமியின்மீதோ உயிருக்குயிராக இருக்கிறது, அவள் தன் வீட்டுக்கு வந்தால் எவ்வளவோ கனத்த உபசாரங்கள் நடத்துகிறது! அவளைச் சேர்ந்தோரிடமெல்லாம் கொஞ்சுகிறது, உறவு பிடிக்கிறது! அந்த மாற்றாந்தாயும் இந்த ஏமாந்த மருமகளான சிறிக்கிக்கு குடுக்கவேண்டியவள்போல் தன்னைக் காண்பித்துக்கொண்டு பலநாளைக்கும் வந்து குந்தித் தங்கி வெகு சொந்தமுள்ளவள்போல் தூபம் போடுகிறாள்!

ஃ

நித்த நித்தம் பொழுதுவிடிகிறதற்கு முந்தியே ஒரு குட்டிக் காகத்தை எழுப்பிவிட்டுக்கொண்டு, புருஷனின் ஒரு சொல்லுக்கு முப்பத்திரண்டு விதமாக உடம்பெல்லாம் குலுக்கிக் கையைநீட்டி, வாயை ஆவென்று திறந்து, உரக்கக் கத்தி அமக்களம் செய்கிற அடங்காத பேய்ப் பெண்ணுக்கு ஆற்று ஸ்நானம் என்னவேண்டி

யிருக்கு? உள்ளே இருக்கிற புத்திகெட்ட கோணல் அழுக்குகளைக் கழுவித் தொலைத்துச் சுசிகரப்படாமல் வெளியிலே உள்ள அழுக்கை மட்டும் ஆற்றிலே கழுவிக் காலணுவுக்குப் பூ வாங்கிக் கொண்டையிலே சூட்டிக்கொண்டு கைவீசி வீட்டுக்கு வருவதிலே என்ன பிரயோஜனமோ? அடங்காத மூதேவிக்கு இந்த மஞ்சள் பூச்சும், பூவும், ஆற்று ஸ்நானமும் அழகு தந்துவிடுமா? உள்ளுக்குள் புத்தி திருந்தி ஒழுங்குபட்டாலல்லவோ குடித்தனத்துக்கு அழகுதரும்! சில குடும்பங்களிலே நடக்கிற வேடிக்கைகளிலே இதுவுமொன்று!

ஃ

தன் தாயோடு பிறந்த பெண்கள் தனக்குச் சிற்றன்னைகளாவதிலே, அவர்களின் குழந்தைகள் தனக்குச் சொந்த தங்கை தமக்கைகள்போல் அன்பு மயமாக இருக்க, தனது மாற்றாந்தாய்க்குப் பிறந்தவர்களோ—தான் எவ்வளவு அன்பு காண்பித்தாலும் அவர்கள் தூரத்தில் ஒதுங்குகிறவர்களாகவே இருப்பதைக் கண்டு வியப்புறும்படியாகிறது. மாற்றாந்தாய்க்குப் பிறந்த பெண்களைத் தனது சொந்த தங்கைகளாக எவ்வளவு நினைத்தாலும் அவர்கள் மனதில் கொஞ்சம் பேதம் வைத்தவர்களாகவே நடந்துகொள்வதும் ஒரு வேடிக்கை தான்!

ஃ

எனக்குக் காசு கொடு என்று ஒரு சிறுமி தன் தமயனையோ தந்தையையோ அதிகாரத்துடன் கேட்கையில், அவர்களுக்குள்ள கேட்கும் பாத்தியதையை அவர்கள் அறிந்து வைத்திருப்பதை நினைத்தால் அதுவும் ஒரு வேடிக்கையே! ஒருவனிடமிருந்து எவ்வளவோ உதவிகளையும் பண்டங்களையும் பெற்றுக்கொண்டு பிறகு அவனைப் பாவி மனிதன் என்று ஏசுகிறுன்! அப்பால் சிலநாள் பொறுத்து அவனிடமே ஒரு உதவிக்குக் கை நீட்டுகிறுன்! இதுவும் ஒரு வேடிக்கையே!

ஃ

ஒரு பணக்காரச் சீமான் பால் மட்டுமே பருகுகிறவர்; காபி, டீ, முதலியன தொடாதவர். அவர் விருந்தாளியாய் வரும்போதெல்லாம் வீட்டுக்காரர் இரண்டு ரூபாய் வரைக்கும் பால்வாங்கி உபசாரம் நடத்தி வந்தார். விருந்தாளியும் ஊருக்குப் போகும் போது குழந்தைகளுக்கு பணம் தருகிற வகையிலே அந்த இரண்டு ரூபாயையும் இந்த இனம் வழியில கடன் தீர்த்துக்கொண்டு போவதாக இருந்தார். பிறகு வீட்டுக்காரர் விருந்தாளியையே பால் வாங்கிக் கொள்ளும்படியும், குழந்தைகளுக்குத் தருவதைப் பால்காரனுக்குக் கொடுத்துவிடும்படியும் வேண்டிக்கொண்டார். அதிவிருந்து

விருந்தாளி தம் செலவிலேயே பாலை வாங்கிக்கொண்டு, ஊருக்குப் போகும்போதெல்லாம் குழந்தைகளிடம் ஒரு பல்லிளிப்பு இளித்து விட்டுப் புறப்படுவதானர். அவர்களுக்கு முன்பு கொடுத்துவந்த இனும் காசு பணம் எல்லாம் நின்றுவிட்டது! இதுவும் ஒரு விநோதமே!

ஃ

"நீங்கள் எங்கள் ஊருக்கு வந்து போகணுமே" என்று வெளியுபசாரமாகச் சிலர் தாங்கள்போய் வெளியூரிலே தங்கின வீட்டில் சிலருக்குச் சொல்லுவது ஒரு வேடிக்கை! சிலர் தங்களுக்கு ஆக வேண்டிய ஒரு காரியத்தைப் பற்றி எழுதுகிற கடிதத்திலே, ஒரு முறை தங்கள் ஊருக்கு வந்து போகும்படி உபசார மயக்குடன் வரைவார்கள். போகவர ஆகும் செலவுகளை நம் வீட்டிலேயே உண்டால் ஆகாதோ! மேலும், நம்மை வரும்படி யழைப்பார்கள். முன்பு நடந்துகொண்ட கோணல்களை நினைக்கும்போது அப்படி யெல்லாம் செய்தவனின் வீட்டுக்கும் போகிறதா என்று மனது கசந்துபோகிறது!

ஃ

கதை எழுதுதல் பெருத்துவிட்டதும் ஒரு வேடிக்கை! ஏதாவது ஒரு புள்ளியை, கருத்தை மனதில் வைத்துக்கொண்டு குட்டிக் கதையொன்று ஆக்கிவிடுகிறார்கள்! கணவனோடு ஒத்துவராத மனைவி செய்யும் வேடிக்கைகள் பெரிது பெரிதே சிலர் தாங்கள் முன்பு இனாமாகக் கொடுத்துவிட்ட பித்தளை சாமான்கள் முதலாகத் திருப்பித் தரும்படி நாணமற்றுக்கேட்கும் அற்பர்களாயிருக்கிறார்கள். இது பெண் கொடுத்த வீட்டார் செய்யும் வேடிக்கை! சில ஆண்பெண்களின் கண்கள் மிக்க ஆபத்தா யிருக்கின்றன. வீட்டில் ஏதாவது பக்ஷணமோ எதுவோ செய்கையால் அவர்களின் கண்ணெச்சில் பட்டுவிட்டால் அவ்வளவும் பாழாய்விடுகின்றன! தங்கள் வீட்டின் செலவுகளைக் குறைத்துக்கொள்வதற்காகப் பிறாது வீடுகளில்வந்து தங்கி மிக்க அன்பினர்போல் நடிப்பதும் ஒரு வேடிக்கை! தங்கள் கைக்குச் செலவேற்படாதபடி ஒதுங்கிப் பிறருக்கு ஒத்தாசை செய்ததுபோலவும் சிலர் காட்டிக்கொள்வார்கள்! கண்டிப்பாயிருக்கிற தகப்பனைக் குமாரன் ஏமாற்றிவிடுவதும் ஒரு வேடிக்கை! பெண்டாட்டிக்குப் புருஷன் உட்பட்டு நடப்பதா என்பது அநேக வீடுகளில் ஒரு கேள்வியாகவும் இருந்துகொண்டிருக்கிறது. இது பரஸ்பரமுள்ள ஒற்றுமையின் தன்மையைக் காட்டுகிற வேடிக்கை!

ஃ

ஊாரின் சாபம் பெரிய பெரிய பட்ட பட்ட மனிதர்களின் குடும்பங்களை ஆட்டிவைத்து அனர்த்தம் செய்வது பிற்காலத்தில் நடக்கிற வேடிக்கை, அக்கிரம சம்பாத்தியம் அழிந்துபோவது மற்றொரு வேடிக்கை! ஒருசமயத்தில் ஒரு குமித்த பந்துவுக்குச் சோறு படைக்கமாட்டேனென்று சொல்லிவிட்டுப் பிறகு என்ன தான் உருக்கமாக வட்டித்து உபசரித்தாலும், அன்றொருநாள் சொன்ன சுடுவார்த்தை இலகுவில் மறக்கடிக்கப்படுவதில்லை! இருக்கிற வேலை நிச்சயமோ, போய்விடுமோ என்கிற சந்தேக உத்யோகக் கவலை ஒரு வேடிக்கை! ஒவ்வொரு புது சேர்மனும் வரும்போது முனிசிபல் ஆபீஸ் சிப்பந்திகள் சிலருக்குச் சனியன் பிடிப்பதும் சாதாரணம்! சரசகுணமில்லாப் பெண்களைக் கட்டிக்கொண்டு வாழ்க்கை நடத்தவேண்டியிருப்பது ஒரு கன்ராவி! தான் இல்லாவிடில் ஒரு பிடி சோறு ஆர் ஆக்கிப் போடுவார்—தெருவில் அலையவேண்டுமே என்கிறாள் பெண்டாட்டி! சம்பாதித்துக்கொண்டுவருகிற புருஷன் இல்லாவிட்டால் தன் கதி என்னவென்று நினைப்பதில்லை! இப்படியே நித்தமும் காலையில் எழுந்ததும் மனைவிக்கும் புருஷனுக்கும் ஒரு சச்சரவு முளைப்பதும் ஒரு வேடிக்கை!

ஃ

தன் வாயடங்கி வாழத் தெரியாமல் தனக்கு உதவியாயுள்ள இடத்தில் பட்டி வாயைக்காட்டிப்பேசி விரோதித்துக்கொண்டு உதவாக்கட்டைகளான கேடுகெட்ட பெண்களை நேசம் பிடித்துச் சில பெண்கள் அலைவதும் ஒரு வேடிக்கை! வீட்டிலேயே தனது தொழிற்சாலையோ, ஆபீஸோ வைத்துக்கொள்பவன் வீட்டுச் சச்சரவுகளிலும் சம்பந்தப்பட்டுத் தலையிட்டுக் கவனிக்கவேண்டியதாகி வேலைகள் கெடுவதும் ஒரு வேடிக்கை! புதிதாக வித்வான்களானவர்கள் இலக்கன நடையில் கான்பதூஉம் செய்வதூஉம் என்று எழுத ஆரம்பிப்பதும் ஒரு வேண்டிக்கை! வலிந்து நெஞ்சுத் துணிவாய்ப் பெண்களின் கரங்களைப் பிடித்து வசமாக்கிக்கொள்ள நினைக்கிற சில ஆண்மக்களின் சங்கதியும் ஒரு வேடிக்கை! அதிலும் விசேஷ அழகுள்ள ஆண்மக்களின் செய்கைகள் மிக விபரீதமாய் இருப்பதும் ஒரு வேடிக்கை! அவனே ஒரு கபடன்; அந்தக் கபடத்தை இவனே நன்றாகத் தெரிந்தவன்; அப்படியிருந்தும் அவனிடம் ஏமாறாமலே கூட்டுவியாபாரம் செய்து லாபம் அடைகிற சமர்த்து காண்பிப்பதும் ஒரு வேடிக்கை! வந்தவர்களை வா என்று அழைத்து முகங்காட்டாத பெண்ணின் வீட்டுக்கு யார் செல்லுவார்? இது முகம் காட்டாமலே தந்திரமாக ஓட்டிவிடுகிற வேடிக்கை! போய்வருகிறேனென்றால், வீட்டுக்கு வந்தவர்கள் இருக்கும்படி சொல்லாமல் உடனே போய் வரும்படி சொல்லி ஒதுங்கிக்கொள்வது மனத்திலே பற்றுதலில்லாததால் உண்டாகிற வேடிக்கை! பெரிய இடங்களிலும், நம்பிக்கை

பீனங்கள், கடன்கள், மோசங்கள், ஓட்டுகள் எத்தனையோ இருப்பதும் வெளிக்கு வர ரகசிய வேடிக்கைகளாகும்!

ஃ

மருமகன் வருகிறானென்று பலவித பக்ஷணங்கள் செய்து அவன் வராமற்போக அவற்றை மகனுக்கு இட்டு வயிறு எரிவதும் ஒரு வேடிக்கை! இதிலே மகன்மீது வெறுப்புகொண்டல்ல, வீண் செலவாச்சுதே, எவருக்கு செய்தோமோ அவர்கள் வந்து உண்ணவில்லையே என்ற வருத்தந்தான்! உண்மையன்பினர் தரும் பரிசுகளின் மயக்கமும், அவற்றை வெகுவான பத்திரமாய்ப் பாதுகாத்தலும் ஒரு வேடிக்கை! நல்ல புத்தியுள்ளவரை நல்ல வாழ்வு! கெடுபுத்தி வந்ததும் கெடுங்காலமும் தோன்றிவிடுகிறது! ஒருவரின் விரோதம் வந்தாலும் அவரது உண்மைக்குணம் அறிந்துக்கொண்டதே பெரிய காரியம்! தன் வீட்டுத் துக்கத்துக்கும் சந்தோஷத்துக்கும் புறப்பட்டுவராமல் கார்டு எழுதிவிட்டவர்களுக்கு, தானும் அவர்கள் வீட்டுசாவு சந்தோஷங்களுக்கு போகாமல் ஒரு கார்டு உபசாரமாக எழுதி அனுப்பிக்க கடன் தீர்த்துக்கொள்கிறான்! எங்கேயோ கிடந்த ஒரு பிச்சாண்டி நம் வீட்டுவாசலிலே ஒதுங்கவந்தவன், பிறகு நம்பெல்லோர்மீதிலே அதிகாரம் செலுத்தப் புறப்பட்டுக் கொள்வதும் ஒரு வேடிக்கை! இனி அவன் வீட்டுக்குப் போவேனா என்கிறாள் இவள்! அவனோ இவளுக்குமேல ராங்கியாக இருக்கிறான்! தாங்கள் வருவதில் செலவு ஏற்படுகிறதென்று அவன் தெரிந்து விழித்துக்கொண்டானே என்று சில வஞ்சகர்கள் தங்குவதும் ஒரு வேடிக்கை! சிறுகுட்டி குழந்தைகளைப்போய்த் தங்கின வீட்டிலே பகைத்துக்கொண்டாலோ, அந்தச் சின்னஞ்சிறிய குட்டிகளும் குழந்தைகளும் தங்கள் பெற்றோருக்கு அவர்களை வேண்டாதவர்களாக்கிக் கலகம் காண்பித்து, அவர்கள் என்றைக்கும் வராமலே போகும்படி செய்துவிடுவதும் ஒரு வேடிக்கை! வீட்டுக்குள்ளே ஒருவனை வரவிடுவதில், அவன் வீட்டிலுள்ள பெண்ணை யடித்துக் கொண்டு கம்பிநீட்டுவதும் ஒரு வேடிக்கை! எழுதுகிற கடிதத்துக்குப் பதில் தராமல் அதில் ஒரு பெருமை காண்பித்துக்கொள்வதும் ஒரு வேடிக்கை! இருவரும் சமரஸமாகப் போய்விடுவது தன் சொந்த லாபத்துக்கு ஆபத்தென்று கலகக்காரன் நினைப்பதும் ஒரு வேடிக்கை!

ஃ

நேரில் வீதியில் கண்டும் பேசாத அகங்காரியின் சுபாசுபங்கட்கு என் போகணுமோ! வீட்டுக்கு வந்தவனை வீட்டில் உபசரிக்காமல் ஹோட்டலுக்குப் பணம் தந்து அனுப்பிவிடுவதும் ஒரு சாதுர்ய வேடிக்கை! முட்டாள்களுக்கு மத்தியிலே நன்குபடித்த விவேகி

யிருந்து நாணுவதும் ஒரு வேடிக்கை! பெரிய அந்தஸ்துக்காரனாயிருந்தும் தனது சிறிய உடம்பினால் முறட்டுத் தடியினின் முன்பு அற்பமாகப்பட்டு, அவன் அடிக்க அடிக்குப்பதில் அடிதரமுடியாமல் ஏங்குவதும் ஒரு வேடிக்கை! கொடுத்துவிட்டு, ஏன் அதைக் கொடுத்தோமென்று ஏங்குதலும், அதைப் பெற்றவர்கள் அதற்கு நன்றிவிசுவாசம் உணர்த்தாமல் போவதும், பிறகு முன்தந்தவன் அப்பால் என்றைக்கும் ஏமாறாமலே எச்சரிக்கையாய்விடுவதும் ஒரு வேடிக்கை! இன்னும் எவ்வளவோ வேடிக்கைகளை விகடன் சொல்லலாம்! சொன்னவரையில் போதுமென்று என் வாயை மூடிக்கொள்கிறேன்! மற்றவைகளை நீங்களே நுழைந்து புகுந்து திரிந்து தெரிந்து திருத்திக்கொள்ளுங்கள்! ராம்! ராம்! சுபம்! ஞு! சுவாஹா!!!

காப்பிக் கொட்டை கதை.



அறுநூறு வருஷங்களுக்கு முன் ஒரு அரபி யாத்ரீகன் ஆப்பிரிக்காவின் வட கிழக்கில்; அப்ஸீனியாவில் யாத்திரை செய்து கொண்டிருந்தான். ஒருநாள் அதிகப் பசியால் களைப்படைந்து ஒரு அடர்ந்த காட்டின் அருகில் வந்து தனக்கு உணவு சமைப்பதற்காகத் தங்கினான். அந்தக் காட்டில் பட்டுப்போயிருந்த ஒரு மரத்தை முறித்து. நெருப்புண்டாக்கி சமையல் செய்தான். நெருப் பெரியும்போது மரத்தின் கிளையில் தொங்கிக்கொண்டிருந்த காய்கள் எரிந்து ஒருவிதமான நல்ல வாசனை வீசியது. இதைக்கண்டு அவன் மிகவும் ஆச்சரியமடைந்து, பின்பு தான் சமைத்த சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு, தன்னிடம் ஒரு பாத்திரத்திலிருந்த தண்ணீரைக் குடித்தான். அந்தத் தண்ணீரும் ஒருவிதமான நல்ல ருசியும், வாசனையுமுடையதாக விருந்தது. தண்ணீர்ப் பாத்திரத்தை உள்ளே பார்வை யிட்டபோது சில கரிந்துபோன ஆலமரத்தின் விதைகள் கிடந்தன. அதன் பிறகு சில கரிந்த கொட்டைகளை எடுத்து நுணிக்கி தண்ணீரில் போட்டு சாப்பிட்டான். அது அதிக ருசியாயிருந்தது மல்லாமல், அவனுக்கு அப்போது அது கொஞ்சம் உற்சாகத்தையும் கொடுத்தது. அதனால் அவன் அம்மரத்திலுள்ள கொட்டைகளைப் போதிய மட்டில் சேகரித்துக்கொண்டு தன் தேசத்திற்கு திரும்பினான். தன் பட்டணத்திலுள்ள அதிபதிக்கு தான் கொண்டுபோன விதைகளைப் பக்குவப்படுத்தி பானம் செய்து கொடுத்தான். அவர் அதை சாப்பிட்டபின் அதிக கிளர்ச்சியையும், சந்தோஷத்தையும் கொடுத்தது. அதனால் அதற்கு "கஃவா" என்று பெயரிட்டார். அந்த அரபி வார்த்தைக்கு "பலம்" என்று பொருள் இப்போதும் அப்பெயரால் அத்தேசத்தில் வழங்கி வருகிறதாம். காப்பி என்பது இந்தப் பெயரின் திரிபென்றும், உற்சாகத்தைக் கொடுப்பதென்றும் சிலர் சொல்லுகிறார்கள்

அ. முனிஸ்வாமி பிள்ளை.
சரஸ்வதி சபைத்தலைவர்
டர்பன் நெட்டால்.

"அமிர்த குணபோதினி"

ஸ்ரீமுக ஹஸ்த்திய மார்கழி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியனவை.
		டிஸம்பர் (சாப) 5—20		[பூஜாரம்பம், சிவராத்திரி, விருத்தியர்க்கம்.
சி	1)	1	வெ	திர-22-59, விசா-11-21, சாபரவி 8-50 தனுர்மாஸ
சி	6	2	சனி	சசி-14-10, அநு-4-33, உப-52-31, அநுஷமசுபம்,
				ஆயுதப்பிரயோகம்.] [மாடு வாங்க
அ-சி	17	3	ஞா	● 4-44, உப-50-25, மூல-49-19, புஷ்ய சுத்தம்,
உ-ம	18	4	திங்	துவி-46-0, பூரா-41-59, சந்திர தரிசனம்.
பி-சி	19	5	செ	திரி-37-38, உரா-35-20, தான்யஞ் சிலவிட.
சி-பி	20	6	புத	சது-30-26, ஸ்ரூவ-29-55, கரிநாள்.
சி-ம	21	7	வியா	பஞ்-24-41, அவி-25-54, ஷஷ்டி-சதயம்-அசுபம்.
சி	22	8	வெ	ஷஷ்-20-36, சத-23-32, திதி துவயம், ஷஷ்டி.
ம-சி	23	9	சனி	ஸப்-17-23, பூட்-23-1, ஸப்தமி அசுபம் கரிநாள்.
அ	24	10	ஞா	அஷ்-17-58, உட்-24-14, தாத்ரீ கௌரீ விரதம்.
சி	25	11	திங்	நவ-19-16, ரே-27-5 கரிநாள், நவமி மாடுவாங்க
சி	26	12	செ	தச-22-4, அசு-31-19, தசமி அசுபம், மருந்துண்ண,
சி-அ	27	13	புத	ஏகா-26-4, பர-36-40, வைகுண்ட ஏகாதசி.
ம-உ	28	14	வியா	துவா-31-4, கிரு-42-55, கிருத்திகா விரதம்.
ம-சி	29	15	வெ	திர-36-48, ரோ-49-51, பிரதோஷம், கதிரறுக்க.
சி	30	16	சனி	சசி-42-53, மிரு-57-2, தான்யஞ் சிலவிட.
சி	31	17	ஞா	○ 49-29, ஆரு-60-0, ஆருத்திராபிஷேகம், மயிலை
				திருவான்மியூர் திருவொற்றியூர் ஆருத்திரா தரிசி
ம-அ	1	18	திங்	பிர-56-2, ஆரு-4-43, புஷ்ய பகுளம் ,, [னம்.
சி	2	19	செ	துவி-60-0, புந-12-18,
				எருவிட.
சி	3	20	புத	துவி-2-30, பூச-19-37,
				துவிதியை அசுபம்.
சி-அ	ஜனவரி 4	21	வியா	திரி-8-27, ஆயி 26-40
				ஆயுதப் பிரயோகம்.
ம சி	5	22	வெ	சது-13-38, மக-32-34
				மாடுவாங்க.
சி-உ	6	23	சனி	பஞ்-17-41, பூர-37-26,
				சித்திரமெழுத. [அசுபம்.
அ	7	24	ஞா	ஷஷ்-20-18, உத்-40-53, அதிதி, ஸப்தமி
சி-பி	8	25	திங்	ஸப்-21-12, ஹஸ்-42-33, விதைக்க.
சி	9	26	செ	அஷ்-20-12, சித்-42-26, திதி துவயம், அஷ்டகை.
சி	10	27	புத	நவ-17-17, ஸ்வா-40-21, கார்போட்ட முடிவு;
				கூடாரவல்லி, மருந்துண்ண.
சி	11	28	வியா	தச-12-31, விசா-36-31, வியாதிஸ்தர் குளிக்க.
சி-ம	12	29	வெ	ஏகா-6-11, உப-52-19, அநு-31-14, ஸர்வ ஏகாதசி
சி	13	30	சனி	திர-49-44, கேட்-24-49, போகிபண்டிகை,

	15உ-க்கு ராசி		கேது
சனி ரா சுக்			
குஜ	புத ரவி		குரு

"அமிர்த குணபோதினி" பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.